விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 ஆவணி 01 செவ்வாய்க்கிழமை (18.08.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 242

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005




இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

# வடக்கில் த.தே.கூவுக்கு அமோக வெற்றி வாய்ப்பு

## தெற்கில் ஐ.தே.க. முன்னிலை

(கொழும்பு)

இன்று அதிகாலைவரை எண்ணப்பட்ட தபால்மூல வாக்குகளின்படி வடக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னிலை வகிக்கிறது. தெற்கில் ஐக்கிய தேசியக் கட்சி முன்னிலையில் காணப்படுகின்றது. நாடாளுமன்றத் தேர்தல் நேற்று நடைபெற்றது. இதன் வாக்குகள் எண்ணும் பணிகள் நேற்றிரவு 8 மணியளவில் ஆரம்பிக்கப்பட்டன. யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் வாக்கு எண்ணும் பணிகள் யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெற்று வருகின்றன. (23ஆம் பக்கம் பார்க்க)




## வாக்குச் சீட்டை படமெடுத்தவர் கைது!


(கொழும்பு)

நேற்று நடந்த வாக்களிப்பின் போது தனது வாக்குச் சீட்டை சட்ட விரோதமான முறையில் புகைப்படம் எடுத்த ஒருவரை கைது செய்துள்ளதாக வென்னப்புவ பொலிஸார் தெரிவித்தனர். வென்னப்புவ லுனவில 23ஆம் பக்கம் பார்க்க...

## அமைதியாக நடைபெற்ற தேர்தல் யாழில் 60 வீத வாக்குப்பதிவு

(யாழ்ப்பாணம்)

மநாட்டின் பாராளுமன்ற தேர்தல் யாழ்.தேர்தல் மாவட் டத்தில் வன்முறைகள் எவை யுமில்லாமல் சுமுகமான முறையில் இடம்பெற்றுள்ள நிலையில் யாழ்.மாவட்டத்தில் 60 வீத வாக்குப்பதிவும், கிளிநொச்சி மாவட்டத்தில் 70 வீத வாக்குப்பதிவும் இடம் பெற்றுள்ளதாக யாழ்.தெரிவத்தாட்சி அலுவலர் என்.வேதநாயகன் தெரிவித்துள்ளார். 24ஆம் பக்கம் பார்க்க....



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொலநறுவை புதிய நகரத்தில் அமைந்திருக்கும் ஸ்ரீ வித்தியலோக விஹாரையில் அமைந்துள்ள வாக்களிப்பு நிலையத்துக்கு நேற்று பிற்பகல் 2 மணியளவில் விஜயம் செய்து பாராளுமன்றத் தேர்தல் 2015 ற்கான தன்னுடைய வாக்கினை பதிவு செய்தார். ஜனாதிபதியினுடைய பாரியார் ஜயந்தி சிறிசேன மற்றும் பிள்ளைகள் சகிதம் வாக்களிப்பு நிலையத்துக்கு விஜயம் செய்த ஜனாதிபதி அங்கு வாக்களிக்க வந்திருந்த பொதுமக்களுடன் நட்புடன் கலந்துரையாடினார். முன்னதாக விஹாரைக்குச் சென்ற ஜனாதிபதி ஆன்மிக வழிபாடுகளிலும் ஈடுபட்டார்.

## தேர்தல் குறித்து திருப்தி

### பல்வேறு தரப்பினரும் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

பாராளுமன்ற தேர்தல் குறித்து அனைத்துத் தரப்பினரும் திருப்தி அடைந்துள்ளதாக அறிவித்துள்ளனர்.

பாராளுமன்ற தேர்தல்கள் இடம்பெற்ற விதம் குறித்து தான் திருப்தியடைந்துள்ளதாக தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

முன்னர் நடைபெற்ற தேர்தல்களைவிட நேற்று நடைபெற்ற தேர்தல் அமைதியான முறையில் நடைபெற்றுள்ளது, பாரிய சம்பவங்கள் எதுவும் இடம்பெறாதது குறித்து நான் மகிழ்ச்சியடைந்துள்ளேன். தேர்தல்கள் முடிவடைவதற்கு ஒரு சில மணி நேரத்துக்கு முன்னர் எங்களுக்கு சில முறைப்பாடுகள் கிடைத்தன. 23ஆம் பக்கம் பார்க்க....

## செப்ரெம்பர் மாதமே புதிய பாராளுமன்றம்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாராளுமன்றைக் கலைத்தமை தொடர்பில் வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய, எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதியே மறுபடியும் பாராளுமன்றம கூடவேண்டியுள்ளது.

இந்நிலையில், நடந்து முடிந்த பொதுத் தேர்தலூடாக புதிதாக தெரிவாகும் உறுப்பினர்கள் எதிர்வரும் செப்ரெம்பர் முதலாம் திகதியே சத்தியப் பிரமாணம் செய்ய வேண்டியுள்ளது.

ஆக, அரசியல் யாப்பின் பிரகாரம், நாட்டின் பிரதமரும் முதலில் ஒரு பாராளுமன்ற உறுப்பினராகவே சத்தியப் பிரமாணம் செய்துகொள்ள வேண்டிய கட்டாயத்தின் அடிப்படையில், புதிய பிரதமரும் எதிர்வரும் செப்ரெம்பர் முதலாம் திகதி அல்லது அதற்கு பிந்திய தினமொன்றிலேயே சத்தியப் பிரமாணம் செய்து கொள்ளும் வாய்ப்புள்ளதாக சட்ட அறிஞர்கள் தெரிவிக்கின்றனர். (எ-11)

## வாக்களிப்பு வீதங்கள்

தேர்தல் வாக்களிப்பு நடவடிக்கைகள் நேற்று மாலை 4 மணியுடன் நிறைவுக்கு வந்தன.

இந்நிலையில் நாடளாவியரீதியில சராசரியாக 65 வீத வாக்களிப்பு இடம பெற்றுள்ளதாக கூறப்பட்டது. மாவட்டரீதியாக பின்வரும் வீத அடிபபடையில் வாக்குப்பதிவு இடம்பெற்றுள்ளது. யாழ்ப்பாணம் - 60 %, வன்னி - மன்னார் - 70 %, மட்டக்களப்பு - 60%, திருகோணமலை - 75%, திகாமடுல்ல - 65%, கொழும்பு - 65%, கம்பஹா - 70%, கண்டி - 75%, மாத்தளை - 70%, நுவ ரெலியா - 70%, களுத்துறை - 65%, காலி - 70%, மாத்தறை - 70%, புத்தளம் - 66.5%, குருநாகல் - 68%, பதுளை - 70%, மொனராகலை - 65%, இரத்தினபுரி - 70-75%, அநுராதபுரம் - 65-70%, கேகாலை - 70-75% (எ-11)

## சி.சு.க மத்திய குழு உறுப்பினர்கள் 25 பேரை நீக்கினார் ஜனாதிபதி

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுவில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களில் 25 பேர், அக்குழுவிலிருந்து வெளியேற்றப்பட்டு, அந்த பதவிகளுக்கு புதிதாக 25 பேர் நியமிக்கப்பட்டுள்ளதாக அந்தக்கட்சியின் தலைவரும் ஜனாதிபதியுமான மைத்ரி பால சிறிசேனவின் செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவர் என்கிற முறையில் தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி மைத்ரிபால சிறிசேன இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு நிறைவடைந்ததும் வெளியிடப்பட்டிருக்கும் இந்த அறிவிப்பின்படி 23ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தபால் மூல வாக்களிப்பு முடிவுகள்

### யாழ்ப்பாணம்

| | | |
|---|---|---|
| த.தே.கூ | - | 10,087 |
| ஐ.தே.க | - | 1,472 |
| அ.இ.த.க | - | 1,398 |
| ஈ.பி.டி.பி | - | 1,233 |
| ஐ.ம.சு.கூ | - | 591 |
| வாக்களிக்கப்பட்டவை | | 9,544 |
| செல்லுபடியானவை | | 9,458 |
| நிராகரிக்கப்பட்டவை | | 86 |

### மட்டக்களப்பு

| | | |
|---|---|---|
| த.தே.கூ | - | 6,056 |
| மு.கா | - | 1,390 |
| ஐ.தே.க | - | 1,101 |
| வாக்களிக்கப்பட்டவை | | 9,544 |
| செல்லுபடியானவை | | 9,458 |
| நிராகரிக்கப்பட்டவை | | 86 |

### திருகோணமலை

| | | |
|---|---|---|
| ஐ.தே.க | - | 5,215 |
| ஐ.ம.சு.கூ | - | 2,894 |
| த.தே.கூ | - | 2,099 |
| வாக்களிக்கப்பட்டவை | | 10,823 |
| செல்லுபடியானவை | | 10,688 |
| நிராகரிக்கப்பட்டவை | | 137 |

### அம்பாந்தோட்டை

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.கூ | - | 8,441 |
| ஐ.தே.க | - | 5,955 |
| ஜே.வி.பி | - | 2,401 |
| வாக்களிக்கப்பட்டவை | | 17,199 |
| செல்லுபடியானவை | | 16,914 |
| நிராகரிக்கப்பட்டவை | | 285 |

### கண்டி

| | | |
|---|---|---|
| ஐ.தே.க | - | 15,678 |
| ஐ.ம.சு.கூ | - | 5,324 |
| ஜே.வி.பி | - | 2,141 |
| வாக்களிக்கப்பட்டவை | | 0000 |
| செல்லுபடியானவை | | 0000 |
| நிராகரிக்கப்பட்டவை | | 0000 |

### பொலநறுவை

| | | |
|---|---|---|
| ஐ.தே.க | - | 8,454 |
| ஐ.மு.சு.கூ | - | 5,031 |
| ஜே.வி.பி | - | 1,173 |
| வாக்களிக்கப்பட்டவை | | 15,160 |
| செல்லுபடியானவை | | 14,716 |
| நிராகரிக்கப்பட்டவை | | 444 |

### காலி

| | | |
|---|---|---|
| ஐ.தே.க | - | 15,501 |
| ஐ.ம.சு.கூ | - | 12,839 |
| ஜே.வி.பி | - | 3,465 |
| வாக்களிக்கப்பட்டவை | | 32,670 |
| செல்லுபடியானவை | | 32,256 |
| நிராகரிக்கப்பட்டவை | | 414 |

### இரத்தினபுரி

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.கூ | - | 11,367 |
| ஐ.தே.க | - | 9,673 |
| ஜே.வி.பி | - | 1,808 |
| வாக்களிக்கப்பட்டவை | | 23,383 |
| செல்லுபடியானவை | | 22,982 |
| நிராகரிக்கப்பட்டவை | | 401 |

### புத்தளம்

| | | |
|---|---|---|
| ஐ.தே.க | - | 4,503 |
| ஐ.ம.சு.கூ | - | 4,192 |
| ஜே.வி.பி | - | 653 |
| வாக்களிக்கப்பட்டவை | | 15,160 |
| செல்லுபடியானவை | | 14,716 |
| நிராகரிக்கப்பட்டவை | | 444 |

### மாத்தளை

| | | |
|---|---|---|
| ஐ.தே.க | - | 8,627 |
| ஐ.ம.சு.கூ | - | 7,890 |
| ஜே.வி.பி | - | 1,253 |
| வாக்களிக்கப்பட்டவை | | |
| செல்லுபடியானவை | | |
| நிராகரிக்கப்பட்டவை | | |

### சாவகச்சேரி (தொகுதி)

| | | |
|---|---|---|
| த.தே.கூ | - | 20,188 |
| ஐ.தே.க | - | 1,682 |
| ஐ.ம.சு.கூ | - | 1,591 |
| ஈ.பி.டி.பி | - | 1,469 |
| அ.இ.த.க | - | 766 |
| வாக்களிக்கப்பட்டவை | | 9,544 |
| செல்லுபடியானவை | | 9,458 |
| நிராகரிக்கப்பட்டவை | | 86 |

### உடுப்பிட்டி (தொகுதி)

| | | | |
|---|---|---|---|
| த.தே.கூ | - | 12,650 | 65.53% |
| ஐ.மு.சு.கூ | - | 2,192 | 11.36% |
| அ.இ.த.க | - | 1,606 | 8.32% |
| ஈ.பி.டி.பி | - | 1,037 | 5.37% |
| ஐ.தே.க | - | 925 | 4.97% |
| த.வி.கூ | - | 80 | 0.41% |
| வாக்களிக்கப்பட்டவை | | 21,138 | 53.92% |
| செல்லுபடியானவை | | 19,303 | 91.32% |
| நிராகரிக்கப்பட்டவை | | 1,835 | 8.68% |

## தேர்தல் முடிவுகள் - 2015

✹ கிளிநொச்சி தொகுதி இதுவரையில் கிடைக்கப் பெற்ற முடிவுகள்:
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - 38,155
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி - 6,417
ஐக்கிய தேசியக் கட்சி - 1,646
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி - 1,285
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி- 532

✹ வன்னி தேர்தல் மாவட்டூத்தின் மன்னார் மாவட்டத்தின் 1 ஆம், 2 ஆம், 5 ஆம், 7 ஆம் வாக்கெண்ணும் அறை முடிவுகள் :
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - 16,357
ஐக்கிய தேசியக் கட்சி - 7,451
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி - 2,575
சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் - 612

✹ யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தின் தபால்மூலம் வாக்குள்
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - 10,087
ஐக்கிய தேசியக் கட்சி - 1,472
அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் - 1,398
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி - 1,233
ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு -591

✹ வன்னி தேர்தல் மாவட்டத்தின் மன்னார் மாவட்டத்தின் 5 ஆம் மற்றும் 7 ஆம் வாக்கெண்ணும் அறை முடிவுகள் :
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - 8,611
ஐக்கிய தேசியக் கட்சி - 2,553
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி - 702
சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் - 262

இவை முற்கொண்டு கிடைக்கப் பெற்ற பெறுபேறுகள். (எ-11)

## இலங்கையர்கள் மூவருக்கு சிரச்சேதம்

(ரியாத்)

சவூதி அரேபியாவில் நேற்று திங்கட்கிழமை மூன்று இலங்கையர்களுக்கு சிரச்சேதம் செய்யப்பட்டு மரண தண்டனை நிறைவேற்றப் பட்டுள்ளதாக அந்த நாட்டின் உட்துறை அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது.

சவூதி அரேபியாவைச் சேர்ந்த ஒருவரைக கொலை செய்து கொள்ளையடித்த குற்றத்துக்காகவே இலங்கையர்களுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

வீடு ஒன்றை உடைத்து நுழைந்த இவர்கள், அங்கிருந்தவரைத் தலையில் அடித்துக் கொலை செய்ததுடன், அங்கிருந்த பணத்தைக் கொள்ளையிட்டதாகவும், சவூதி அரேபிய உட்துறை அமைச்சு தெரிவித்துள்ள்ளது.

இவர்கள் மூவருக் கும், செங்கடல நகரான ஜெட்டாவில் வைத்து சிரச்சேதம் செய்யப்பட்டு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள் ளது. (எ-11)


## வேலையாட்கள் தேவை

லைடன் புடைவை நிலையத்திறகு 3 வேலையாட்கள்தேவை. பழக விரும்புவர்களும் விரும்பத்தக்கது. (பெண் பிள்ளைகள்) கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

**லைடன் புடைவை நிலையம், 410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**


## மதுபான கடைகளுக்கு இரண்டுநாள் விடுமுறை

(கொழும்பு)

மதுபான கடைகள் மேலும் இரண்டு நாட்களுக்கு மூடப்படவுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு நேற்றைய தினம் நாடு முழுவதிலும் உள்ள மதுபான கடைகள் மூடப்பட்டன.

இன்றும் நாளையும் மதுபான கடைகள் மூடப்படவுள்ளதாக கலால் திணைக்களம் அறிவித்துள்ளது.

தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப் பிரியவின் கோரிக்கைக்கு அமைய இவ்வாறு மதுபான கடைகள் மூடப்படவுள்ளது.

இதன்படி தேர்தலை முன்னிட்டு மூன்று நாட்கள் நாடு முழுவதிலும் மதுபானகடைகள்மூடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## திருவெண்காட்டில் கொடியேற்றம்

(மண்டைதீவு)

மண்டைதீவு திருவெண்காட்டுச் சித்தி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை மறுதினம் 20-ம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

மகோற்சவத்தையொட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கணபதி ஹேமம் இடம்பெறும். (ந)

## ஊடகவியலாளர்கள் ஐந்து பேர் கைது

(கொழும்பு)

மாத்தறை வாக்களிப்பு நிலையம ஒன்றில் ஊடகவியலாளர்கள் ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னாள் அமைச்சர் டலஸ் அழகப் பெரும வாக்களிப்பதை புகைப் படம் எடுக்கச் சென்ற ஊடகவியலாளர்களே இவ்வாறு கைது செய்யப் பட்டுள்ளனர்.

இவ் வாறு வாக்களிப்பு நிலையம் ஒன்றில் கைது செய்யப்பட்ட ஐந்து ஊடகவியலாளர்களும், பொலிஸாரினால எச்சரிக்கப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக் கின்றன.

(எ-11)

## நன்றி நவிலலும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

### அமரர் சந்திரசேகரம் நவரத்தினசிகாமணி அம்மாள்

(சறோசா)



தோற்றம் 04-02-1934 | மறைவு 20-07-2015

கடந்த 20-07-2015 அன்று இறைபதமடைந்த எமது அன்புத்தாய் அவர்களது ஆற்றொணாப் பிரிவின் போது எம்முடன் பல வழிகளிலும் பங்கு கொண்ட அனைத்து உள்ளங்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு நாளை (19-08-2015) புதன்கிழமை அதிகாலை 6 மணியளவில் கீரிமலையில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதியம் 12 மணியளவில் வீட்டில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை, சபிண்டீகரண நிகழ்வு மற்றும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

புனிதநகர்,
கற்கோவளம்,
பருத்தித்துறை.

C-1832

தகவல்:
கணவர், பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்
பூட்டப்பிள்ளைகள்.
T.P - 0778954738 (சாந்தன்)


## சமையல் உதவியாளர் (Kitchen Helper) தேவை

**யாழ் நகரின் மத்தியில் அமைந்துள்ள முதல்தர Hotelக்கு அனுபவம் மிக்க சமையல் உதவியாளர் தேவை.**

தொடர்புகளுக்கு :
E-mail :- tilko.tilak@gmail.com
T.P :- 0777696443

Tilko Jaffna City Hotels (Pvt)Ltd
No. 70/6, K.K.S Road,
Jaffna.

(1515)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்த மீறல்கள் குறித்து முழுமையான விசாரணை

(கொழும்பு)

**இலங்கை நாடாளுமன்ற தேர்தலின் முடிவுகள் உள்நாட்டு போரின் போது நடைபெற்ற யுத்த மீறல்கள் குறித்தான முழுமையான விசாரணைகளுக்கு புதிய கதவுகளை திறக்கும் என்ற எதிர்ப்பார்ப்பு ஏற்படுத்தியுள்ளதென வெளிநாட்டு இணையத் தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்த உள்நாட்டு போரில் பலரும் கொல்லப்பட்டனர். மேலும் பலர் காணாமற் போயினர்.

அவர்களது புகைப்படங்களை மட்டுமே வைத்துக் கொண்டு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை சேர்ந்த அவர்களது குடும்பத்தினர் நம்பிக்கையுடன் காத்து கிடக்கின்றனர்.

ஏறக்குறைய ஐந்தில் ஒரு பங்கு குடும்பத்தினர் தங்களின் உறவுகளை தொலைத்து தேடி அலைவதாக கூறப்படுகிறது.

இந்நிலையில் தற்போது இலங்கையில் நடைபெறும் தேர்தலின் முடிவுகள் மூலம் தங்களுக்கு நன்மை கிடைக்கும் என்று காணாமற்போன வர்களின் குடும்பத்தினர் எதிர்ப்பார்ப்புடன் காத்திருக்கின்றனர்.

இதேவேளை காணாமற் போனவர்கள் குறித்து முழுமையான விசாரணை நடத்துவதற்கு ஜனாதிபதி ஆலோசனைகள் நடத்திவருவதாக சில அரசு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

யுத்தத்தின் போது நடைபெற்ற குற்றங்கள் குறித்தான ஐ.நாவின் மனித உரிமைகள் அமைப்பின் அறிக்கைகள் விரைவில் வெளியாகவுள்ளன. அதன் பிரதி இம்மாதத்தின் இறுதியில் இலங்கை அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்படும் என்றும் கூறப்படுகிறது.

மைத்திரிபால சிறிசேன அரசாங்கமானது காணாமற் போனவர்கள் தொடர்பான விடயத்தில் நேர்மையாக செயற்படுவார் என்று பாதிக்கப்பட்ட மக்கள் நம்பிக்கை மற்றும் எதிர்பார்ப்புடன் காத்திருக்கின்றனர் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

## புகலிடக் கோரிக்கையாளர்கள் இலங்கைக்கு திரும்ப வேண்டும்

சுவிட்சர்லாந்தில் அடைக்கலம் கோரியுள்ள இலங்கையர்கள் நாட்டுக்கு திரும்ப வேண்டும் என்று அந்த நாட்டின் முக்கிய அரசியல்வாதி கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கையில் அமைதி நிலவுவதாக சுட்டிக்காட்டியே அவர் இந்தக் கோரிக் கையை விடுத்துள்ளார்.

நாட்டில் இருந்து தப்பிவந்தவர்களுக்கு சுவிட்சர்லாந்து தற்காலிக புகலிடம் வழங்கியது.

எனவே அவர்கள் மீண்டும் தமது நாட்டுக்கு செல்வது தொடர்பில் மீள சிந்திக்க வேண்டும் என்று சுவிட்சர்லாந்தின் வலதுசாரி எப்டிபியின் தலைவர் பிலிப் மியூலெர் கேட்டுள்ளார்.

போரினால் மக்கள் இடம் பெயர்ந்த போதும் நாட்டில் இயல்புநிலை ஏற்பட்ட பின்னர் அவர்கள் திரும்பிசெல்ல வேண்டும் என்பதே முக்கியமானதாகும்.

இந்த நிலையில் பொருளாதாரத்தை கருத்திற் கொண்டு ஒரு நாட்டுக்குள் வருவது நிராகரிக்கப்பட வேண்டும் என்று மியூலெர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இலங்கையில் 2009 ஆம் ஆண்டு உள்நாட்டுப்போர் நிறைவடைந்ததாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## இலங்கை மீனவர்கள் ஐந்து பேர் விடுதலை

(யாழ்ப்பாணம்)

இந்திய கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்த குற்றச்சாட்டில் கடந்த ஜூன் மாதம் கைதான இலங்கை மீனவர்கள் ஐவர், கடந்த வெள்ளிக்கிழமை காங்கேசன் துறையை வந்தடைந்துள்ளதாக காங்கேசன்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

விடுவிக்கப்பட்ட ஐவரும் புத்தளம் மற்றும் மாத்தறை பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த மீனவர்கள் ஐவரையும் பொறுப்பேற்றுக்கொண்ட யாழ்.கடற்றொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகள், அவர்களுக்குரிய உதவிகளை வழங்கி, அவர்களுடைய இடங்களுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

ஐவரும் கடந்த ஜூன் மாதம் இராமேஸ்வரம் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு தமிழக சிறையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். (இ-7)

## வேட்பாளர் ஒருவரின் சகோதரர்கள் கைது

(கொழும்பு)

வாக்களிப்பு நிலையத்திற்கு அருகில் வேட்பாளர் ஒருவரின் இலக்கம் மற்றும் சின்னங்களுடன் கூடிய அட்டைகளை பகிர்ந்து கொடுத்து கொண்டிருந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ரம்புக்கன பிரதேச வாக்களிப்பு நிலையம் ஒன்றின் அருகிலே இவ்வாறு அட்டைகள் பகிரப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 8 மணியளவில் கைது செய்யப்பட்ட இருவரும் வேட்பாளர் ஒருவரின் சகோதரர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன் போது மோட்டார் வாகனம் ஒன்று மற்றும் சிறிய அட்டைகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை, சந்தேக நபர்களை கேகாலை நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (இ-7)

## ஹிஸ்புல்லாவின் ஆதரவாளர்கள்மீது காத்தான்குடியில் வைத்துத்தாக்குதல்

மட்டக்களப்பு, காத்தான்குடியில் நேற்று திங்கட்கிழமை கட்சியொன்றின் ஆதரவாளர்கள் இருவர் தாக்குதலுக்குள்ளான நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வேட்பாளரான முன்னாள் பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்வின் ஆதரவாளர்களே தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர். இந்த ஆதரவாளர்கள் தாக்குதலுக்குள்ளானமை தொடர்பில் காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். தாக்குதலுக்குள்ளான இருவரும் காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர் இந்தச் சம்பவம் தொடர்பில் காத்தான்குடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

## மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 08 | 15 |
| 03 | 08 |
| 1949 | 2015 |



### அமரர் வேலுப்பிள்ளை இராஜசேகரம்

மண்டைதீவு 8 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்.கந்தர்மடம், கொழும்பு பம்பலப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை இராஜசேகரம் (பாலு) கடந்த 15.08.2015 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கதிரவேலுப்பிள்ளை முத்தம்மா தம்பதியரின் மருமகனும் புஸ்பமலரின் (கிளி) அன்புக் கணவரும் காலஞ்சென்ற ரூபதாமணியின் தந்தையும் காலஞ்சென்ற நவரட்ணராஜா (ஓய்வு பெற்ற எலக்ரிக்கல் என்ஜினியர், யாழ். மாநகரசபை), பரராஜசிங்கம் (வவுனியா), வசந்தமலர் (பிரான்ஸ்) ஆகியோரின் உடன் பிறந்த சகோதரனும் சபாமணி, ஸ்ரீகாந்தா, யோகேஸ்வரன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற தர்மராஜா மற்றும் குகேஸ்வரராஜா, பாலேந்திரராஜா, சௌந்தரராஜா, கோணேஸ்வரராஜா, இரவீந்திரராஜா ஆகியோரின் மைத்துனருமாவார்.

ராஜ்குமார், Dr.இந்திரநாத், காயத்திரி, தினேஸ்குமார், சதீஸ்குமார், சுரேஸ்குமார் ஆகியோரின் சித்தப்பாவும் தேவா, Dr.கவிதா, சிவகணேசன், சுகிர்தா, சுதாமதி, நவீனன், Dr. கிருசாந்தி, திரஜாபன், நிமேஸ், உமேஸ், தியானா, இரம்யா, தர்மிகன், கஜந்தன், கஜந்தினி, யோகதர்மினி, யோகதர்சினி, ஜதுசன், சத்தியன், நிர்ஜா, கீர்த்தனா, கபில்ராஜ் ஆகியோரின் அன்பு மாமனும்

தயானி, சச்சின், ஜோதனா, விஜய் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் 17,18 ஆம் திகதிகளில் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையிலும் 19 ஆம் திகதி அவரது இல்லத்திலும் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 20.08.2015 வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரது 4A, அரச தொடர்மாடி, பம்பலப்பிட்டி இல்லத்தில் கிரியைகள் நடைபெற்று பொரளை கனத்தை இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கொழும்பு
பம்பலப்பிட்டி (சி-1830)
தகவல்: குடும்பத்தினர்
தொ.பே: 011 258 8167

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லம்மா சின்னத்தம்பி



மயிலிட்டியை பிறப்பிடமாகவும் மதவடி ஒழுங்கை, சுதுமலை வடக்கை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி **செல்லம்மா சின்னத்தம்பி** 15-08-2015 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி ( முன்னாள், ஊழியர் சீமெந்து தொழிற்சாலை, காங்கேசன்துறை) அவர்களின் பாசமிகு மனைவியும்

காலஞ்சென்ற கந்தையா அருமைப்பிள்ளையின் மகளும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, செல்லாச்சி, இராசரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும்

யோகநாதன் (கனடா), க.ராகினி ஆகியோரின் அன்புத் தாயாரும், கஜேந்திரன், வசி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், அமரர் தர்சினி மற்றும் நிஷாந்தன், பபிஷான், கேஷனி, சாம், ஜெய்தா (கனடா) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 19.08.2015 புதன்கிழமை காலை 9 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

மதவடி ஒழுங்கை
சுதுமலை வடக்கு, சுதுமலை.
(C-1828)

தகவல்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

**ஆன்மீகம் 256**

## அஹங்காரத்தை விடுதல்

...செயற்படும் நிலையிலுள்ள அஹங்காரத்தைக் கண்டு கொள்வது சுலபம். செயற்படும் நிலையில் உள்ள அஹங்காரம் உள்ளவன், அவனுடைய மற்ற பாதுகாப்புகளான பணம், சொத்து முதலியவற்றை அவனிடம் இருந்து எடுத்துவிட்ட போதிலும் விட்டு விடுதலை விரும்ப மாட்டான். செயற்படும் நிலையிலுள்ள அஹங்காரத்தை சுலபமாக வெட்டி சீர்செய்து விட முடியும்.

ஆனால், சாத்வீகமான அஹங்காரம் மிகவும் நுட்பமானது. தந்திரமானது. சாத்வீகமான அஹங்காரம் உள்ளவர்கள், தங்களை மிகவும் பணிவாகக் காட்டிக்கொள்வார்கள்; மக்களை எதிரிகொள்ள தைரியம் அற்ற வர்கள்; தனக்குரிய மதிப்பை எடுத்துக்கொள்ள வெட்கப்படுபவர்கள். இதில் மிகவும் மோச மான விடயம் என்னவென்றால் அஹங்காரம் இல்லாததால்தான் தாங்கள் இவ்வாறு இருப்பதாக அவர்கள் எண்ணுவது. உண்மை என்னவெனில், மற்றவர்களை விட இவர்களே அதிக அஹங் காரம் உள்ளவர்கள்! இது போன்ற பணிவான விடயங்களைச் செய்வதன் மூலம் தங்களது அஹங்காரம் புண்பட்டு விடாமல் மிகவும் ஜாக்கிரதையாகப் பாதுகாக்கிறார்கள்.



உங்களிடம் ஆழமான விழிப்புணர்வும் புரிந்துகொள்ளுதலும் இருந்தால் நீங்கள் உங்கள் அஹங்காரத்தை வெறும் கவனிப்பவராக மட்டுமே இருப்பீர்கள்; மேலும் இந்த நிலையில் தானாகவே நீங்கள் அடக்கத்துடனோ, அல்லது அஹங்காரத்துடனோ இருக்க மாட்டீர்கள்; நீங்கள் உங்களுக்குரிய மதிப்பை எடுத்துக்கொள்ளவோ அல்லது அதிலிருந்து வெட்கப்பட்டு விலகிச் செல்லவோ மாட்டீர்கள். நீங்கள் இதில் எதுவும் இல்லை என்பதைக் கூட எண்ணவோ அல்லது நிலைநாட்டவோ மாட்டீர்கள்; நீங்கள் வெறுமனே இருப்பீர்கள். அவ்வளவுதான். யாராவது உங்களைப் பாராட்டும் பொழுதோ அல்லது உரிய மதிப்பளிக்கும் பொழுதோ நீங்கள் வெறுமனே பிரபஞ்ச இருப்புத் தன்மையுடன் இசைந்து சென்று, அதை அத்துடன் விட்டு விடுவீர்கள், அவ்வளவே. மேலும் எதையும் ஒப்பிடவோ அல்லது உரிமை கொண்டாடவோ வேண்டிய அவசியம் எதுவும் இல்லை.

அதனால் மிகவும் தெளிவாக இருங்கள்... பெரும்பாலும் மக்கள் செயற்படும் நிலையில் உள்ள அஹங்காரம் தான் ஒரே வகையான அஹங்காரம் என்று எண்ணுகிறார்கள். இல்லை. இப்பொழுது நாம் விவாதித்த சாத்வீகமான நிலையில் உள்ள அஹங்காரம் ஒன்று இருக்கிறது. இதைக் கையாள்வதே மிகவும் கடினமானது.

செயற்படும் நிலையில் உள்ள அஹங்காரத்தை உடைய மக்கள், காய்ந்த கடினமான குச்சிகளைப் போன்றவர்கள். அவர்களை சுலபமாக உடைத்துவிடலாம். சாத்வீகமான நிலையிலுள்ள அஹங்காரத்தை உடையவர்கள், புதியதாகவும் பசுமையாகவும் உள்ள குச்சியைப் போன்றவர்கள். ஒவ்வொரு முறை அவர்கள் அஹங்காரம் அடிபடும் பொழுதும் வளைந்து விடுகிறார்கள். ஆனால், உடைவதில்லை. அவர்களது அஹங்காரம் மிகவும் நன்றாகப் பாதுகாக்கப் படுவதால் அதனைக் கையாள்வது கடினமாகிறது. உண்மையில் அவர்கள் அதைப் பாதுகாக்க, இனிமையான மற்றும் சாத்வீகமான வழியல் மிகவும் கடினமாகவே உழைக்கிறார்கள். சாத்வீகமான அஹங்காரம் செயற்படும் அஹங்காரத்தை விட மிகவும் ஆபத்தானது.

(தொடரும்)

**பரமஹம்ஸ சுவாமி**

---

## அதிசய உலகம்

### டயானாவின் மரணச்செய்தி கேட்டவுடன் மகாராணி கூறிய முதல் வார்த்தை: அம்பலமான அரண்மனை ரகசியம்



பிரித்தானிய முன்னாள் இளவரசி யான டயானா கார் விபத்தில் இறந்தவுடன், அந்த செய்தியை கேட்ட மகாராணி அதிர்ச்சியில் கூறியுள்ள வார்த்தை தற்போது வெளிச்சத்திற்கு வந்து சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

பிரித்தானிய இளவரசரான சார்லஸின் மனைவியும் இளவரசர் வில்லியமின் தாயாருமான டயானா கடந்த 1997ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் பாரீஸில் நிகழ்ந்த கார் விபத்து ஒன்றில் பரிதாபமாக உயிரிழந்தார்.

இளவரசியின் மரணம் சர்வதேச அளவில் துக்கத்தை ஏற்பட்டிருந்த நிலையில், அவரது மரணத்தில் பல்வேறு சந்தேகங்களும் மர்மங்களும் தற்போது வரை நீடித்து வருகிறது.

இந்நிலையில், அரச சுயசரிதை எழுத்தாளரான Ingrid Seward என்பவர் தற்போது ஒரு அதிர்ச்சி தகவலை வெளியிட்டுள்ளார்.

டயானா கார் விபத்தில் சிக்கி இறந்து விட்டார் என்ற செய்தியை மகாராணியான இரண்டாம் எலிசபெத்திடம் கூறும்போது, அவர் அதிர்ச்சியில் "டயானாவின் கார் பிரேக்கில் யாரோ ஒரு நபர் திட்டமிட்டு கிரீஸ் எண்ணெய்யை தடவியிருக்க வேண்டும்" (Someone must have greased her brakes) என ஆவேசமாக கூறியதை அருகில் இருந்த ஒரு நபர் கேட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

மகாராணியின் இந்தக' கூற்றின் மூலம், டயானா விபத்தில் இறந்திருக்க வாய்ப்பில்லை என்றும், அது ஒரு திட்டமிடப்பட்ட சதி தான் என்பது அவரது வார்த்தையிலேயே விளங்குவதாக அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், டயானாவிற்கும், மகாராணிக்கும் இடையே சுமுகமான உறவு இல்லை என்பதையும் இது காட்டுவதாக அந்த எழுத்தாளர் கருத்து தெரிவித்துள்ளார்.

---

## சமைப்போம் சுவைப்போம்

### உருளைக்கிழங்கு சப்ஜி



**தே.பொருட்கள்:**

உருளைக்கிழங்கு - 500 கிராம் (சிறியது மற்றும் நறுக்கியது)
இஞ்சி பூண்டு பேஸ்ட் - 1 டீஸ்பூன்
அரைத்த தக்காளி - 2 டேபிள் ஸ்பூன்
தயிர் - 2 டேபிள் ஸ்பூன்
பெருங்காயத் தூள் - 1 சிட்டிகை, மஞ்சள் தூள் - 1 டீஸ்பூன், மிளகாய் தூள் - 2 டீஸ்பூன், சீரகப் பொடி - 1 டீஸ்பூன், மல்லி தூள் - 1 டீஸ்பூன் , சர்க்கரை - 1/2 டீஸ்பூன், உப்பு - தே.அளவு, எண்ணெய் - தே.அளவு

**செய்முறை**

முதலில் ஒரு பாத்திரத்தை அடுப்பில் வைத்து, அதில் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும், பெருங்காயத் தூள் மற்றும் சர்க்கரை சேர்த்து, தீயை குறைவில் வைத்து கிளறி விட வேண்டும். சர்க்கரையானது கரைந்து, பொன்னிறமானதும், இஞ்சி பூண்டு பேஸ்ட் சேர்த்து சில நொடிகள் வதக்க வேண்டும். பின்பு அரைத்த தக்காளி, மஞ்சள் தூள், மிளகாய் தூள், சீரகப் பொடி, மல்லி தூள் சேர்த்து, 2 நிமிடம் கிளற வேண்டும். பின் உருளைக் கிழங்கு சேர்த்து 2 நிமிடம் தீயை குறைவில் வைத்து வதக்கி, தயிர் சேர்த்து மீண்டும் 2 நிமிடம் கொதிக்க விட வேண்டும். பிறகு தே.அளவு உப்பு மற்றும் 1/2 கப் வெதுவெதுப்பான நீர் ஊற்றி, தீயை குறைவில் வைத்து, தட்டு கொண்டு மூடி, 10 நிமிடம் நன்கு கொதிக்க விட வேண்டும். உருளைக்கிழங்கானது நன்கு வெந்ததும், அடுப்பை அணைத்து விட வேண்டும். இப்போது சுவையான உருளைக் கிழங்கு சப்ஜி ரெடி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்றத் தேர்தல் வாக்களிப்பின் போது...



நாடாளுமன்ற தேர்தலுக்கான வாக்களிப்பு நேற்றையதினம் நாடுமுழுவதும் நடைபெற்றது. இதில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் வாக்களிப்பில் ஈடுபட்டுள்ளனர். இதேவேளை வடக்கில் யாழ்ப்பாணம், வன்னி தேர்தல் மாவட்டங் களில் போட்டியிடும் வேட்பாளர்கள் சிலர் வாக்களிப்பில் ஈடுபட்டிருந்த போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹேர்பல் கெல்த் கெயார்சென்ரர்

யாழ்ப்பாணத்து சித்த மருத்துவமுறைகள், இந்தியா, கேரளா ஆயுர்வேத, சித்தமருத்துவ முறைகளை உள்ளடக்கிய பக்கவிளைவற்ற முற்றிலும் மூலிகைகளால் தயாரிக்கப்பட்ட மருந்துகள் மூலம் சிகிச்சையளிக்கப்படுகின்றது.

**வழங்கப்படும் சேவைகள்:** உடல் நிறை குறைத்தல், தீராத தலைவலி, பாரிசவாதம், முகநரம்பு பாதிப்பு, சோரியாசிஸ், ஞாபகமறதி, முள்ளந் தண்டுப் பிரச்சினை, வாதரோகம், மூட்டுக்களில் ஏற்பட்டுள்ள பாதிப்பு, மாறாத சர்மரோகங்கள், வயிற்றுப்புண், நீரழிவுரோகம், மாறாத புண்கள், நீண்டகால சளித் தொற்று, மூட்டுவிலகல், தோள்மூட்டில் ஏற்படும் வலி, பசியின்மை, குழந்தைகளுக்கு அடிக்கடி ஏற்படும் சளி, உணவு எடுக்க விரும்பமின்மை போன்றவற்றுக்கு சிறப்பான சிகிச்சையளிக்கப்படுகின்றது. பிறப்பிலே ஏற்படும் Cerebral Palsy, Autism Spectrum Disorders (Global Mental Disorders) இவற்றிற்கு கேரளா ஆயுர்வேத சிகிச்சை நடைபெறுகின்றது.

நீரிழிவு நோய்க்கு குருதிக்குளுக்கோசின் அளவைக் கட்டுப்படுத்துவதற்கு நாவல் கோப்பி விற்பனை செய்யப்படுகின்றது. இக்கோப்பியானது நீங்கள் உபயோகிக்கும் மருந்துகளுடன் சேர்த்து பானமாக உபயோகிக்கும் பட்சத்தில் 2-3 கிழமைகளில் ஆச்சரியப்படத்தக்க விதத்தில் குருதிக்குளுக்கோசு குறைவடைகிறது. பின் உங்கள் மருத்துவரின் ஆலோசனைப்படி மருந்துகளை குறைவாக உபயோகிக்கலாம். பக்க விளைவற்றது.

சித்த ஆயுர்வேத, பாரம்பரிய மருத்துவ சேவையை தினமும் காலை 9.30 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இல. 021 222 2537 , 075 041 3579, 077 820 1195 முற்பதிவு அவசியம்.

Dr.G.Sritharan B.S.M.S.(SL), M.Phil (jaf.),
Dr. (Mrs) S. Anpuchelvy B.S.M.S. (SL), M.D.(S) (India),
Herbal Health Care Centre
65, கே.கே.எஸ் வீதி, கொக்குவில்.
(பூநாறி மரத்தடிக்கும் கொக்குவில் சந்திக்குமிடையில்)

(511)



## இதோ ஓர் அரியவாய்ப்பு!

இதுவரைக்கும் 2800 முன்பள்ளி டிப்ளோமாதாரிகளை உருவாக்கிய நிறுவனத்தில் கல்வி பயின்று டிப்ளோமாதாரியாக மாறி சாதனை படைத்திட வாரீர்!!!

ஆறுதல் நிறுவனத்தின் 2015/2016ஆம் ஆண்டிற்குரிய முன்பள்ளி டிப்ளோமா கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரல்

- எமது பலம்
- இரு தேசிய மொழிகளிலும் வடக்கு கிழக்கு மாகாணங்களில்
- கல்வி அமைச்சு மற்றும் சிறுவர் அபிவிருத்தி பெண்கள் வலுவூட்டல்
- அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்
- வார இறுதி நாட்களில் விரிவுரைகள்
- பயிற்றப்பட்ட தரமான ஆசிரியர் குழாம்
- நவீன முறையிலான கற்றல் கற்பித்தல் செயன்முறை வகுப்புக்கள்

முன்பள்ளி ஆசிரியர்கள் க.பொ.த (சா/த) சித்தியுடனும் ஏனையவர்கள், க.பொ.த உயர்தர சித்தியுடனும் (இருபாலாரும்) விண்ணப்பிக்க முடியும்.

உங்கள் விண்ணப்பப்படிவங்களை

முன்பள்ளி ஆசிரியர்கள் தமது வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (முன்பள்ளி) ஊடாகவும்,

ஏனையோர்

பிரதம நிறைவேற்று அலுவலர், ஆறுதல் நிறுவனம், இல.51, வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்

என்ற முகவரிக்கு தபால்மூலம் அனுப்பிவைக்கவும்.

**தொடர்புகளுக்கு: 021 221 7092**

**விண்ணப்ப முடிவுத் திகதி: 05.09.2015**

உங்கள் விண்ணப்பப்படிவங்களை www.aruthal.lk எனும் இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பயிற்சிக் கட்டணம் - 18,000/=

பயிற்சிக்காலம் 10 மாதம்

([illegible]-1825)


# மணக்கோலத்தில் வாக்களித்த மணமகன்.!



(கொழும்பு) ஜப்பானிய பெண்ணொருவரை மணம் முடித்துள்ள இலங்கை இளைஞர் ஒருவர் நேற்று மணப்பெண்ணுடன் வாக்குச் சாவடிக்கு சென்று வாக்களித்துள்ளார்.

இந்த சம்பவம் சிகிரியா பிரதேசத்தில் நடைபெற்றுள்ளது.

மணமகன், மணமகளுடன் சிகிரியா கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச் சாவடிக்கு சென்று வாக்களித்துள்ளார்.

வாக்களிக்க வந்த மணமக்களுக்கு அங்கு பாதுகாப்புக்கு நிறுத்தப்பட்டிருந்த பொலிஸார் வாழ்த்துக்களை தெரிவித்து கொண்டனர். (இ-7)


# IELTS Special Class

12th September யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் IELTS பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் விசேட வகுப்புகள்
திங்கள் தொடக்கம் வெள்ளி வரை
காலை 8.30 மணி முதல் 11.30 மணி வரை நடைபெறும்
ஆரம்பம் 19.08.2015

IELTS™



- 60 மணி நேர வகுப்பு
- UNIQUE TECHNIQUES AND BEST TIPS SPECIALLY IN READING
- WE ARE "IELTS REGISTRATION CENTER FOR BRITISH COUNCIL"
- MORE THAN 10 YEARS EXPERIENCE
- VOCABULARY and GRAMMAR
- EXTENDED SPEAKING PRACTICE

THIS IS NOT A CONVENTIONAL IELTS CLASS WHERE YOU DO PAPERS AND TEACHER GIVES ANSWER KEY. BUT IT IS AN INNOVATIVE TRINING PROGRAM WHICH HAS HELPED MY STUDENTS TO TOUCH BANDS 8 & 8.5

BRITISH COLLEGE OF ENGLISH
No. 192, Navalar Road, Jaffna. (பெருமாள் கோவிலுக்குச் சமீபமாக)
Tel : 021 222 0384, 0778803887


# நல்லூர் கந்தசுவாமி கோயில் அடியவர்களுக்கு யாழ்ப்பாணம் மாநகர சபையின் அன்பான வேண்டுகோள்

- நல்லூர்க் கந்தன் ஆலயத்தின் உள் வீதியும் வெளிவீதியும் அடியவர்களின் தியான பூமியாகும். அவற்றின் அமைதியைப் பேணி பக்தர்களுக்கு உதவி புரியுங்கள்.
- ஆலயமும் அதன் சூழலும் தூய்மையடையும் போதுதான் அடியவர்களின் உள்ளமும் தூய்மையடைந்து இறைவன் அவரவர் உள்ளங்களில் சாந்நித்தியம் கொள்கின்றார். ஆகவே, அப்புனிதமான பகுதிகளில் பாதணிகளுடன் செல்வதைக் கண்டிப்பாகத் தவிர்த்துக்கொள்ளவும்.
- அருள்மிகு நல்லூர்க்கந்தனின் திருவிழாவிற்கு வருகைதரும் அடியார்கள் இலங்கைக்கான கலாசார உடையணிந்து எம் சமய, சமுதாய விழுமியங்களைக் கடைப்பிடித்து ஆன்மீக உணர்வை மேம்படுத்த உதவிடுவீர்.
- முருகப்பெருமானின் பெரும்புகழைப் பாடிப் பணிதலின்றி வேறு செயல்களை ஆலயத்திற்குள்ளும் ஆலயச் சூழலிலும் தவிர்த்துக் கொள்ளுங்கள்.
- வெண்மணல் பரப்பிய வீதியிலே அடியவர்கள் அங்கப் பிரதட்சணம், அடியளித்தல் செய்வதனால் கழிவுப் பொருட்களை குப்பைத் தொட்டியிலிட்டு வீதியைச் சுத்தமாக வைத்திருக்க உதவிடுவீர்.
- யாழ்.மக்களை மட்டுமன்றி உலகம் வாழ்மக்கள் அனைவரையும் தன் அருட்கண் பார்வையினால் இரட்சித்துக்கொண்டிருக்கும் முருகப் பெருமானை அடியார்கள் இறை சிந்தனையுடன் மனதை ஒரு நிலைப் படுத்தி வணங்குவதற்கு ஏதுவாக ஆலயச் சூழலில் உணவகங்கள், ஒலி பெருக்கிகள், உணவு தயாரிக்கும்போது ஏற்படும் ஒலிகள் என்பவற்றைக் கட்டுப்படுத்தி அமைதியைக் காத்திடுவீர்.
- ஆலய வெளிவீதிகளில் புனிதம் பேணும் பொருட்டு விளம்பரப் பதாகைகள் அமைப்பதையும் அலங்கார விளக்குகள் அமைத்துக் காட்சிப்படுத்துவதையும் தவிர்த்திடுவீர்.
- ஆலயச் சூழலில் மாமிச உணவு, மதுபானம், புகைபிடித்தல் என்பன தவிர்க்கப்படல் வேண்டும்.
- தேர், தீர்த்தம் ஆகிய திருவிழா நாட்களில் தூக்குக்காவடி நேர்த்திக்கடன் செய்வோர் சுவாமி இருப்பிடத்திற்குச் சென்ற பின்னர் வீதித்தடையினூடாகச் செல்லமுடியும். ஆதலால் தூக்குக்காவடி நேர்த்திக்கடன் செய்யும் அடியார்கள் நேரத்தைக் கவனத்திற் கொண்டு அதனால் ஏற்படும் காலதாமதங்களைத் தவிர்த்துக்கொள்ளமுடியும்.
- **ஆண்டவன் முன் அனைவரும் சமம்.** அலங்காரக் கந்தனின் அருள் அகிலமெங்கும் பரவி சிறப்புற வேண்டுமென இறைவனை வணங்குவோமாக.

[illegible]
யாழ்ப்பாணம். (சி-1824)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீண்போகாதையா உன் தேசியப்பற்றும் தன்மான உணர்வும்

# விட்டுச்சென்ற விழுதுகள்–நாம்

# விருட்சமாய் எழுந்து நிற்போம்

## முதலாம் ஆண்டு நினைவலை

**18 - 08 - 2015**



## தமிழ்த் தேசிய புலமையாளன்

# சின்னத்துரை வரதராஜன்

(ஈழத்தின் பிரபல பொருளியல் பேராசான், முன்னாள் விரிவுரையாளர் பேராதனைப் பல்கலைக்கழகம்)
(ஆலோசகர், யாழ் எய்ட் அறக்கட்டளை, கலிங்கம் பல்சுவை இதழ்)

அறிவுத் திறன் மனப்பாங்கு கொண்ட அகல்விளக்கே!
ஆற்றல்மிகு பேராசிரியராய் பேராதனைப்பல்கலையில்
பரிணமித்த பொருளியலின் கருப்பொருளே!
பக்குவமாய் மாணவரை உருப்பெற வைத்தவரே!
இதமாகப் பொருளியலைப் பதமாகப் புகட்டி வைத்து
இங்கிதமாய் வாழ்வினிலே இலங்கிய புகழோனே!
ஈடிணையில்லா இன் தமிழ் மூச்சினில் கலந்த
சோடை போகாத செந்தமிழின் சொத்தே!
தமிழ்த்தேசப் பற்றும் தேசிய உணர்வும் கொண்ட
உன்னதமான புண்ணியவாளனே!
பொய் வேஷம் பூணாத மெய் உணர்வாளனே!
மெல்லிய உருக்கொண்ட துல்லிய அறிவுளனே!
விரைந்த நன் நடையும் நேரான பேச்சும்
நிலைகொண்ட விலை போகாத -எம்
கலைத்தாயின் பொக்கிஷமே
கன்னித் தமிழின் பற்றாளனே!
பொருளியல் மட்டுமன்றி அறவியலில்
அனைவரும் திகழ வேண்டும் எனும்
ஆதங்கம் கொண்டீர் அதன்நிலை எண்ணி நின்றீர்
நெற்றிக்கு நேரே கூட்டிக் கதை பேசிடும்
நேர்மைத் திறன் கொண்டவரே!
வெளிவேடம் போடாத தெளிவான நெஞ்சினனே!
பேச்சொன்று செயலொன்று தெரியாத சிந்தையினால்
சிறை வாசம் அனுபவித்தீர்
விண்நோக்கிச் சென்ற எம்
கண்ணான காவலனே! வீண்போகாதையா உன்
தன்மான உணர்வு விட்டுச்சென்ற விழுதுகள்–நாம்
விருட்சமாய்எழுந்து நிற்போம்!
எண்ணம்போல் வாழ்ந்த வண்ணத் தமிழ் மகனே!
உன்வாஞ்சை நிறைவேறுவது திண்ணம் ஐயா!
உள்ளளவும் உள்ளத்தால் உறுதி கொண்ட நெஞ்சினனே!
கூரான நின்அறிவும் நேரான நின் நடையும்
பேரான நின் புகழும் சீரான நின் வாழ்வும்
சிரமேற் கொண்டோம் –ஐயா!
பொருளிய லைப் பெருமனதாய்க் கற்பித்து
கணக்கற்ற கல்வியாளர்களைக் கண்டீர்!
கச்சிதமாய் பலரும் மெச்சிட உலா வந்தீர்!
தமிழர் தம் நிலை கண்டு தடுமாறி நின்றீர்
தன்மான உணர்வுடன் தளராது செயற்பட்டீர்!
உன் உடலில் நோய் கண்டாய் - ஆனால்
தன் உணர்வில் தளராது நீ - நின்றீர்
ஆலமரமெனவே அழகு நிழல் பரப்பி நின்ற
சோலைவனமே! சோபிதமானவரே!
ஓராண்டு நினைவுதனில் உறுதி மொழி பகர்கின்றோம்
ஊர் போற்றும் உத்தமரே! உதயத்துச் சூரியனே!
எம் இதயத்தின் இருப்பிடமே!
உமையாள் சிவன் பாதம் தனில் உறைந்திடுகே நின் ஆன்மா!
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

– குடும்பத்தினர்

(509)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடம்பெயர்ந்த வாக்காளர்களுக்காக புத்தளம், அ'புரத்தில் 24 வாக்குச்சாவடிகள்

(வவுனியா)

**நாட்டில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து, இதுவரை வன்னியில் நிரந்தரமாக குடியேறாத சுமார் 10 ஆயிரம் வாக்காளர்களுக்காக புத்தளம் மற்றும் அநுராதபுரம் மாவட்டங்களில் 24 வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளதாக வன்னி மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி பந்துல ஹரிஸ்சந்திர தெரிவித்துள்ளார்.**

மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் இருந்து இடம்பெயர்ந்து புத்தளம் மாவட்டத்தில் வசித்து வரும் வாக்காளர்களுக்காக புத்தளத்தில் 22 வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

இங்கு 8 ஆயிரத்து 783 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

அதேவேளை வன்னி மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்து அநுராதபுரம் மாவட்டத்தில் வாழ்ந்து வரும் 775 வாக்காளர்களுக்காக அநுராதபுரத்தில் 2 வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த வாக்குச் சாவடிகளில் அளிக்கப்படும் வாக்குகளை எண்ணுவதற்காக தனியான மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன், வன்னி மாவட்ட இறுதித் தேர்தல் முடிவுகளுடன் இந்த வாக்குகள் சேர்க்கப்படும்.

இந்த வாக்குகளை புத்தளம் மற்றும் அநுராதபுரம் மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகள் வவுனியாவுக்கு அனுப்பி வைப்பார்கள் எனவும் ஹரிஸ்சந்திர குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை வன்னி மாவட்டத்தில் வாக்களிக்க தகுதி பெற்றுள்ள 2 இலட்சத்து 53 ஆயிரத்து 58 வாக்காளர்களுக்காக வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் 334 வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2)

# அலங்கார உற்சவம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இயக்கச்சி திருவருள் மிகு மல்வில் கிருஷ்ணன் கோவில் மன்மத வருட அலங்கார உற்சவம் நாளை புதன் கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறும்.


இதில் காலை உற்சவம் காலை 9 மணிக்கும் மாலை உற்சவம் மாலை 6.30 மணிக்கும் இடம்பெறும்.

எதிர்வரும் 26 ஆம் திகதி புதன்கிழமை வேட்டைத் திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை சப்பரத் திருவிழாவும் நடைபெற்று எதிர்வரும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும் இடம்பெறும்.

மறுநாள் சனிக்கிழமை தீர்த்தத் திருவிழா நடைபெறும்.

தேர் உற்சவத்தன்று காலை 8.30 மணிக்கு சுவாமி தேரில் எழுந்தருளி அடியார்களுக்கு அருள்பாலிப்பார். தீர்த்தத் திருவிழா காலை 6.30 மணிக்கு நடைபெறும். (2-3)





மன்னார் மடுத் திருத் தலத்தின் ஆவணி மாதத் திருவிழா கடந்த 15 ஆம் திகதி இடம்பெற்ற போது... (படங்கள்:- பனிங்கன் குளம் செய்தியாளர்)

# பேருந்துகளில் போக்குவரத்து கட்டணங்கள் காட்சிப்படுத்த வேண்டும்

## பயணிகள், பொதுமக்கள் வேண்டுகோள்

(பனிக்கன்குளம்)

வடக்கு மாகாணத்தில் சேவையில் ஈடுபடுகின்ற தனியார் மற்றும் இ.போ.ச பேருந்துகளில் போக்குவரத்து கட்டணங்களின் விபரம் காட்சிப்படுத்தப்பட வேண்டுமென பொதுமக்கள், பயணிகள் வேண்டுகோள் விடுத் துள்ளனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

வடக்கு மாகாணத்தில் சேவையில் ஈடுபடுகின்ற பெரும்பாலான பேருந்துகளில் கட்டண அறவீடுகள் காட்சிப்படுத்தப்படவில்லை.

பொதுமக்களிடம் அதிக பணத்தை வசூலிப்பதற்காக பல பேருந்துகளில் இதனைக் காட்சிப்படுத்தாது சேவையில் ஈடுபடுத்தப்படுவதாக பயணிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

கட்டணம் தெரிந்த மக்கள் கட்டண விபரத்தைகாண்பிக்குமாறுநடத்துநரிடம் கோரிய போது அவர் அதனை காண்பிக்க மறுப்பதாக பயணிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அத்துடன் பயணக் கட்டணம் செலுத்திய பின்னர் மிகுதியாக வருகின்ற 10 ரூபா மற்றும் அதற்கு குறைந்த மீதிப் பணம் பயணிகளுக்கு வழங்கப்படுவதில்லை. இவற்றையெல்லாம் பயணிகள் யாரிடம் முறையிடுவது என தெரியாது தவிக்கின்றனர்.

எனவே பேருந்து சங்கங்கள் இவ் விடயத்தில் கூடிய கவனமெடுத்து பயணிகளுக்கு உதவ முன்வரவேண்டுமென பாதிக்கப்பட்டவர்கள் வேண்டுகோள் விடுக் கின்றனர். (2-281)




# வேட்பாளரின் துண்டுப்பிரசுரங்களை விநியோகித்த இருவர் கைதாகினர்

(வவுனியா)

வவுனியாவில் வேட்பாளர் ஒருவரின் துண்டுப்பிரசுரங்களை விநியோகித்த இருவர் கைதாகினர்.

பாராளுமன்றத் தேர்தலுக்கான வாக்குப் பதிவுகள் நேற்றையதினம் இடம்பெற்ற வேளை வவுனியாவில் உள்ள வாக்குச் சாவடி ஒன்றின் அருகில் வாக்காளர் ஒருவருடைய சிறிய துண்டுப்பிரசுரங்களை விநியோகித்ததாக இருவர் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்ட னர்.

வவுனியா, மூன்றுமுறிப்பு பகுதியில் தேசிய கட்சி ஒன்றின் வேட்பாளருடைய சிறிய துண்டுப்பிரசுரங்களை விநியோகித்து கொண்டிருந்த போதே குறித்த இருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (2)

# சமையல் எரிவாயுவின் கசிவால் வீடு தீப்பற்றியது



(மன்னார்)

வீடொன்றில் ஏற்பட்ட தீவிபத்தினால் சமையல் அறைப்பகுதி எரிந்து சேதமடைந்துள்ளதாக மன்னார் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் மன்னார் எமில் நகர் கிராமத்தில் நேற்று முன்தினம் பூண்டி மாதா கோவிலுக்கு அருகாமையில் அமைந்துள்ள வீட்டிலேயே இடம்பெற்றது.

இது தொடர்பில் தெரியவருவதாவது.

சமையல் எரிவாயுவில் ஏற்பட்ட கசிவே இவ்விபத்துக்கு காரணமெனவும் இதன்போது உயிர் ஆபத்தோ அல்லது எவருக்கும் காயங்களோ ஏற்படவில்லை என்றும் மன்னார் பொலிஸார் தெரிவித்தனர். குறித்த வீட்டில் வசித்த பெண், சமையலுக்காக காஸ்அடுப்பில்உணவை வைத்து விட்டு வெளியில் சென்றுள்ளார். இதன்போது, எரிவாயுவில் ஏற்பட்ட கசிவு காரணமாக வீட்டின் சமையல் அறையில் தீ பரவி யுள்ளது. அதனால் சமையல் அறை பலத்த சேதத்துக்கு உள்ளானதுடன், குறித்த வீட்டின் கூரையும் தீப்பிடித்து எரிந்துள்ளது. இந்நிலையில் கிராம மக்கள் மற்றும் பொலிஸாரின் உதவியுடன் தீ கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டு பெரும் அனர்த்தம் தவிர்க்கப்பட்டுள்ளது. (2)

# பெண் தலைமைத்துவ குடும்பங்களின் தொழிலை மேம்படுத்த துவிச்சக்கரவண்டிகள்

(மல்லாவி)

ஐ.டி.எம். நிறுவனத்தின் அனுசரணையுடன் துணுக்காய் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கிராமங்களில் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்ற பெண் தலைமைத்துவக் குடும்பங்களு க்கும் மற்றும் போரினால் பாதிக்கப்பட்ட வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்ற பெண் தலைமைத்துவக் குடும்பங்களில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட 10 பயனாளிகளுக்கு வாழ்வாதார தொழில் மேம்பாட்டிற்காக துவிச்சக்கரவண் டிகள் வழங்கப்படவுள்ளதாக ஐ.டி.எம். நிறுவனத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில், துணுக்காய் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட அனிஞ்சியன்குளம், ஆலங்குளம், உயிலங்குளம் ஆகிய கிராமங்களில் வசிக்கின்ற வறுமைக்கோட்டின் கீழுள்ள கணவனை இழந்த பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கும் மற்றும் போரினால் கணவனை இழந்த பெண் தலைமைத்துவக் குடும்பங்களில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட 10 குடும்பங்களுக்கு தொழில் முயற்சிகளை மேம்படுத்தும் நோக்குடன் 10 துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்படவுள் ளன.

மேற்படி பயனாளிகள் தெரிவு பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. பாராளுமன்ற தேர்த லின் பின்னர் இவர் களுக்கான துவிச்ச க்கர வண்டிகள் வழங்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிரடிச் சலுகை

**வலம்புரியின் அதிரடிச் சலுகை**

- மரண அறிவித்தல்கள்
- கண்ணீர் அஞ்சலிகள்
- நினைவு கூருதல்

ஆகியவற்றுக்கு

மேலதிக விபரங்களுக்கு இன்றே வலம்புரி காரியாலயத்தை நாடுங்கள்...

**தொடர்புகளுக்கு :-**
**021 221 7603,**
**021 321 0815**
**021 567 1543**

Valampurii@yahoo.com


# வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் இலங்கைக்கு பாராட்டு தெரிவிப்பு

இலங்கையில் நடைபெறும் பாராளுமன்றப் பொதுத் தேர்தல் குறித்து வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் பாராட்டை வெளியிட்டுள்ளனர். தேர்தல்களுக்குப் பொறுப்பான பிரதிப பொலிஸ்மா அதிபர் காமினி நவரட்ன இதனைத் தெரிவித்துள்ளார். இம்முறை நாடாளுமன்றத் தேர்தல் மிகவும் அமைதியான முறையில் நடத்தப்படுகின்றது, இது முழு உலகத்திற்கும் முன்னுதாரணமாக காணப்படுகின்றது என தேர்தல் கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பொலிஸ் தலைமையகத்தில் வெளிநாட்டு தேர்தல் கண்காணிப்பாளர்களுடன் நடத்தப்பட்ட சந்திப்பின் போது இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

36 பேரைக்கொண்ட வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் கடந்த சில தினங்களாக இலங்கையின் பல பகுதிகளுக்கும் சென்று கண்காணிப்பு நடத்தியுள்ளனர். பாரியளவில் தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் எதுவும் பதிவாகாமை மகிழ்ச்சி அளிப்பதாகத் தெரிவித்துள்ளனர். இலங்கையில் நிலவும் அமைதியான சூழ்நிலை குறித்து இணையம் ஊடாக முழு உலகிற்கும் வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் அறிவித்துள்ளனர் என காமினி நவரட்ன, சிங்கள ஊடகமொன்றுக்கு அளித்த நேர்காணலில் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)


**30 ஆண்டுகால தனித்துவமிக்க பயிற்சி நிலையம்**
**1985ம் ஆண்டிலிருந்து இன்று வரை....**



யாழ். **கலாலயா** பயிற்சியகம்

**விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.**
**(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)**

**மகளிருக்கான 4 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!**



- கேக் ஐசிங், உணவு தயாரித்தல்,
- *Hair Dressing & Styling* (கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்)
- முக அழகுக் கலை (Facials)
- Pedicure, Manicure (கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகு படுத்துதல்)
- இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான 7 முறைகளில் சேலை அணிதல்,

**மேற்படி அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**

- (B) பிளவ்ஸ், சாறி (B)பிளவ்ஸ், சுரிதார், தைக்கும் சான்றிதழ் அற்ற தையல் பயிற்சிகள். **(கிழமை நாட்களில் மட்டும்)**

சனி, ஞாயிறு மற்றும் கிழமை நாள்
புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன!
மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.

-இயக்குநர்-



**கல்யாண மாலை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 22<br>உயரம்: 170cm<br>தகைமை/தொழில்: A/L/ சொந்த தொழில்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: B/4898 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 74 சூரிசெவ் 9 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: GAQ<br>தொ.இ: G/1856 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 39 செவ் 12 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: A/L/ சொந்த தொழில்<br>தொ.இ: B/4899 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 16 1/2<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BA/ ஆசிரியர்<br>தொ.இ: G/1861 |
| பிறப்பு: 1986 RC<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 63 செவ் 1 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: MLT/ அரச தொழில்<br>தொ.இ: B/4900 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 27<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BCS/ அரச தொழில்<br>தொ.இ: G/1867 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 09<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: BA/ ஆசிரியர்<br>தொ.இ: B/1338 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 57 செவ் 7 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/1870 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


## ராசி பலன்

18.08.2015
(ஆவணி 01, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
சதுர்த்தி பின்னிரவு 4.14 மணிவரை
உத்தரம் முற்பகல் 9.53 மணிவரை
இராகுகாலம் 3.05-4.35 மணிவரை
சுபநேரம் 10.35-12.05 மணிவரை
நாக சதுர்த்தி விரதம்,
அமிர்தசித்தம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| | கிரகநிலை | | செவ் |
| | | | சூரி, புதன் குரு சுக் |
| | | சனி | சந் ராகு |

**மேடம்:** தொழிலில் இருந்த மறைமுக எதிர்ப்புகள் மாறும், கடன்களை வசூலிக்க எடுத்த முயற்சி வெற்றி தரும், நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும்.

**இடபம்:** வழிபாட்டால் நிம்மதி காண வேண்டிய நாள், பிள்ளைகள் வழியில் சுப செலவுகள் ஏற்படலாம், அரசு வழியில் அனுகூலமுண்டு, பூர்வீகச் சொத்துக்கள் சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு.

**மிதுனம்:** தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும், பொதுக் காரியங்களில் நாட்டம் காட்டுவீர்கள், வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், பயணங்களால் பலனுண்டு.

**கடகம்:** கனிவான பேச்சுக்களால் காரியம் சாதிப்பீர்கள், நிதிநிலை உயர்வடையும், பாசத்தோடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும், முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படலாம்.

**சிம்மம்:** இறைவழிபாட்டால் இன்பங்களை வரவழைக்க வேண்டிய நாள், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, எண்ணங்கள் எளிதில் ஈடேறும்.

**கன்னி:** கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வது நல்லது.

**துலாம்:** ஒருசில வேலைகளுக்காக நீண்ட நேரம் காத்திருக்கும் சூழ்நிலை உருவாகும், குடும்பத்தினரின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது, மனச்சஞ்சலங்கள் கூடும்.

**விருச்சிகம்:** வியக்கும் செய்திகள் வீடு வந்து சேரலாம், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், விருந்தினர் வருகையுண்டு, குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**தனுசு:** வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள், தொழில் ரீதியாக புதிய முதலீடுகள் செய்யும் எண்ணம் உருவாகும், கற்பனை மிகுதியான நாள்.

**மகரம்:** மருத்துவச் செலவுகள் குறைந்து மனநிம்மதியைக் கொடுக்கும், நல்லவர்களின் தொடர்புகள் நன்மைதரும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**கும்பம்:** மற்றவர்களிடம் பேசும்போது நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது, விரயங்கள் கூடும் நாள், எடுத்த காரியங்களை முடிப்பதில் சில சிரமங்களை எதிர்கொள்வீர்கள்.

**மீனம்:** உறவினர்களின் வருகையுண்டு, சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன நன்மையுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிறுவர் அரங்கம்

1216

## தேங்க்யூ சார்!

ஒரு நரி, ஒரு ஓநாயைச் சந்தித்தது.

ஓநாய், நரியிடம் கேட்டது. "நரித் தம்பி, நீ எதுவரை படித்திருக்கிறாய்?"

"உண்மையைச் சொன்னால், நான் பாதி படித்திருக்கிறேன்!" என்றது நரி.

"அப்படியென்றால், உன்னை விட நான் இரண்டு மடங்கு படித்திருக்கிறேன். அதனால் நீ இன்று முதல் என்னை, "சார்" என்று அழைக்க வேண்டும்!" என்று கட்டளையிட்டது ஓநாய்.

அப்படிப் பேசிக்கொண்டிருந்த போது, பின்னால் இருந்த புதரிலிருந்து தாவி வந்தது ஒரு பெரிய புலி.

ஓநாயிடம், "இப்போது நாம் என்ன செய்வது சார்?" என்று கேட்டது நரி.

ஆனால், அந்தப் புலியைப் பார்த்து, பேசக்கூட முடியாமல் பயந்து போயிருந்தது ஓநாய். தாவுதற்கு ஆயத்தமாகியபடியே புலி கேட்டது.

"நீங்கள் எங்கே போகிறீர்கள்?"

உடனடியாகச் சிந்தித்து ஒரு முடிவெடுத்த நரி, "உங்களிடம் ஒரு ஆலோசனை கேட்க வேண்டும் என்றுதான் உங்களைத் தேடி வந்து கொண்டிருந்தோம் ஐயா. ஒரு விடயம் குறித்து எங்களுக்குள ஒரு விவாதம் ஏற்பட்டிருக்கிறது. உங்கள் அறிவால்தான் எங்கள் பிரச்சினையைத் தீர்க்க முடியும்!"

அதைக் கேட்டு மகிழ்ச்சியடைந்தது புலி.

"என்ன பிரச்னை? முதலில் அதை என்னிடம் சொல்லுங்கள்!" என்றது.

"நான் வேட்டையாடி இரண்டு பெரிய காட்டுக் கோழிகளைப் பிடித்தேன். ஆனால், இந்த ஓநாய் நண்பர் என்னை விட அதிகம் படித்திருப்பதால் தனக்கும் ஒரு கோழியைத் தர வேண்டும் என்று அடம் பிடிக்கிறார். நீங்களே சொல்லுங்கள் இது நியாயமா?" என்றது நரி.

ஓநாயைக் கூர்மையாகப் பார்த்தபடி, "நீ எதுவரை படித்திருக்கிறாய்?" என்று கேட்டது புலி.

பயத்தால் ஓநாயின் பற்கள் கடகடவென்று அடித்துக் கொண்டன.

புலிக்கு ஒன்றும் புரியவில்லை.

அதைக் கண்ட நரி, அதற்கு விளக்கம் சொன்னது.

"தன் வாயில் எத்தனைப் பற்கள் உள்ளனவோ அத்தனைத் தகுதிகள் தனக்கு உண்டு என்றுதான் இவர் சொல்ல வருகிறார்,"என்றது.

"அப்படியா? அப்படியென்றால் உன்னை விட எனக்குத்தான் அதிகமான தகுதிகள் உள்ளன! பார்க்கிறியா?" புலி, வாயைத் திறந்து தன் பயங்கரமான பற்கள் முழுவதும் வெளியே தெரியும் படிக் காட்டியது.

அந்தக் காட்சியைப் பார்த்து பேரதிர்ச்சி அடைந்த ஓநாய், உடனே மயங்கி விழுந்தது. ஓநாயின் அந்தச் செயலுக்கும் நரி விளக்கம் சொன்னது.

"நீங்கள் பெரிய படிப்பாளி என்று ஏற்றுக்கொண்டு இவர் உங்கள் பற்களை விழுந்து வணங்குகிறார்! எங்கள் பிரச்சினையைத் தீர்த்த உங்கள் அறிவுத் திறனுக்கு, நானும என் வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்!" என்று நரியும் புலியின் காலில் விழுந்து வணங்கியது.

"நான் உங்கள் பிரச்சினையைத் தீர்த்து விட்டேனா?" என்று புலி வியப்புடன் கேட்டது.



"இரண்டு கோழிகளும் இப்போது உங்களுக்கே சொந்தமாகிவிட்டன. அதில் எனக்கோ, ஓநாய் நண்பருக்கோ கருத்து வேறுபாடு ஏதுமில்லை. நீங்கள் என் வீட்டுக்கு வாருங்கள். வந்து இரண்டு கோழிகளையும் எடுத்துக் கொள்ளுங்கள்!" என்று நரி மிகவும் பணிவுடன் சொன்னது.

அதைக் கேட்டு மகிழ்ச்சியடைந்தது புலி, "கோழிக்கறி என்பது அரிதாகக் கிடைக்கும் அபூர்வ உணவு! அதுமட்டுமல்ல, முதலில்கோழிகளைத் தின்று, பிறகு நரியையும், ஓநாயையும் தின்றுவிடலாம்" என்று புலி மனதிற்குள் திட்டமிட்டது.

"சரி, நீ முன்னால் நடந்து வழி காட்டு, நான் பின்னால் வருகிறேன்!" என்று புறப்பட்டது புலி.

நரி அதை மலையின் ஒரு பக்கத்தில் உள்ள சுரங்கத்திற்கு அழைத்துச் சென்றது.

"முதலில் என் ஓநாய் நண்பர் சுரங்கத்திற்கு உள்ளே சென்று கோழிகளைப் பிடித்து வந்து உங்களிடம் கொடுப்பார்," என்றது நரி.

அந்தச் சுரங்கத்தின் நுழைவாயில், ஓநாய் நுழைய முடியாத அளவுக்கு மிகவும் இடுக்கமாக இருந்தது. ஆனால், அதற்குள் நுழைந்து எப்படியாவது தப்பித்து விட வேண்டும் என்ற ஆசையால் ஓநாய் கஷ்டப்பட்டு அதன் உள்ளே நுழைந்துவிட்டது.

நீண்ட நேரம் ஆன பின்பும் ஓநாய் வெளியில் வரவில்லை. அது உள்ளே என்ன செய்கிறது என்று பார்த்து வருகிறேன் என்று சொல்லி நரியும் சுரங்கத்திற்குள் சென்றது. பிறகு அதுவும் வரவே இல்லை.

பல மணி நேரத்திற்குப் பிறகுதான் தான் ஏமாற்றப் பட்டிருக்கிறோம் என்று புலி புரிந்து கொண்டது. தான் பெரிய படிப்பாளி என்பதையுமமறந்து, தன்னால்நுழைய முடியாத சுரங்கத்திற்குள் எட்டிப் பார்த்து நரியைச் சபித்து, திட்டியது.

புலி அங்கிருந்து சென்றவுடன், நரியின் உதவியுடன் சுரங்கத்திலிருந்து மிகவும் சிரமப் பட்டு வெளியே வந்தது ஓநாய். பிறகு அது உரத்த குரலில் நரியைப் பாராட்டியது.

"நீ படிக்காதவனாக இருக்கலாம், ஆனால், உன் அறிவும், திறமையும் அபாரம்தான்!" என்றது ஓநாய். "தேங்க்யு சார்!" என்றது நரி.

### சுபாஸ் சந்திரபோஸ்



நேதாஜி என்று இந்திய மக்களால் மரியாதையுடன் அழைக்கப்படும் சுபாஷ் சந்திரபோஸ் இந்தியாவில் ஒடிசா மாநிலத்தில் கட்டாக் எனும இடத்தில் 1897 ஆம் ஆண்டு ஜனவரி 23 ஆம் திகதி வங்காள இந்து குடும்ப த்தில் பிறந்தார்.

இவர் இந்திய சுதந்திரப் போராட்டத் தலைவராவார். இரண்டாம் உலகப் போர் நடைபெற்றபோது வெளிநாடுகளில் போர்க் கைதிகளாய் இருந்த நூற்றுக்கணக்கான இந்தியர்களை ஒன்றுதிரட்டி இந்திய தேசிய இராணுவத்தை உருவாக்கி அப்போது இந்தியாவை ஆட்சி செய்த ஆங்கிலேயருக்கு எதிராகத் தாக்குதல் நடத்தியவர். இவரது தந்தையின் குடும்பம் 27 தலைமுறையாக வங்க மன்னர்களின் படைத்தலைவர்களாகவும் நிதி மற்றும் போர் அமைச்சர்களாகவும் பணியாற்றி வந்த பெருமை மிக்க மரபுவழியை உடையது. இவரது தாயார் பிரபாவதிதேவி "தத்" எனும் பிரபுக்குலத்திலிருந்து வந்தவர்.

8 ஆண் பிள்ளைகளையும் 6 பெண் பிள்ளைகளையுமகொண்ட இக்குடும்பத்தில் ஒன்பதாவது பிள்ளையாகப் பிறந்தவரே சுபாஸ் சந்திர போஸ். இவரது தாயார் மிகுந்த தெய்வபக்தி மிக்கவர். அதனால் சுபாசும் சிறுவயது முதலே விவேகா னந்தர் போன்ற ஆன்மிக பெரியார்களின்பால் ஈடுபாடுடையவராயும் அவர்களின் அறிவுரைகளைப் படித்து வருபவராயும் இருந்தார். அக்காலத்தில் நாட்டுச் சூழ்நிலை பற்றி அடிக்கடி வீட்டில் விவாதங்களில் ஈடுபட்ட சுபாசைப் பார்த்த அவரது தந்தையார் இவரை அரசியலில் ஈடுபடுத்த விரும்பாது லண்டனுக்கு ஐ.சி.எஸ் தேர்வுக்குப் படிக்க அனுப்பி வைத்தார்.

சுவாமி விவேகானந்தரின் சர்வமயவாதம் பற்றிய கற்பித்தலும் தேசியவாத, சமூக சிந்தனையும் சீரமைப்பு எண்ணங்களும் சிறு வயதிலேயே இவரிடம் தாக்கத்தை ஏற்படுத்தின. இந்துசமய ஆன்மீக் கருத்துக்களே இவரின் பின்னாளைய அரசியல், சமூக எண்ணங்களுக்கு வித்திட்டதாக பல அறிஞர்கள் கருதுகிறார் கள். இந்து ஆன்மீகத்தின் தாக்கம் இருந்தாலும் இவரிடம் மதவெறியோ பழைமைவாதமோ இருக்கவில்லை . சுபாஷ் தன்னை சமதர்மவாதி என அழைத்துக் கொண்டார். இந்தியாவில் சமதர்மக் கொள்கையின் முன்னோடி சுவாமி விவேகானந்தர் என நம்பினார். 1992இல் சுபாஷ் சந்திரபோசுக்கு இறப்புக்குப் பின்னான இந்தியாவின் மிக உயரிய விருதான *பாரத ரத்னா* விருது வழங்கப்பட்டது.




## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1201 - லாத்வியாவின் ரீகா நகரம் அமைக்கப்பட்டது.
- 1868 - பிரெஞ்சு வானியல் நிபுணர் பியேர் ஜான் சென் சூரிய கிரகணத்தை ஆராயும்போது ஹீலியம் என்ற தனிமத்தைக் கண்டுபிடித்தார்.
- 1877 - செவ்வாய்க் கோளின் ஃபோபோஸ் துணைக் கோள் கண்டுபிடிக்கப்பட்டது.
- 1891 - மார்டீனிக் தீவில் நிகழ்ந்த பெரும் சூறாவளியினால் 700 பேர் கொல்லப்பட்டனர்.
- 1917 - கிறீசில் தெசலோனிக்கி என்னும் நகரில் இடம்பெற்ற தீவிபத்தில் நகரின் பெரும் பகுதி அழிந்தது. 70,000 பேர் வீடுகளை இழந்தனர்.
- 1924 - பிரான்ஸ் ஜேர்மனியிலிருந்து தனது படைகளைத் திரும்ப அழைக்க ஆரம்பித்தது.
- 1928 - சென்னை மியூசிக் அக்கடமி அதிகாரப்பூர்வமாக தொடங்கி வைக்கப்பட்டது.
- 1938 - நியூயோர்க்கையும் கனடாவின் ஒண்டாரியோவையும் இணைக்கும் ஆயிரம் தீவுகள் பாலத்தை அமெரிக்க ஜனாதிபதி பிராங்கிளின் ரூஸ்வெல்ட் திறந்து வைத்தார்.
- 1950 - பெல்ஜியம் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் ஜூலியன் லாஹூட் படுகொலை செய்யப்பட்டார்.
- 1958 - விளாடிமீர் நபகோவ் எழுதிய லொலிட்டா (Lolita) என்ற புதினம் அமெரிக்காவில் வெளியிடப்பட்டது.
- 1971 - வியட்நாம் போர்: ஆஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகியன தமது படைகளை திரும்ப அழைக்க முடிவு செய்தன.
- 1983 - டெக்சாசைத் தாக்கிய அலீசியா என்ற சூறாவளியினால் 22 பேர் கொல்லப்பட்டனர்.

**பிறப்புகள்**

- 1750 - அந்தோனியோ சாலியரி, இத்தாலிய இசையறிஞர் (இ. 1825)

**இறப்புகள்**

- 1227 - செங்கிஸ் கான், மங்கோலியப் பேரரசின் மன்னன்
- 1850 - ஹோனர் தெ பல்ஸாக், பிரெஞ்சு எழுத்தாளர் (பி. 1799)
- 1945 - நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ், (பி. 1897)
- 2009 - கிம் டாய் ஜங், தென்கொரியக் குடியரசுத் தலைவர் (பி. 1924)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிமன்றங்களுக்குள் உருளும் தயாநிதி தலை!

தயாநிதி மாறனைக் கைதுசெய்தாக வேண்டும் என தீவிரமாக இருக்கிறது சி.பி.ஐ. கைது ஆகாமல் இருப்பதற்கான எல்லா பிரயத்தனங்களையும் செய்து வருகிறார் தயாநிதிமாறன். இரு தரப்பும் தங்களின் நோக்கத்தை நிறைவேற்ற நீதிமன்றங்களில் மாறி மாறி மனுப் போட்டுக் கொண்டிருக்கின்றன. சட்டம் வழங்கி இருக்கும் அத்தனை வாய்ப்புகளையும் பயன்படுத்த தயாநிதி முயற்சிக்க... அவர் தப்பும் வழிகளை ஒவ்வொன்றாக அதே சட்டத்தின் துணையோடு 'லாக்' செய்து வருகிறது சி.பி.ஐ.!

பி.எஸ்.என்.எல் முறைகேடு!

தயாநிதி மாறன் 2004-ம் ஆண்டு முதல் 2007-ம் ஆண்டு வரை மத்திய தொலைத்தொடர்புத் துறை அமைச்சராக இருந்தார். அதிலிருந்து ஒரு சர்ச்சை வெடித்தது.

"மத்திய அமைச்சர் என்ற முறையில், அப்போது அவருக்கு 3 இலவச தொலைபேசி இணைப்புகள் வழங்கப்பட்டன. சென்னையில் உள்ள தயாநிதியின் போட் கிளப் வீட்டுக்கு இலவசமாக வழங்கப்பட்ட ஐ.எஸ்.டி.என் உயர்ரக தொலைபேசி இணைப்பை, ரகசியமாக நீட்டித்து, அதில் இருந்து 364 தொலைபேசி இணைப்புகள் உருவாக்கப்பட்டன. இதுதவிர, 19 பிரீபெய்டு சிம் கார்டுகளையும் தயாநிதி பயன்படுத்தினார். இவற்றின் மூலம் சன் தொலைக்காட்சிக்கு வீடியோ டவுண்லோடு செய்யப்பட்டது. அதனால் அரசுக்குப் பல கோடி ரூபாய் இழப்பு. பூமிக்கடியில் பள்ளம் தோண்டி ரகசியமாக உருவாக்கப்பட்ட இந்த இணைப்புகள் பி.எஸ்.என்.எல் அதிகாரிகளின் துணையோடு கொடுக்கப்பட்டன" என்று சி.பி.ஐ கடந்த 2011-ம் ஆண்டு தயாநிதி மீது வழக்குப் பதிவு செய்தது. 2013-ம் ஆண்டு இதில் எஃப்.ஐ.ஆர் பதிவு செய்யப்பட்டது.

"நான் தவறு செய்யவில்லை!"

மத்தியில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு, இந்த வழக்கில் வேகம் கூடியது. சன் டி.வி ஊழியர்கள் கண்ணன், ரவி, கௌதமன் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். டெல்லியில் உள்ள சி.பி.ஐ அலுவலகத்துக்கு விசாரணைக்கு வரச் சொல்லி, கடந்த ஜூலை 29-ம் திகதி, ஃபேக்ஸ், தொலைபேசி மூலம் தயாநிதிக்கு ஓலை அனுப்பியது. உடனே தயாநிதி, சென்னை உயர் நீதிமன்றத்தில் முன் ஜாமீன் மனுத் தாக்கல் செய்தார். அதில, "சி.பி.ஐ. என்னை மிரட்டும் தொனியில் விசாரணைக்கு அழைக்கிறது. பி.எஸ்.என்.எல் இணைப்புகளை நான் தவறாகப் பயன்படுத்தவில்லை. நான் பயன்படுத்திய இணைப்புகளுக்குப் பணம் கட்டவில்லை என்றால்... அது சிவில் வழக்கில்தான் வரும். மாறாக சி.பி.ஐ என் மீது கிரிமினல் மற்றும் ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்துள்ளது. 2004 - 2007 காலகட்டத்தில் நடந்ததாக சொல்லப்படும் இந்தப் பிரச்சினைக்கு, முதல்கட்ட விசாரணையே 2011-ம் ஆண்டில்தான் தொடங்கியது. அதன்பின், இரண்டு ஆண்டுகளுக்கு இதில் சி.பி.ஐ எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. திடீரென 2013-ம் ஆண்டில் எஃப்.ஐ.ஆர் பதிவு செய்து மீண்டும் இந்தப் பிரச்சினையைக் கிளற ஆரம்பித்தது. நான் பலமுறை விசாரிக்கப்பட்டேன். விசாரணை அனைத்துக்கும் முழு ஒத்துழைப்புக் கொடுத்தேன். 60 சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். 200 ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன ஆனால், சி.பி.ஐ-யால் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய முடியவில்லை. ஏனென்றால், நான் குற்றம் எது வும் செய்யவில்லை. எனவே, எனக்கு முன் ஜாமீன் வழங்க வேண்டும்" என்று குறிப்பிட்டிருந்தார்.

"இது சிவில் பிரச்சினை அல்ல!"

இதற்கு எதிராக சி.பி.ஐ தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பதில் மனுவில், "தயாநிதி மாறன் தனக்கு வழங்கப்பட்ட தொலைபேசி இணைப்புகளை இரகசியமாக 364 இணைப்புகளாக நீட்டித்து பயன்படுத்தியது, அதற்கான கட்டணம் பதிவு ஆகாதவாறு, தொழில்நுட்ப மோசடியில் ஈடுபட்டது, இதற்காக ரகசியமாகப் பூமிக்கடியில் பள்ளம் தோண்டி உயர்ரக ஃபைபர் கேபிள் பதித்தது, இந்த முறைகேடுகளுக்காகத் தன்னுடைய வீட்டில் ஒரு சிறிய டெலிபோன் எக்சேஞ்ஜ் அமைப்பையே நிறுவியது, இதற்காக தனது அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தி, சென்னை பி.எஸ்.என்.எல் அலுவலகத்தில் முதன்மைப் பொது மேலாளர்களாக இருந்த பிரம்மானந்தம், வேலுச்சாமி ஆகியோரை கூட்டுச்சதியில் பங்கேற்க வைத்தது போன்றவை சிவில் பிரச்சினை அல்ல. கூட்டுச்சதி, நம்பிக்கைக் துரோகம், ஏமாற்றுதல், அரசுக்கு இழப்பு ஏற்படுத்தியது, ஊழல் புரிந்தது போன்ற குற்றங்கள் இதில் அடக்கம். அதனால்தான், தயாநிதி மாறன் உள்ளிட்டவர்கள் மீது கிரிமினல் மற்றும் ஊழல் தடுப்புச்சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் இதுவரை நடைபெற்ற விசாரணைகளுக்கு சரியாக அவர் ஒத்துழைத்தது இல்லை. எனவே, அவருக்கு முன் ஜாமீன் வழங்கக் கூடாது" என்று தனது வாதங்களை அடுக்கியது.

இரு தரப்பு வாதங்களையும் பரிசீலித்த சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி சுப்பையா, தயாநிதி மாறனுக்கு 6 வார காலம் முன்ஜாமீன் வழங்கினார்.

"விளக்கமறியலில் வைத்து விசாரிக்க வேண்டும்!"

இதையடுத்து, டில்லியில், கடந்த ஜூலை 1-ம் திகதி முதல் 3-ம் திகதி வரை தயாநிதி மாறனிடம் விசாரணை நடைபெற்றது. அதன பிறகு, கடந்த 5-ம் திகதி சி.பி.ஐ சென்னை உயர் நீதிமன்றத்தில் ஒரு மனுத் தாக்கல் செய்தது. அதில் "தயாநிதி மாறன், விசாரணைக்கு சரியாக ஒத்துழைக்கவில்லை. அவர் ஏற்கனவே நடந்த விசாரணையில் சொன்ன பல தகவல்களைத் தற்போது திரும்பப் பெற்றுள்ளார். முன்னுக்குப் பின் முரணான தகவலகளை அளிக்கிறார். எனவே, அவரை முழுமையாக விளக்கமறியலில் வைத்து விசாரித்தால் தான் உண்மை வெளிவரும். எனவே, அவருக்கு வழங்கப்பட்டுள்ள முன் ஜாமீனை ரத்து செய்ய வேண்டும்" என்று மனுத் தாக்கல் செய்தது. மனுவை நீதிபதி வைத்தியநாதன் விசாரித்தார். அப்போது தயாநிதி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர்கள் ஏ.ஆர்.எல்.சுந்தரேசன், பி.எஸ்.ராமன் ஆகியோர், "தயாநிதி விசாரணைக்கு சரியாக ஒத்துழைப்பு கொடுத்துள்ளார். அவர் ஒரே ஒரு இணைப்பைத் தான் பயன்படுத்தினார். அவர் பெயரில் வேறு எந்த இணைப்புகளும் இல்லை. சி.பி.ஐ கருத்துப்படி, தயாநிதி முறைகேடாகப் பயன்



படுத்தியதாகச் சொல்லப்படும் இணைப்புகள் சன் டி.வி-க்குப் பயன்படுத்தப்பட்டதற்கு எந்த ஆதாரமும் இல்லை. அதை இன்னும் சி.பி.ஐ-யால் நிரூபிக்க முடியவில்லை. எனவே, முன் ஜாமீனை ரத்து செய்யக் கூடாது" என்று வாதிட்டனர்.

"அரசியல் காழ்ப்பு இல்லை!"

இருதரப்பு வாதங்களையும் கேட்ட சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி வைத்தியநாதன், "குற்றம் நிரூபிக்கப்படாதவரை குற்றம்சாட்டப்பட்டவரை குற்றவாளி என்று சொல்ல முடியாது. தயாநிதி பொறுப்புமிக்க அமைச்சர் பதவியில் இருந்துள்ளார். அவர் இருந்த காலகட்டத்தில், அவர் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டு அதனால் அரசாங்கத்துக்கு கோடிக்கணக்கில் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகக் குற்றம்சாட்டப்பட்டுள்ளது. இதற்கான விசாரணையில் அவர் முன்னுக்குப் பின் முரணாகத் தகவல்களை அளித்துள்ளார். முந்தைய விசாரணையில் சொன்ன தகவல்களை மறு விசாரணையில் திரும்பப் பெற்றுள்ளார். அதனால், உண்மையைக் வெளிக்கொண்டுவர அவரை முழுமையாக விசாரிக்க வேண்டியது அவசியமாகிறது. மேலும் தயாநிதி சொல்வது போல், இதை அரசியல் காழ்ப்பு உணர்ச்சி என்று சொல்ல முடியாது. அதனால், அவருக்கு வழங்கப்பட்ட முன் ஜாமீனை ரத்து செய்கிறேன். மூன்று நாள்களுக்குள் தயாநிதி சரணடைய வேண்டும். இல்லையென்றால், சி.பி.ஐ அவரைக் கைதுசெய்யலாம்" என்று அதிரடித் தீர்ப்பை அளித்தார்.

இதையடுத்து தயாநிதி மாறன் எந்த நேரத்திலும் கைதுசெய்யப்படலாம் என்ற சூழ்நிலை உருவானது. பரபரப்பாக செயல்பட்டது தயாநிதி தரப்பு.

"சி.பி.ஐ-யிடம் ஆதாரங்கள் இல்லை!"

சென்னை உயர் நீதிமன்றத்தின் உத்தரவுக்கு தடைவிதிக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றத்தில் கடந்த 11-ம் திகதி மனுத் தாக்கல் செய்தார் தயாநிதி. உச்ச நீதிமன்ற நீதிபதிகள் டி.எஸ்.தாக்கூர், பி.கோபல கௌடா, ஆர்.பானுமதி முன்பாக கடந்த 12-ம் திகதி தயாநிதி மாறன் சார்பில் ஆஜரான வழக்கறிஞர்அபிஷேக் சிங்வி, இந்த மனுவை அவசர மனுவாகக் கருதி விசாரிக்க வேண்டும் என வாதிட்டார். அதை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள், புதன்கிழமை மனுவை விசாரணைக்காக ஏற்றனர். விசாரணையின்போது, தயாநிதி மாறன் சார்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் ஷியாம் தவான், "2011-ம் ஆண்டு முதல்கட்ட விசாரணை நடைபெற்றது. அதன பின் இரண்டு ஆண்டுகள் கழித்து 2013-ம் ஆண்டு எஃப்.ஐ.ஆர் பதிவு செய்யப்பட்டது. இன்னும் இதில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படவில்லை. சன் டி.வி முறைகேடாக இணைப்புகளைப் பயன்படுத்தியதற்கு ஆதாரங்களை சி.பி.ஐ-யால் திரட்ட முடியவில்லை. அப்படி இருக்கும்போது, தயாநிதியைக் கைதுசெய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் மட்டும் சி.பி.ஐ இந்தப் பிரச்சினையை அணுகுகிறது. எனவே, இதில் அரசியல் காழ்ப்பு உள்ளது" என்று வாதிட்டார்.

"அரசியல் பாதுகாப்பில் இருந்தார் தயாநிதி!"

அதைக் கடுமையாக எதிர்த்த சி.பி.ஐ வழக்கறிஞர் முகுல் ரோத்தகி, "தயாநிதி கடந்த 2011 - 2013 காலகட்டத்தில் அரசியல் பாதுகாப்பில் இருந்தார். எனவே, அப்போது சி.பி.ஐ தயாநிதியை அணுகுவதில் பல சிக்கல்கள் இருந்தன. மேலும் இதுவரை நடைபெற்ற விசாரணைகளுக்கு தயாநிதி மாறன் சரியான ஒத்துழைப்புக் கொடுக்கவில்லை. மேலும் அரசுக்குப் பலகோடி ரூபாய் வருவாய இழப்பு ஏற்பட்ட வழக்கில், தயாநிதி வெளியில் இருந்தால் அவர் சாட்சிகளை கலைக்கக்கூடிய அபாயம் இருக்கிறது. அதனால் வழக்கு சரியான திசையில் போகாது. எனவே, அவரை விளக்கமறியலில் வைத்து விசாரிக்க வேண்டியது அவசியம்" என்று வாதிட்டார்.


இரண்டு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், சி.பி.ஐ-யிடம் கடுமையான கேள்விகளை எழுப்பினார்கள். "தயாநிதி மாறனை கைதுசெய்வதில் மட்டுமே நோக்கமாக உள்ள சி.பி.ஐ., அவர் உத்தரவின் பேரில தவறுசெய்த பி.எஸ்.என்.எல் அதிகாரிகளைக் கைதுசெய்யாதது ஏன்? இரண்டு ஆண்டுகள் தயாநிதி அரசியல் பாதுகாப்பில் இருந்ததாக சி.பி.ஐ வழக்கறிஞரே நீதிமன்றத்தில் சொல்கிறார். அப்படியானால் இந்த வழக்கில் அரசியல் காழ்ப்பு இருக்கிறது என்று நாங்கள் ஏன் கருதக் கூடாது? முறைகேடாகப் பயன்படுத்தப்பட்ட இணைப்புகள் சன் தொலைக்காட்சிக்கு பயன்படுத்தப்பட்டது என்பதற்கு என்ன ஆதாரங்களை சி.பி.ஐ வைத்துள்ளது? தயாநிதி தவறு செய்ததற்கான ஆதாரங்களாக சி.பி.ஐ வசம் என்னென்ன ஆவணங்கள் உள்ளன? அப்படி இருக்கும் ஆவணங்களையும் ஆதாரங்களையும் நீதிமன்றத்தில் சமர்ப்பியுங்கள். இந்தக் கேள்விகளுக்கு பதிலளிக்கும் வகையில், இரண்டு வாரங்களில் சி.பி.ஐ மனுத் தாக்கல் செய்ய வேண்டும். அதன்பிறகு, சி.பி.ஐ-யின் மனுவுக்கு பதில் அளிக்கும் வகையில் தயாநிதி ஒரு வாரத்தில பதில் மனுத் தாக்கல் செய்ய வேண்டும். வழக்கின் அடுத்த விசாரணை எதிர்வரும் செப்டம்பர் 14-ம் திகதி தொடரும். அதுவரை தயாநிதி மாறனைக் கைதுசெய்யக் கூடாது. சென்னை உயர் நீதிமன்றம் தயாநிதி மாறனின் முன் ஜாமீனை ரத்துசெய்து பிறப்பித்த உத்தரவுக்கு இடைக்காலத் தடை விதிக்கிறோம்" என்று உத்தரவிட்டனர்.

விசாரணைக்கு முன்பே கண்ணைக் கட்டுதே!

-யூனியர் விகடன்-



டி.எஸ்.தாக்கூர்



பி.கோபல கௌடா



ஆர்.பானுமதி



வைத்தியநாதன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



யாழ். வண் கிழக்கு கலட்டி எச்சாட்டி மஹாமாரி அம்மன் ஆலய தேர்த்திருவிழா அண்மையில் இடம்பெற்ற போது...

## நல்லூர்க்கந்தனின் மஹோற்சவம் நாளை ஆரம்பம்

# ஆலயத்தின் வெளிவீதியினை பக்திமயமானதாகப் பேணுக

(யாழ்ப்பாணம்)

**நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவம் நாளை ஆரம்பமாகவுள்ள நிலையில் ஆலயத்தின் புனிதத் தன்மையினை பேண வெளிவீதியை பக்தி மயமாக வைப்பதற்கு பக்தர்கள் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென நல்லூர் தேவஸ்தானத்தினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.**

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் மஹோற்சவம் நாளை ஆரம்பமாகி தொடர்ந்து 25 நாட்கள் நடைபெறவுள்ளன.

அந்தணர்கள், பணியாட்கள், பக்தர்களின் உதவியால் ஒவ்வொரு முறையும் திருவிழாக்கள் வெகு சிறப்பாக நடைபெற்று வருகின்றது. பக்தியை வளர்ப்பதற்காக பல்வேறு புனித்துவமான செயற்பாடுகளை தேவஸ்தானம் நிறைவேற்றி வருகின்றது.

அந்தவகையில் இம்முறைசுவாமி வலம்வரும் வெளி வீதியைப் பக்தி மயமாக்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

அதில் வெளி வீதியைச் சுற்றி விளம்பரப் பலகைகள், அரசியல் விளம்பரங்கள் என் பன தடை செய்யப்பட்டு சிவனையும் சக்தியையும் குறிக்கும் சிவப்பு வெள்ளை நிறத்திலான துணிகள் கட்டப்பட்டுள்ளன.

இந்த எல்லை பக்தர்களின் மனதை ஒருமுகப்படுத்தி பக்தியை அனுபவிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இம்முறை நல்லூர் ஆலயச் சூழலில் நடைபாதை வியாபாரம் முற்று முழுதாகத் தடை செய்யப்பட்டுள் ளது. இதற்குப் பொலிஸார் முழு ஒத்துழைப்பு வழங்குவதாக கூறியுள்ளார்கள். அத்துடன் அனைத்து மக்களும் சமம் என வேறுபாடின்றி கலந்து கொள்ளும் ஒரேயொரு கோவிலாக நல்லூர் கந்தசுவாமிகோவில்காணப்படுகின்றது.

அனைத்துப் பக்தர்களின் பங்களிப்பினையும் பெற்றுக்கொள்ளும் வகையில் அர்ச்சனைப் பற்றுச்சீட்டை ஒரு ரூபாவிற்கு பெற்றுக் கொள்ள முடியும்.

வழமை போன்று குறிக்கப்பட்ட நேரத்திற்குள் திருவிழாக்கள் நடைபெறும்.

வெளியில் இருந்து வரும் பக்தர்கள் மிகவும் பக்திபூர்வமாக பெருமானின் சிந்தனையுடன் ஆலய எல்லைக்குள் வலம்வரவேண்டும் என்பதுடன் கடந்த முறை திருவிழாவைவிட வெகுசிறப்பாக இம்முறை திருவிழா நடைபெறுவதற்கு பக்தர்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என நல்லூர் ஆலய தேவஸ்தானத்தால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (இ-9)

# பாண் வியாபாரியை தாக்கிய இருவர் சரண்

(யாழ்ப்பாணம்)


மீசாலை பகுதியில் பாண் வியாபாரத்தில் ஈடுபட்ட வான் சாரதி மற்றும் விற்பனையாளரை தாக்கிய சந்தேக நபர்கள் இருவர், கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரி நீதிமன்றில் சரணடைந்துள்ளதாக கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 5 ஆம் திகதி மீசாலை பகுதியில் பாண் வியாபாரத்தில் ஈடுபட்ட வாகனத்தை மறித்த சிலர் சாரதி மற்றும் விற்பனையாளரை தாக்கியிருந்தனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணை மேற்கொண்ட கொடிகாமம் பொலிஸார், சம்பவத்துடன் தொடர்புடைய ஐவரை அன்றையதினமே கைது செய்து மறுநாள் சாவகச்சேரி பதில் நீதவான் முன்னிலையில் முற்படுத்திய போது, நீதவான், குறித்த ஐவரையும் 14 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டிருந்தார்.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் இருவர் பொலிஸாரால் தேடப்பட்டு வந்த நிலையில், அவ் இருவரும் நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் சரணடைந்துள்ளனர்.

இதனையடுத்து நீதவான் முன்னிலையில் ஆஜரான இருவர் உட்பட ஏழு பேரின் விளக்கமறியலை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை நீடித்து உத்தரவிட்டதாக கொடிகாமம் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (இ-7)




வலி.மேற்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரனால் முன்னெடுக்கப்பட்ட சமூகப் பணியின் வாயிலாக லண்டனில் வசிக்கும் வைத்தியர் ரவி என்பவர் போரினால் இரண்டு கண்களையும் இழந்த ஒருவருக்கு 50 ஆயிரம் ரூபா பணத்தை சிறுகைத்தொழில் உதவிக்காக அண்மையில் வழங்கியுள்ளார்.

இதில் கீரிமலை வீதி சித்தன்கேணியில் வசிக்கும் மாணிக்கம்-குணரத்தினம் என்பவருக்கே மேற்படி தொகை வழங்கப்பட்டுள்ளது.

# மஹோற்சவ காலத்தில் 600 பொலிஸார் கடமையில்

## பொறுப்பதிகாரி வூட்லர் தகவல்



(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தசுவாமிகோவில் வருடாந்த மஹோற்சவத்திற்கு பாதுகாப்புக் கடமையில் ஈடுபடவென 600 பொலிஸார் நியமிக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி வூட்லர் தெரிவித்துள்ளார்.

நல்லூர்க்கந்தசுவாமி கோவில் மஹோற்சவம் நாளை ஆரம்பமாகவுள்ள நிலையில் இன்றையதினம் 3 மணி தொடக்கம் பொலிஸார் தமது பாதுகாப்பு கடமையில் ஈடுபடவுள்ளனர்.

உற்சவ காலம் முடியும் வரை பொலிஸார் உரிய முறையில் தமது கடமைகளை செய்யவுள்ளனர். இதற்கு பக்தர்களும் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-9)

## சூதாடிய ஒன்பது பேர் கைது

(யாழ்ப்பாணம்)

குப்பிளான் ஊரான்மனை பகுதியில் சூதாடிய ஒன்பது பேரை கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்துள்ளதாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதான ஒன்பது பேரிடமும் இருந்து சூதாட தயாராக வைத்திருந்த தலா 3 ஆயிரம் ரூபாய் வீதம் 27 ஆயிரம் ரூபாய் பணத்தினை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைதான நபர்களுக்கு எதிராக மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (இ-7)




## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

வேலணை பெருங்குளம் ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோவில் வருடாந்த உற்சவம் நாளை புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 26 ஆம் திகதி தீ மிதிப்பு திருவிழாவும் 27 ஆம் திகதி சப்பறத் திருவிழாவும் 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் 29 ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் 30 ஆம் திகதி பூங்காவனத்திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (இ-3)

# வீதியின் புனரமைப்புப்பணிகளை விரைவுபடுத்துமாறு கோரிக்கை



வலி.மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட தேவாலய வீதியின் புனரமைப்பு வேலைகளை விரைவாக செய்து முடிக்கும் படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்தில் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

2015 ஆம் ஆண்டு வேலைத் திட்டத்தின் கீழ் பல்வேறு வீதிகள் புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்ற நிலையில் தேவாலய வீதியின் புனரமைப்பு பணிகள் 3 கிழமைகளுக்கு மேலாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

குறித்த வீதியூடாக பாடசாலை கரச்சி இந்து கிறிஸ்தவ மயானம் என்பவற்றுக்கான பயணங்கள் இடம்பெற்று வருகின்றன.

இந்த வீதி குன்றும் குழியுமாக காணப்படுவதால் வீதியால் பயணம் செய்வோர் பாரிய சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட வலி. மேற்கு பிரதேச சபை அதிகாரிகளிடத்தில் தொடர்பு கொண்டு கேட்ட போது கிராமத்துக்கு ஒரு மில்லியன் திட்டத்தின் கீழ் பல வீதிகளின் புனரமைப்பு பணிகள் இடம்பெறுகின்றன.

தற்போது முதற்கட்ட பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில் அடுத்த கட்ட பணிகள் வெகு விரைவில் ஆரம்பமாகவுள்ளதாக மேலும் தெரிவித்தனர். (இ-9)



நீர்வேலி காமாட்சி அம்பாள் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு நிகழ்வு அண்மையில் இடம்பெற்ற போது....

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கண்ணாடி வழங்கும் நிகழ்வு



கண்பார்வை குறைந்தவர்களுக்கு கண் பரிசோதனை செய்யப்பட்டு சங்கானை லயன்ஸ் கழகத்தால் கண்ணாடி வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் வலிகாமம் தொல்புரம் பகுதி மக்களுக்கு தொல்புரம் சர்வோதய நிலையத்திலும், தென்மராட்சி மக்களுக்கு வரணி இரண்டாம் குறிச்சி பொது நோக்கு மண்டபத்திலும் வைத்து அண்மையில் வழங்கப்பட்டது.

சர்வதேச லயன்ஸ் கழகத்தின் இலங்கை 306B1 மாவட்டத்தின் பிராந்திய இணைப்பாளர் லயன் தேவாபீற்றரால் கண்ணாடிகள் அன்பளிப்பு செய்யப்பட்டன.

கண்பார்வை குறைந்த மக்களுக்கான கண்ணாடிகளை மாவட்டத் தலைவர் லயன்.ஆர்.ஜெயபாலன், சங்கானை லயன்ஸ் கழகத்தின் தலைவர் லயன்.ஜெ.றஜீவன், சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் தலைவர் பு.தினேஸ்குமார், சங்கானை லயன்ஸ் கழகத்தின் இயக்குனர் லயன். ஆ.குணசேகரம் ஆகியோர் வழங்கி வைத்தனர். (இ-7)

# தலைமறைவானார் சுசில்?

(கொழும்பு)

**முன்னாள் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தலைமறைவாகி இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.**

கடந்த வாரம் சுசிலையும் அநுரவையும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆகியவற்றின் செயலாளர் பதவிகளிலிருந்து ஜனாதிபதி நீக்கியிருந்தார்.

இதனையடுத்து புதிதாக நியமிக்கப்பட்ட செயலாளர்கள் இருவரும் அநுர யாப்பா மற்றும் சுசில் பிரேமஜயந்த ஆகியோர் தங்கள் கடமைகளில் குறுக்கிடாமல் இருப்பதற்கான இடைக்காலத் தடை உத்தரவு ஒன்றையும் பெற்றுக் கொண்டுள்ளனர்.

எனினும் குறித்த நீதிமன்றத் தடை உத்தரவு இதுவரை அநுர யாப்பா மற்றும் சுசில் பிரேமஜயந்த ஆகியோரிடம் கையளிக்கப்படவில்லை. இருவரும் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி மறைவிடங்களில் தங்கியிருப்பதே அதற்கான காரணமாக கூறப்படுகின்றது.

அத்துடன் முன்னாள் அமைச்சர்கள் இருவரின் வீடுகளின் முன்னாலும் நீதிமன்ற கட்டளையுடன் பொலிஸார் தொடர்ந்தும் காத்திருக்கின்றனர்.

இந்நிலையில் சுசிலின் தொலைபேசியும் அணைத்து வைக்கப்பட்டுள்ளது.

அநுர யாப்பா நீதிமன்ற உத்தரவு கையளிக்கப்படும் பட்சத்தில் அதனை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். (இ-7)

# விமலின் இணையத்தளம் ஊடாக தொடர் பிரசாரம்

பொது தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகளை கடந்த 14 ஆம் திகதி நள்ளிரவுடன் நிறைவு செய்யுமாறு தேர்தல் சட்டத்திற்கமைய அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் விமல் வீரவன்சவின் இணையத்தளம் ஊடாக நேறறும் பிரசார நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டு ள்ளன.

முன்னாள் பொது செயலாளரின் காணொலி ஒன்று நேற்று முன்தினம் இரவு குறித்த இணையத் தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு ள்ளது.

குறித்த காணொலியில் தங்கள் கட்சிக்கு வாக்களிக்குமாறு அவர் கேட்டு கொண்டுள்ளார்.

தேர்தல் சட்டங்களை மீறும் இவ்வறான நபர்களை நாடாளுமன்றத்திற்கு அனுப்புவதனை குறித்து இந்நாட்டு மக்கள் மிகவும் சிந்தித்து செயற்பட வேண்டும் எனவும் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 70 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 80 | 90 | 100 | 90 |
| பச்சைமிளகாய் | 150 | 150 | 250 | 200 | 160 |
| தக்காளி | 100 | 80 | 100 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 60 | 60 | 60 | 60 |
| கோவா | 40 | 80 | 60 | 80 | 80 |
| கரட் | 100 | 140 | 100 | 160 | 120 |
| பூசணி | 30 | 40 | 50 | 50 | 40 |
| புடோல் | 30 | 30 | 70 | 60 | 40 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 40 | 60 |
| சின்ன வெங்காயம் | 100 | 80 | 100 | 100 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 80 | 110 | 120 | 120 |
| பாகற்காய் | 100 | 80 | 150 | 80 | 100 |
| வெண்டிக்காய் | 40 | 40 | 80 | 80 | 40 |
| கருணைக் கிழங்கு | 100 | 80 | 100 | 120 | 100 |
| பயற்றங்காய் | 30 | 50 | 70 | 60 | 60 |
| லீக்ஸ் | 100 | 80 | 70 | 100 | 80 |
| பீற்றூட் | 30 | 40 | 30 | 60 | 80 |
| கறிமிளகாய் | 100 | 120 | 120 | 100 | 120 |
| முருங்கைக்காய் | 30 | 150 | 80 | 100 | 100 |
| போஞ்சி | 200 | 140 | 120 | 160 | 140 |
| கத்தரிதம்புள்ள | 40 | 80 | 60 | 60 | 60 |
| கீரை - 1 பிடி | 10 | 30 | 20 | 30 | 20 |
| தேசிக்காய் | 40 | 50 | 100 | 120 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 25-40 | 40 | 40 | 35-45 | 40 |
| இராசவள்ளி | 200 | 140 | 120 | – | 120 |
| வெங்காயப்பூ | 100 | 150 | – | 200 | 160 |
| முள்ளங்கி | 40 | 30 | 60 | 80 | 40 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 30 | 30 | 20 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 20 | 20 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 463

Search for people, places and things | Nagendram | Home


திவ்யா




ஏகாம்பரம்




விவேகானந்



மன்மதநாயகம்




கனகராஜ்




மோகன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5 கோடி வாக்காளரை நேரில் சந்திக்க ஜெயலலிதா திட்டம்

தமிழக வாக்காளர்களை நேரடியாக சந்தித்து அரசின் சாதனைகளை எடுத்து சொல்ல முதல்வர் ஜெய லலிதா புதிய திட்டம் ஒன்றை அறிவி த்துள்ளார்.


முதல்வர் ஜெயலலிதா நேற்று முன் தினம் வெளியிட்ட அறிக்கையில், தமிழகத்தில் உள்ள 64,094 வாக் குச்சாவடிகளுக்கு உட்பட்ட ஏறத்தாழ 5,62,06,547 வாக்காளர்களையும் அ.தி.மு.க சார்பில் நேரடியாக சந்திக்க, ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் ஒரு வாக்கு சேகரிப்பாளர் நியமிக்கப்பட்டு, அ.தி.மு.க அரசின் சாதனைகளை எடுத்துக் கூறுவது இன்றியமையாதது.

இப்பணியை எனது பெயரில் செயற்பட்டு வரும் பேரவை மேற்கொள்ளும்.

பேரவையின் சார்பில் நியமிக்கப்படும் ஒவ்வொரு வாக்கு சேகரிப்பாளரும், சம்பந்தப்பட்ட வாக்குச்சாவடிக்கு உட்பட்ட அ.தி.மு.க நிர்வாகிகளு டன் சென்று அந்தப் பகுதியில் உள்ள அனைத்து வாக்காளர்களையும் எத்தனை முறை சந்திக்க இயலுமோ அத்தனை முறை சந்தித்து அதிமுக அரசின் சாதனைகளை எடுத்துரைக்க முடிவு செய்துள்ளதாக ஜெயலலிதா தெரிவித்துள்ளார். (3)

# ஜம்மு காஷ்மீர் எல்லையில் பதற்றம் தூதுவரை அழைத்து இந்தியா கண்டனம்

**ஜம்மு காஷ்மீர் எல்லையில் இந்திய இராணுவ நிலைகள் மீது, பாகிஸ்தான் இராணுவத்தினர் நேற்று முன்தினம் 2-வது நாளாக தொடர்ந்து தாக்குதலில் ஈடுபட்டனர். இதில் பஞ்சாயத்து தலைவர், சிறுவன், பெண் உட்பட 6 பேர் பரிதாபமாக பலியாகினர். இந்திய வீரர்கள் தகுந்த பதிலடி கொடுத்து வருகின்றனர். இதனால் எல்லையோர கிராமங்களில் பதற்றம் நிலவுகிறது.**



இந்தியாவின் 69-வது சுதந்திர தினம் நேற்று முன்தினம் கொண்டாடப்பட்டது. கடந்த சில மாதங்களாக பாகிஸ்தான் இராணுவத்தினர் காஷ்மீர் எல்லையில் தாக்குதல் நடத்தி வருகின்றனர். இதனால் சுதந்திர தினத்தன்று இந்தியா - பாகிஸ்தான் இடையே இனிப்புகள் பரிமாற்றத்தை மத்திய அரசு இரத்து செய்துவிட்டது. எனினும், பாகிஸ்தான் சுதந்திர தினத்துக்கு பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்தார்.

அதேபோல, இந்திய சுதந்திர தினத்துக்கு பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் வாழ்த்து தெரிவித்தார். மேலும், "இரு நாடுகளுக்கு இடையில் சுமுக உறவு ஏற்பட விரும்புகிறேன்" என்றும் கூறியிருந்தார்.

ஆனால், காஷ்மீர் எல்லையில் உள்ள இந்திய இராணுவ நிலைகள் மீது பாகிஸ்தான் இராணுவத்தினர் நேற்று முன்தினம் காலையிலிருந்து தாக்குதல் நடத்தினர். நேற்று 2-வது நாளாக இந்தத் தாக்குதல் நடந்தது. அதற்கு இந்திய வீரர்கள் தகுந்த பதிலடி கொடுத்து வருகின்றனர்.

பூஞ்ச் மாவட்டம் பாலகோட் பகுதியில் சுதந்திர தினத்தன்று பாகிஸ்தான் இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் பஞ்சாயத்து தலைவர், சிறுவன், பெண் உட்பட 5 பேர் உயிரிழந்தனர். இரவு ஏழு மணி வரை பாகிஸ்தான் இராணுவத்தினர் தொடர்ந்து வெடிகுண்டுகள் வீசியும் துப்பாக்கிச் சூடு நடத்தியும் தாக்குதலில் ஈடுபட்டனர். அதன் பின்னர் நள்ளிரவு 12 மணிக்கு மேல பாகிஸ்தான் இராணுவம் தாக்கியதில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். இவர்களுடன் சேர்த்து 2 நாள் தாக்குதலில் எல்லையில் பலியானோரின் எண்ணிக்கை 6 ஆக உயர்ந்துள்ளது.

பாகிஸ்தான் இராணுவத்தினரின் அத்துமீறலைத் தொடர்ந்து எல்லையோரம் உள்ள கிராம மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு இந்திய இராணுவ வீரர்கள் அழைத்துச் சென்றனர்.

பாகிஸ்தான் இராணுவத்தினர் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருவதால், காஷ்மீர் எல்லையோர கிராமங்களில் பதற்றம் நிலவுகிறது.

இதேவேளை இந்தியாவுக்கான பாகிஸ்தான் தூதர் அப்துல் பாஸித்தை, வெளியுறவுத் துறை செயலர் அனில் வாத்வா வரவழைத்து காஷ்மீர் எல்லையில் பாகிஸ்தான் இராணுவத்தினர் நடத்தி வரும் தாக்குதலுக்கு அவரிடம் கடும் எதிர்ப்பு தெரிவித்தார்.

அதன்பிறகு பேசிய பாகிஸ்தான் தூதர் பாஸித், "சண்டை நிறுத்த ஒப்பந்தத்தை மீறுவது யார் என்பதை நிர்ணயிக்க சீரிய ஏற்பாடு செய்யவேண்டும்" என்று வலியுறுத்தினார். எதிர் வரும் 23-ம் திகதி இந்தியா - பாகிஸ்தான் தேசிய பாதுகாப்பு ஆலோசகர்களின் கூட்டத்தை டில்லியில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இதில் இந்திய ஆலோசகர் அஜித் டோவல், பாகிஸ்தான் ஆலோசகர் சர்தாஜ் அஜீஸ் ஆகியோர் முதல் முறையாக பங்கேற்கின்றனர். இந்தக் கூட்டத்தில் தீவிரவாத தாக்குதல் குறித்து விவாதிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. (3-7)

## அப்துல் கலாமின் சிலை அமைக்க பொது அமைப்புக்கள் ஆர்வம்

(விஜயவாடா)

முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் கடந்த மாதம் 27ம் திகதி மரணம் அடைந்தார்.

மாணவர்கள் மற்றும் இளைஞர்களின் எழுச்சி நாயகனாக திகழ்ந்த அவரை பல்லாயிரக் கணக்கான மக்கள் தங்கள் மானசீக குருவாக ஏற்றுள்ளனர்.

இதனை நிரூபிக்கும் வகையில் ராமேஸ்வரத்தில் நடைபெற்ற அவரது இறுதி நிகழ்ச்சியில் இலட்சக்கணக்கான மக்கள் திரண்டு வந்து அஞ்சலி செலுத்தினார்கள்.

ஒரு அரசியல் தலைவருக்கு வைப்பது போல நாடு முழுவதும் அவரது மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் பனர்கள் வைத்து தங்களது மன சோகத்தை பலர் வெளிப்படுத்தியிருந்தனர்.

இப்படி மக்களின் தலைவராக விளங்கிய அப்துல் கலாமுக்கு நாடு முழுவதும் சிலை அமைக்கும் முயற்சியில் பல கல்வியாளர்கள் மற்றும் தன்னார்வ அமைப்பு நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன.

இதற்காக பல மாநிலங்களில் உள்ள சிற்ப கூடங்களில் அவரது சிலை தயாராகி வருகிறது. ஆந்திர மாநிலம் விஜயவாடா அருகே உள்ள சாய்பாபா சிற்ப கலைக்கூடத்தில் அப்துல் கலாமின் 50க்கும் மேற்பட்ட சிலைகள் தயர்ராகி வருகிறது. ஆந்திரா, தெலுங்கானாவின் பல்வேறு இடங்களிலிருந்து அங்கு ஓடர்கள் குவிகிறது.

ஏனாம் எம்.எல்.ஏ., மல்லாடி கிருஷ்ணாராவ், விஜயவாடா மத்திய தொகுதி எம்.எல்.ஏ. போண்டா உமாமகேஸ்வரராவ், பர்ச்சூர் எம்.எல்.ஏ. சாம்பசிவராவ், பட்டஞ்சேறு டி.ஆர்.எஸ். எம்.எல்.ஏ. மகிபிலா ரெட்டி, முன்னாள் காங்கிரஸ் எம்.எல்.ஏ. ஜக்கா ரெட்டி உட்பட பல்வேறு கல்லூரிகள், தன்னார்வ அமைப்புகள் அங்கு அப்துல் கலாமின் சிலை செய்வதற்கு ஓடர்கள் செய்து ள்ளனர்.

சிற்ப கூடத்தை சேர்ந்த சிற்பிகள் சிவவார பிரசாத், காமதேனு பிரசாத் ஆகியோர் தலைமையில் சிலைகள் தயாராகி வருகிறது.

இதுகுறித்து சிவவார பிரசாத் கூறுகையில், அப்துல் கலாமின் சிலைக்கான ஓடர்கள் எங்களுக்கு வந்த வண்ணம் உள்ளன.

7 அடி உயர வெண் கல சிலை அமைக்க ரூ.5 இலட்சம் ஆகிறது. சிலர் மார்பளவு சிலையை கேட்கிறார்கள். 8 சிற்பிகள் உதவியுடன் நாங்கள் வெண்கலம் மற்றும் பைபர் சிலைகளை வடிவமைத்து வருகிறோம். 50க்கும் மேற்பட்ட பணிகள் தற்போது நடந்து வருகிறது. அப்துல்கலாம் மீது மக்கள் வைத்துள்ள மதிப்பும், மரியாதையும் இது காட்டுகிறது என்று அவர் கூறினார். (3-7)

## அபுதாபியில் கோவில் கட்ட ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அனுமதி

(அபுதாபி)

அபுதாபியில் முதல் முறையாக கோவில் கட்டுவதற்கு நிலம் வழங்க முடிவு செய்துள்ளது ஐக்கிய அரபு எமிரேட்ஸ்.


இரண்டு நாள் சுற்றுப்பயணமாக ஐக்கிய அரபு எமிரேட்ஸிற்கு பிரதமர் நரேந்திர மோடி சென்றுள்ளார். இந்நிலையில் அவர் வருகையையொட்டி அபுதாபியில் கோவில் கட்டுவதற்கு நிலம் வழங்க அந்நாட்டு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதற்கு பிரதமர் மோடி நன்றி தெரிவித்துள்ளார். மேலும் இது தனிச் சிறப்புமிக்க ஒரு முடிவு எனவும் அவர் தெரிவித்துள்ளார்.


கோவில் கட்டுவதற்கு நிலம் வழங்க முடிவு செய்யப்பட்டிருப்பதன மூலம் அங்கு வாழ்ந்து வரும் இந்தியர்களின் நீண்ட நாள் கனவு நிறைவேறியிருப்பதாக வெளியுறவுத் துறை அமைச்சக செய்தித்தொடர் பாளர் விகாஸ் சுவரூப் தனது டுவிட் டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய எமிரேட்ஸ் நாடுகளின மக்கள்தொகையில் 30 சதவீதம் இந்தியர்களாவர். சுமார் 2.6 மில்லியன் இந்தியர்கள் அங்கு இருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (3-7)

# தேர்மீது பெற்றோல் குண்டு வீச்சு 4 வீடுகள் தீ வைத்து எரிப்பு

### 11 பெண்கள் உட்பட 70 பேர் கைது





விழுப்புரம் மாவட்டம் சங்கராபுரம் அருகே மாரியம்மன் கோயில் தேரோட்டத்தில் ஏற்பட்ட மோதலில் தேர் மற்றும் 4 வீடுகள் தீ வைத்து எரிக்கப்பட்டன. இதனால் வன்முறையைக் கட்டுப்படுத்த பொலிஸார் வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டனர். மேலும் ஊரடங்கு உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

விழுப்புரம் மாவட்டம் சங்கராபுரம் அருகே உள்ளது சேஷசமுத்திரம் கிராமம். இக் கிராமத்தில் 79 குடும்பங்களை சேர்ந்த சுமார் 250 பேர் வசித்து வருகின்றனர்.

இவர்கள் அந்த பகுதியில் மாரியம்மன் கோயில் கட்டி வழிபாடு நடத்தி வருகின்றனர். கோயிலில் தேரோட்டம் நடத்துவது தொடர்பாக இருபிரிவினரிடையே பிரச்சினை இருந்து வருகிறது.

இதனால் கடந்த 4 ஆண்டுகளாக் தேரோட்டம் நடைபெறவில்லை. சட்டம் ஒழுங்கை காரணம் காட்டி மாவட்ட நிர்வாகமும் தேரோட்டம் நடத்த தடை விதித்தது.

இந்நிலையில் இந்த ஆண்டு தேரோட்டத்தை நடத்த சங்கராபுரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை பேச்சுவார்த்தை நடைபெற்றது. கிராமத்தை சேர்ந்த இருபிரிவினரும் கலந்துகொண்ட இந்தக் கூட்டத்தில் உடன்பாடு ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து நேற்று முன்தினம் தேரோட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டது.

தேரை பொதுப்பாதை வழியாக இழுத்துச்செல்வது என்றும் முடிவு செய்யப்பட்டது. இதையடுத்து அதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வந்தன. தேர் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்தது. விழாவை யொட்டி பொலிஸாரும் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

இதற்கிடையே நேற்றுமுன்தினம் இரவு தேர் நிறுத்தப்பட்டிருந்த இடத்துக்கு எதிர்த்தரப்பை சேர்ந்தவர்கள் திரண்டு வந்தனர். அவர்கள் திடீரென தேர் மீது பெட்ரோல் குண்டுகளை வீசினர். இதில் தேர் எரிந்து சேதமடைந்தது. தீயை அணைக்க முயன்ற பொலிஸார் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

இதைத் தொடர்ந்து ஒரு கும்பல் தெருவிளக்குகளை அடித்து நொறுக்கி மின் இணைப்பை துண்டித்தது. இந்த சமயத்தில் அந்த பகுதியில் உள்ள 4 வீடுகள் தீ வைத்து கொளுத்தப்பட்டன.

இதைத் தொடர்ந்து பொலிஸார் அப்பகுதிக்கு விரைந்தனர். ஆனால கிராமத்துக்குள் பொலிஸார் நுழைய ஒருதரப்பினர் எதிர்ப்பு தெரிவித்ததால் வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டபடி பொலிஸார் உள்ளே நுழைந்து தடியடி நடத்தினர். அப்போது பொலிஸார் மீது வன்முறை கும்பல் கற்களை வீசித் தாக்கியது.

இதில் எஸ்.பி. நரேந்திர நாயர் உட்பட 10 பொலிஸார் காயமடைந்தனர். அவர்களுக்கு உடனடியாக முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது. இதையடுத்து தீ வைக்கப்பட்ட தேர் பாதுகாப்புடன் கள்ளக்குறிச்சி கோட்டாட்சியர் அலுவலகத்துக்கு கொண்டு செல்லப்பட்டது.

நேற்று அதிகாலை 5 மணிக்கு வீடுவீடாக சோதனை மேற்கொண்ட பொலிஸார் 11 பெண்கள் உட்பட 70 பேரை கைது செய்து விசாரணை நடத்தினர்.

இந்த சம்பவத்தை தொடர்ந்து சேஷசமுத்திரம் பகுதியில் 144 தடை உத்தரவை கள்ளக்குறிச்சி கோட்டாட்சியர் மாலதி பிறப்பித்துள்ளார். தொடர்ந்து பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். (3-7)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## போதைப்பொருள் குறித்த

# உளவுத்தகவல்களை நானே வழங்கினேன்

(கொழும்பு) —

**போதைப்பொருள் குறித்த உளவுத் தகவல்களை தாமே வழங்கியதாக கமபல விதானகே சமந்த குமார எனப்படும் வெலே சுதா தெரிவித்துள்ளார்.**

பாரியளவில் போதைப் பொருள் மறைத்து வைக்கப்பட்ட இடங்கள் பற்றிய தகவல்களை நானே வழங்கினேன்.

ட்ரக்டர் என்ஜின், ட்ரக்டர் டயர் ஆகியவற்றுக்குள்ளும், களனியில் ஹைபிரைட் வாகனமொன்றிற்குள்ளும் போதைப்பொருள் கடத்தப்பட்ட சம்பவங்கள் தொடர்பிலான தகவல்களையும் நானே வழங்கினேன்.

இவ்வாறு போதைப்பொருட்களை கண்டுபிடிக்க ஒத்துழைப்பு வழங்கிய போதிலும் பொலிஸார்


### வெலே சுதா ஒப்புதல்

என்னை போதைப்பொருள் கடத்தல் மன்னனாக அடையாளப்படுத்துகின்றனர் என தெரிவித்துள்ளார்.

எட்டு கிராம் எடையுடைய ஹெரோயின் போதைப்பொருளை வைத்திருத்தல் மற்றும் விநியோகம் செய்தல் தொடர்பில் கொழும்பு உயர் நீதிமன்றில் தொடரப்பட்டுள்ள வழக்குத் தொடர்பிலான விசாரணைகளின போது நேற்று முன்தினம் வெலே சுதா இதனைத் தெரிவித்துள்ளார்.

வழக்கு நாளாந்த அடிப்படையில் விசாரணை செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஜனாதிபதி மைத்திரியும் முன்னாள் ஜனாதிபதியும் கந்தே விகாரையில் வழிபாடுகளில் ஈடுபட்டனர்



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும், தேர்தல் நடைபெறுவதற்கு முன்னதாக அளுத்கம கந்தே விகாரையில் வழிபாடுகளில் ஈடுபட்டுள்ளனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் மாலை அளுத்கம கந்தே விகாரைக்கு சென்று வழிபாடுகளில் ஈடுபட்டுள்ளார்.

அறிவிக்காமல் திடீரென இவ்வாறு குடும்ப உறுப்பினர்களுடன் மாலை 6.35 முதல் 7.05 வரையில் வழிபாடுகளில் ஈடுபட்டுள்ளார்.

மிகவும் வரையறுக்கப்பட்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்களுடன் அவர் இவ்வாறு வழிபாடுகளில் ஈடுபட்டுள்ளார்.

ஜனாதிபதியின் வருகை விகாரையில் அமைக்கப்பட்டுள்ள பொலிஸ் சோதனைச் சாவடிக்குக் கூட அறிவிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஹெலிகொப்டர் ஊடாக கந்தே விகாரைக்கு சென்றுள்ளார்.

வேட்பாளர்கள் குமார வெல்கம, ரோஹித அபேகுணவர்தன மற்றும் பியல் நிசாந்த ஆகியோரும் முன்னாள் ஜனாதிபதியுடன் இவ்வாறு விகாரைக்கு வழிபாடுகளில் ஈடுபடும் நோக்கில் சென்றுள்ளனர்.

ஹெலிகொப்டர் மூலம் கட்டுகுறுந்த முகாமிற்கு சென்று அங்கிருந்து வாகனம் வழியாக கந்தே விகாரைக்கு மகிந்த சென்றுள்ளார்.

மிக முக்கியமான தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் ஜனாதிபதியும், முன்னாள் ஜனாதிபதியும் ஒரே விகாரைக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டமைக்கான காரணங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

அளுத்கம கந்தே விகாரை வரலாற்று சிறப்பு மிக்க பௌத்த விகாரைகளில் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வார இறுதிப்பத்திரிகைகளுக்கு தடைபோட்ட தேர்தல் ஆணையர்

வார இறுதிப் பத்திரிகைகளை விற்பனை செய்யக்கூடாது என்று தேர்தல்கள் ஆணையாளர் கடுமையான உத்தரவு பிறப்பித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் வெளியான சிங்கள வார இறுதிப் பத்திரிகைகளில் முதல்பக்கத்தில் மகிந்த அரசாங்கத்தின் ஊழல்கள் மற்றும் நல்லாட்சி அரசாங்கத்தின் சாதனைகள் தொடர்பான விளம்பரங்கள் இடம்பெற்றிருந்தன.

இதற்காக பழைய பத்திரிகைச் செய்திகளை வெட்டியெடுத்து, ஒட்டி உண்மையான பத்திரிகை முன்பக்கம் போன்றே தயார் செய்திருந்தார்கள்.

இந்த விளம்பர உத்தி காரணமாக மகிந்த அரசின் ஊழல்கள் மக்கள் மத்தியில் மீண்டும் ஞாபகப்படுத்தப்பட்டு ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவான மனோநிலை மக்கள் மத்தியில் உருவாகத் தொடங்கியது.

இதனையடுத்து மகிந்த தரப்பினர் தேர்தல்கள் ஆணையத்தில் இது தொடர்பாக புகார் கொடுத்திருந்தனர்.

சம்பவம் தொடர்பில் விரிவாக ஆராய்ந்த தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய, வார இறுதிப் பத்திரிகைகளை நேற்று விற்பனை செய்வதற்குத் தடை விதித்துள்ளார்.

பொதுவாக வெள்ளிக்கிழமைகளில் வெளியாகும் சிங்கள மொழி வார இறுதிப் பத்திரிகைகள் திங்கள் வரை விற்பனை செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது. (இ-7)

### முன்னாள் கடற்படைத் தளபதி ஜனாதிபதி ஆலோசகராக நியமனம்



முன்னாள் கடற்படைத் தளபதி ஜனாதிபதி ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் ஜயந்த பெரேராவே இவ்வாறு ஜனாதிபதியின் ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கடல் விவகாரங்கள் தொடர்பிலான ஆலோசகராக அட்மில் ஜயந்த பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறி

# இன்று ஒரு தகவல்

## கட்டுப்பாடு என்பது கடவுளின் பாஷை!

கட்டுப்பாடு, நியதி, ஒழுங்கு என்றெல்லாம் சில சொற்கள் உள்ளன. இவை பலருக்கும் பிடிக்காத சொற்கள். ஏனென்றால் இஷ்டம் போல் திரியவும் கண்டபடி காலத்தை வீணாக்கவும் யாருக்கும் அடங்காமல் அலையவும்தான் பலர் விரும்புகிறார்கள்.

இது பன்றிகளின் வாழ்க்கை முறை. இந்தப் பன்றிக் குட்டிகளின் வாழ்க்கை முறைதான் பலருக்குப் பிடிக்கிறது. வாய்க்கு ருசியாக எதை வேண்டுமானாலும் எங்கு வேண்டுமானாலும் தின்பது, எப்போது வேண்டுமானாலும் தின்பது, எங்கு வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் படுத்துக் கிடப்பது., என்ன செய்கிறோம், எதற்காகச் செய்கிறோம், ஏன் செய்கிறோம் என்று கேள்விகேட்டு வாழாமல் தாறுமாறாகத் திரிவது பன்றிக்குட்டிகளின் வாழ்க்கை முறை.

குட்டி வாலை அப்படியும் இப்படியும் ஆட்டிக்கொண்டு அடிவயிறு முழுவதும் சாக்கடைச் சேறு அப்பிக்கிடக்க தெருவில் கிடக்கிற மலத்தைத் தேடி அலையும் பன்றிக் குட்டிகளைப் பாருங்கள். எங்கு வேண்டுமானாலும் அவை படுத்துக்கொள்ளும். குப்பை மேட்டில் மல்லாக்கச் சரிந்து உருளும். டசின் டசினாகக் குட்டிகளைப் போடும்.

உர் உர் என்று கரகரப்பான ஊளையிட்டுக் கொண்டு அநாகரிகமான ஒலி எழுப்பிக்கொண்டு கொசுவும் ஈயும் தன்னை மொய்க்கக் குறுக்கும் நெடுக்கும் ஓடும். பொழுது போவதற்காக அவசியம் இல்லாமல் ஒன்றோடொன்று கீர் கீர் என்று சண்டைபோடும். பசுமாடு மாதிரி அதனைக் குளிப்பாட்ட யாருமில்லை. பூனை அல்லது நாய் போல நாவினால் தன்னைத் தானே அது நக்கித் தூய்மை செய்யாது.

பல மனிதர்கள் இந்தப் பன்றிகளின் வாழ்க்கை முறையை மிக விரும்பி நடத்துகிறார்கள். வீடுகளைக் குப்பைத் தொட்டி மாதிரி வைத்துக்கொள்கிறார்கள். தூய்மை உடலிலும் உள்ளத்திலும் ஏன் உடையிலும் இன்றி வாழ்கிறார்கள். வறுமை, சமூகக் கொடுமை என்ற காரணம் சொன்னாலும் அதை வெல்லவேண்டும் என்ற வேகம் இன்றி அதை ஆராதிக்கிறார்கள். நடுத்தர வர்க்கத்தில்கூட சிலரது வீடுகளில் நுழைந்தாலேயே ஒரு வகையான குடலைக்குமட்டும் கொடூர மணம் வீசுகிறது. ஜன்னல், கதவு, நாற்காலி எதன் மேலும் தங்கள் துணிமணிகள், பள்ளிப் பைகள், வாழைப்பழத் தோல் என்று போட்டு வைத்து 'வெட்கம் இல்லாமல் வாழ்கிறார்கள். மெத்தையைத் தட்டினால் தூசிப்படலம் வானுக்குப் பாயும். தலையணை உறை எண்ணெய்ப்பிசுக்குடன் வாடை வீசும். இவர்கள் இரண்டு கால் பன்றிகள். நாம் இப்படி வாழ்கிறோமே என்கிற குற்ற உணர்வு அவர்களுக்கு இருப்பதில்லை.

கட்டுப்பாடு, ஒழுங்கு, நியதி என்கிற உயர்வதற்கான விடயங்கள் இவர்களுக்குக் கசக்கும். எல்லோரும் ஏதேனும் ஒரு நியதிக்குக் கட்டுப்பட்டால்தான் ஒருவருக்கொருவர் சண்டையின்றி மகிழ்ச்சியாக வாழ முடியும் என்பதை முதலில் உணரவேண்டும்.

நமது இதயம் துடிப்பதில் ஓர் ஒழுங்கு உண்டா, இல்லையா? அதன் லப் டப் ஒலி சீராக இருந்தால்தான் நாம் உயிரோடு இருக்க முடியும், ஆரோக்கியமாக இருக்கமுடியும். இதயத்தின் இயக்கத்தை ECG என்ற முறையில் கணக்கிடுவார்கள். அதன் கோடுகள் அழகான ஒழுங்குடன் பயணம் செய்தால் மருத்துவர் முகம் மலரும். தாறுமாறாக மேலும் கீழும் அலைபாய்ந்தால் மருத்துவர் பரபரப்பாகி விடுகிறார்.

இதயத்துடிப்பு இருக்கட்டும் உலகின் கோள்கள் இயக்கத்தைக் கவனியுங்கள். சூரியனையே எல்லாக் கோள்களும் சுற்றுகின்றன. இது முதல் ஒழுங்கு. ஒவ்வொன்றும் ஈர்ப்புத்திறன் உடையவை என்றாலும் ஆபத்தில்லாத இடைவெளிவிட்டு அவை உருளும் சுழலும். சூரியனுக்கு அருகாமையில் உள்ள புதன் போன்றவை தலை தெறிக்க ஓடும்., தொலைவில் உள்ள சனி போன்ற கிரகங் கள் மெதுவாக நகரும். முப்பது வருடங்களில் சூரியனை ஒரு சுற்றுச் சுற்றும். இடைத்தொலைவில் உள்ள பூமியோ 365 நாட்களில் சூரியனை மிதவேகத்துடன் சுற்றும்.

எல்லாக்கோள்களும் ஒரே வேகத்தில் சுற்றாத போதும் ஒரு தாளகதியில் தம் பயணத்தை நிகழ்த்துவதால் உலகிற்கு ஆபத்தில்லை. பாதுகாப்பாகப்பூமி தன் பயணத்தைச் செய்கிறது. கோள்களின் சுற்றுலாவில் ஓர் ஒழுங்கு இருக்கிறது. நமது இரத்த ஓட்டத்தில் மூச்சு விடுதலில் இயற்கை ஓர் ஒழுங்கை வைத்திருக்கிறது. இந்த ஒழுங்கை இழந்தால் நம் கதி என்னாகும்? யோசியுங்கள்.

எனவே எதிலும் ஒரு கட்டுப்பாடு, நியதி தேவை என்பதே தெய்வ சங்கல்பம். அதை முதலில் புரிந்து கொண்டால் நாமும் தெய்வமாகலாம். பிரமாண்டமான வானவெளியில் சுழலும் கோள்களில் மட்டும் அல்ல. அதன் ஒவ்வோர் அணுவிலும் ஓர் ஒழுங்கு இருக்கிறது. ஒரு மையப்புள்ளியைச் சுற்றிப் பயணிக்கும் புரோட்டான், நியூட்ரான் ஆகியவை தாளகதி மாறாமல் சுழன்று கொண்டேயிருக்கின்றன. இந்தச் சுழற்சி தகர்ந்தால் பேராபத்து விளைகிறது.

மருத்துவ உலகில் புற்றுநோய் பற்றிய முடிவு என்ன தெரியுமா? நமது உடம்பில் உள்ள செல்களின் ஒழுங்கு குலைந்த வளர்ச்சியே புற்று நோயாகிறது. உடம்பில் மூக்குப் பகுதியில் உள்ள செல் இந்த அமைப்பில் இப்படி இருக்கவேண்டும் என்ற கட்டுப்பாட்டுடன் சிருஷ்டி செய்யப்பட்டிருக்கிறது. அந்த கட்டுப்பாடு சிதைந்து அது தாறுமாறாக வளருகிறபோது அதுவே புற்றுநோயாகிறது.

ஒவ்வொரு செல்லும் தன் நியதியுடன் கட்டுப்பாடாக இருக்கும் வரை மனிதனுக்கு எந்தச் சிக்கலும் இல்லை. அது நியதியைத் தொலைத்து விட்டு கட்டுப்பாட்டைக்குலைத்து விட்டு தன் இஷ்டத்துக்குத் தலை விரித்தாடினால் புற்றுநோய் உருவாகிவிட்டது என்று பொருள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தப்பிப் பிழைக்குமா தமிழரின் தேசிய பலம்?

தமிழ்த் தேசியக் கட்சிகளிடம் தமிழர்கள் எதனை எதிர்பார்க்கிறார்கள் என்ற கேள்விக்கான ஒரு விடை பாராளுமன்றத் தேர்தல் ஊடாக கிடைக்கக் கூடும்.

தமிழ்த் தேசிய அரசியல் என்பது சூடான உணர்ச்சிமயப் படுத்தப்பட்ட பிரசாரமாகவே இருந்து வந்திருக்கின்ற சூழலில் தான், இந்தத் தேர்தலின் மூலம் தமிழ் மக்கள் எதனை எதிர்பார்க்கிறார்கள் என்ற கேள்வி வலுப்பெற்றிருக்கிறது.

தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் தமிழ்த் தேசியக் கடசிகளிடம் இருந்து வெறுமனே உணர்ச்சியூட்டும் கோசங்களை மட்டும்தான் எதிர்பார்க்கிறார்கள் என்று கருதுவதற்கில்லை.

இந்தத் தேர்தலில் தமிழ்த் தேசியத்தை முன்னிறுத்தி நடத்தப்பட்ட பிரசாரங்கள் அனைத்துமே தலைகுனிவை ஏற்படுத்துகின்ற ஒன்றாகத்தான் இருந்தது.

தேர்தல் களத்தில் பொய்யுரைப்பது ஒன்றும் புதியதல்ல.

ஆனால் தமிழ்த் தேசிய அரசியலைக் கையில் எடுத்தவர்கள் செய்த பிரசாரங்களில் பொய்யும் புரட்டும், குறுக்கு வழியில் வெற்றி பெறுவதற்கான எத்தனங்களுமே மிஞ்சியிருந்தன.

ஜனநாயகத்தில் ஆரோக்கியமான போட்டி என்பது வரவேற்கப்படும் ஒன்றாகவே இருந்தாலும் அது ஒட்டுமொத்த தேசிய நலனை புறக்கணிக்கும் அல்லது அதற்குப் பாதிப்பை ஏற்படுத்தும் ஒன்றாக இருக்கக் கூடாது.

ஒட்டுமொத்த தமிழ்த் தேசிய இனத்தின் இருப்பை கேள்விக்குள்ளாக்கி வெற்றி பெறும் எந்தவொரு தமிழ்த் தேசியக் கட்சியாலும் எதையும் சாதிக்க முடியாது என்பதே உண்மைநிலை.

ஆனால் இம்முறை பாராளுமன்றத் தேர்தலில் தமிழரின் ஒட்டுமொத்த தேசிய நலனை எந்தக் கட்சியும் கருத்தில் எடுத்துக்கொண்டு செயற்பட்டன என்று கூற முடியாது.

ஒன்றை ஒன்று முட்டி மோதிக் கொள்வதிலும் பலவீனப்படுத்திப் பார்ப்பதிலுமே ஆர்வம் கொண்டிருந்தன. தனக்கு மூக்குப் போனாலும் பரவாயில்லை எதிரிக்குச் சகுனப் பிழையாகி விட வேண்டும் என்பதில் தமிழ்த் தேசியக் கட்சிகள் காட்டிய ஆர்வம் தமிழ் மக்களைப் பெரிதும் தலைகுனிய வைத்தது.

வடக்கு கிழக்கில் தமிழர் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்திக் கொண்டு தமிழ்த் தேசியக் கட்சிகள் ஆரோக்கியமான அரசியல் போட்டியொன்றில் ஈடுபடுவதை தமிழ் மக்கள் நிராகரிக்கவில்லை.

ஆனால் அவ்வாறின்றி தமிழரின் பிரதிநிதித்துவ ஆபத்துகளைக் கருத்தில் கொள்ளாமல் தமக்கிடையில் மோதிக் கொண்டது போன்ற கேவலமான அரசியல சூழல் இனியும் எழக்கூடாது.

திருகோணமலையில் 1827 ஆம் ஆண்டில் 82 வீதமாக இருந்த தமிழர்களின் சனத்தொகை இன்று வெறும் 32 வீதமாக சுருக்கப்பட்டுவிட்டது.

நான்கு ஆசனங்களை மட்டுமே கொண்ட திருகோணமலையில் மூன்றில் ஒரு பங்கினரான தமிழர்களால் இரண்டாவது பிரதிநிதித்துவத்தை பெறுவது ஒனறும் கடினமல்ல.

2004 ஆம் ஆண்டு 65 ஆயிரம் வாக்குகளைப் பெற்று 2 ஆசனங்களைக் கைப்பற்றியிருந்தது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.



ஆனால் இம்முறையும் கூட 90 வீதமான தமிழர்கள் ஏதாவதொரு தமிழ் கட்சிக்கு முறையாக வாக்களித்தால் 2 ஆசனங்களைப் பெறுவது கடினமல்ல.

அவ்வாறு இரண்டாவது ஆசனத்தைப் பெறுவதற்காக தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றாக இணைந்து செயற்பட்டிருக்க வேண்டும். தமிழ்த் தேசியக் கட்சிகளிடம் இருந்து தமிழ் மக்கள் பிரதானமாக எதிர்பார்ப்பது இதுபோன்ற ஆக்கபூர்வமான அரசியல் அணுகுமுறையைத்தான்.

மட்டக்களப்பில் கடந்த முறை ஒரு ஆசனம் பறிபோனதற்கு இதுபோன்ற ஆரோக்கியமற்ற போட்டிதான் காரணமாயிற்று.

இம்முறை மட்டக்களப்பில், அம்பாறையில், திருகோணமலையில் ஏன் வன்னியில் கூட தமிழர்களின் பிரதிநிதித்துவம் இந்தப் போட்டியால் கேள்விக் குறியாகி நிற்கிறது.

வெற்றிபெற முடியாது என்று தெரிந்தும் அல்லது மிகக்குறைந்த ஆசனங்களையே பெறமுடியும் என்ற நம்பக்கையின் அடிப்படையிலும் போட்டியில் குதிக்கின்ற அரசியல்போக்கு தமிழர்கள் மத்தியில் கூர்மை பெற்றிருக்கிறது.

விடுதலைப் புலிகளால் 2004 இல், எல்லோரையும் ஒற்றுமைப்படுத்தி இரண்டு ஆசனங்களை வெல்ல வைக்க முடியும் என்றால், ஏன், இப்போது அதே ஒற்றுமையை வெளிப்படுத்தி தமிழ்த் தேசியக் கட்சிகள் எல்லாம், இணைந்து இரண்டு ஆசனங்களை பெற்றுக் கொடுக்க முடியாது?

புலிகளின் தலைமையை ஏற்பவர்கள், அவர்களின் கொள்கை வழி நிற்பதாக கூறிக் கொள்பவர்கள், அவர்களை மதிப்பவர்களாக இருந்தால் அதையல்லவா செய்திருக்க வேண்டும்?

திருகோணமலை ஒரு உதாரணம் மட்டுமே.

யாழ்ப்பாணம் தவிர, மற்றெல்லா தமிழர் பிரதேசங்களிலும், தமிழரின் மெய்யான பிரதிநிதித்துவப் பலத்தை தமிழ்த் தேசியக் கட்சிகள் சிதைப்பதில்தான் ஆர்வம் காட்டுகின்றன.

யாழ்ப்பாணத்தில், நடக்கும் போராட்டத்தில் கூட, தெரிவாகும் அனைவரும் தமிழர்களாகவே இருந்தாலும் கூட, தமிழ்த் தேசியத்தை கருவழிக்க கங்கணம் கட்டியிருப்போரும், அதற்காக திட்டம் வகுப்போரும் கூட அந்த ஆசனங்களைப் பகிர்ந்து கொள்ளும் ஆபத்து உள்ளது.



இனத்துவ அடையாளம், பிரதிநிதித்துவத்தை மட்டுமன்றி, தமிழ்த் தேசியப் பிர்திநிதித்துவ அடையாளத்தையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு இருப்பதை மறுக்க முடியாது. ஆனால், தமிழ்த் தேசியக் கட்சிகளிடத்தில் அத்தகைய பொறுப்புணர்வு இல்லை என்பதே உண்மை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இருக்கலாம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியாக இருக்கலாம், தமிழர் விடுதலைக் கூட்டணியாக இருக்கலாம், ஜனநாயக போராளிகள் கட்சியாக இருக்கலாம்,

எல்லோருமே தமக்குள் இருக்கும் அக முரண்பாடுகளுக்குப் பழிதீர்ப்பதில்தான் ஆர்வமாக இருக்கின்றனர்.

தனிப்பட்ட குரோதங்களைத் தீர்த்துக் கொள்வதற்கான களமாகவே இந்த தேர்தலை பயன்படுத்தும் நிலை தமிழ் மக்களால் வருத்தத்துடன் பார்க்கப்படு கிறது.

தமிழ்த் தேசியக் கட்சிகளின் அக முரண்பாடுகள், ஆக்கபூர்வ மற்ற அரசியல் செயற்பாடுகள், தனிப்பட்ட குரோதங்களை முன்னிலைப்படுத்திய பிரசாரங்கள் எல்லாமே, கணிசமான தமிழ் மக்களுக்கு வெறுப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

இந்தப் பாராளுமன்றத் தேர்தலில் வாக்காளர்களுக்கு இருக்கின்ற பொறுப்பை விட, தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு கூடுதல் பொறுப்பு இருந்தது.

அந்தப் பொறுப்பை அவரகள் தட்டிக்கழித்துச் செயற்பட்ட நிலையில் வாக்காளர்களின் தீர்மானம் எவ்வாறு அமையப் போகிறது என்பது ஆர்வம் மிக்க கேள்வி யாக இருக்கிறது.

எது எவ்வாறாயினும், இந்த தேர்தலில் தமிழரின் பிரதிநிதித்துவபலம் பாதுகாக்கபபட வேண்டும். தமிழ்த் தேசியத்தின் பலம் பாதுகாக்கப்பட வேணடும்.

இந்த இரண்டுக்கும் எந்த வகையிலாவது பங்கம் விளைவிக்கப்பட்டால் அது வாக்காளர்களின் தவறாக இருக்காது, தமிழ்த் தேசியக் கட்சிகளின் தவறாக, அவற்றின் அணுகுமுறை தவறாகவே அமையும்.

அத்தகையதொரு தவறு நிகழ்ந்தால், அந்த வரலாற்றுக் கறைக்கு தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தும் பொறுப்புக்கூற வேண்டியிருக்கும்.

**சுபத்ரா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.பிறிமியர்லீக் வெற்றிக்கிண்ணம்-2015

# யாழ்.ஜொனியன்ஸ் அணி முதலாவது வெற்றி



யாழ்.பிறிமியர் லீக் வெற்றிக் கிண்ணத்திற்காக யு.ஆர். பவுண்டேசன் 3 ஆவது ஆண்டாக நடத்தும் 20 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்ட சுற்றுப் போட்டியின் பிரிவு I இல் யாழ். ஜொனியன்ஸ் அணி திருநெல்வேலி சீ.சீ அணியை 26 ஓட்டங்களால் வெற்றி பெற்று தமது முதலாவது வெற்றியை பதிவு செய்துள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.ஜொனியன்ஸ் அணி 20 ஓவர்களில் 7 இலக்குகளை இழந்து 172 ஓட்டங்களைப் பெற்றது. அன்புஜன்-42, சன்சஜன் 13, லவேந்திரா 36, காண்டீபன் 14 ஓட்டங்களைப் பெற்றனர்.

களத்தடுப்பில் திருநெல்வேலி சீ.சீ. அணி சார்பாக பிரபு 02, சிவராஜ் 01 இலக்குகளைக் கைப்பற்றினர்.

183 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய திருநெல்வேலி சீ.சீ.அணி 20 ஓவர்களில் 7 இலக்குகளை இழந்து 156 ஓட்டங்களைப் பெற்றது.

லவகாந்-89, விதுண்-44 ஓட்டங்களைப் பெற்றனர். களத்தடுப்பில் யாழ்.ஜொனியன்ஸ் அணி சார்பாக அகிலன் -1, லவேந்திரா 2 இலக்குகளை கைப்பற்றினர்.

இப்போட்டியில் யாழ். ஜொனியன்ஸ் அணியைச் சார்ந்த அன்புஜன் சிறந்த வீரராக தெரிவு செய்யப்பட்டார்.

இப்போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் 6 ஆவது ஆண்டாக நடத்திவரும் யாழ். நகரில் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்வுக்கு யாழ்.ஜொனியன்ஸ் அணி 4.78 புள்ளிகளையும் திருநெல்வேலி சீ.சீ. அணி 2.26 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டது. (கு)

# வத்திராயன் உதயசூரியன் வி.கழக உதைபந்தாட்ட போட்டி முடிவுகள்







வத்திராயன் உதயசூரியன் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டப் போட்டி முடிவுகள் வருமாறு.

முதலாவது போட்டியில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் வி.கழகம் மற்றும் வெற்றிலைக்கேணி சென். செபஸ்ரியன் வி.கழகம் ஆகியன மோதின. இதில் றேஞ்சர்ஸ் வி.கழகம் 2:1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று அடுத்தசுற்றுக்கு முன்னேறியுள்ளது.

மேலும் இப்போட்டிக்கான ஆட்ட நாயகனாக றேஞ்சஸ் வி.கழக வீரர் கவிவர்மன் தெரிவானார். இவருக்கான இராசா ஈஸ்வரன் ஞாபகார்த்தமான வெற்றிக் கேடயத்தினை வி.கழக வீரர் ந.றஞ்சித்குமார் வழங்கி வைத்தார்.

நடைபெற்ற மற்றைய போட்டியில் கட்டைக்காடு சென்.மேரிஸ் வி.கழகம் மற்றும் நவிண்டில் கலைமதி வி.கழகம் ஆகியன மோதின.

இப்போட்டியில் கட்டைக்காடு சென்மேரிஸ் வி.கழகம் 3:0 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதி ஆட்டத்திற்கு தெரிவாகியுள்ளது.

மேலும் இப்போட்டிக்கான ஆட்ட நாயகனாக சென்மேரிஸ் வி.கழக வீரர் அருமை தெரிவானார்.

இவருக்கான இராசா ஈஸ்வரன் ஞாபகார்த்தமான வெற்றிக் கேடயத்தினை வடமராட்சி லீக் பொருளாளர் வழங்கி வைத்தார். இறுதியாக இடம்பெற்ற போட்டியில் திக்கம் வி.கழகம் மற்றும் வெற்றிலைக் கேணி றம்போ வி.கழகம் மோதின. இதில் திக்கம் வி.கழகம் 6:1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றுள்ளது.

மேலும் இப்போட்டிக்கான ஆட்ட நாயகன் திக்கம் வி.கழக 5 இலக்க சீருடை அணிந்தவீரர் தெரிவானார். இவருக்கான இராசா ஈஸ்வரன் ஞாபகார்த்தமான வெற்றிக் கேடயத்தினை தி.சிவராசா வழங்கி வைத்தார். (கு)

# JDCA வெற்றிக்கிண்ணம் யூனியன்ஸ் அணி வெற்றி



JDCA வெற்றிக்கிண்ணம், யாழ். மாவட்ட துடுப்பாட்ட சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட 24 கழகங்களை 3 பிரிவுகளாகப் பிரிப்பதற்கு இச் சுற்றுப்போட்டியை பயன்படுத்தவுள்ளது.

அந்த வரிசையில் பிரிவு F இல் யூனியன்ஸ் அணி ஹாட்லியைற்ஸ் அணியை 7 இலக்குகளால் வெற்றி பெற்று தனது முதலாவது வெற்றியை பதிவு செய்துள்ளது.

பூவா தலையா நிகழ்வில் வெற்றி பெற்ற ஹாட்லியைற்ஸ் அணி துடுப்பாட்டத்தை தீர்மானித்துள்ளது.

ஹாட்லியைற்ஸ் அணி 49.3 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 223 ஓட்டங்களைப் பெற்றது.

சாகித்தியன் 23, கரிகரன் 31, தீபன் 27, பிரதீஸ் 46, சன்ஜீ 16 ஓட்டங்களைப் பெற்றனர்.

களத்தடுப்பில் அருண் 01, கோபி 02, ஜான்சன் 03, மகிந்தன் 01, தயாளன் 02 இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யூனியன்ஸ் அணி 37.2 ஓவர்களில் 3 இலக்குகளை இழந்து 224 ஓட்டங்களைப் பெற்றது. ஜான்சன் 68, சுஜன்தன் ஆட்டமிழக்காது 103, ஆகீசன் 26 ஓட்டங்களைப் பெற்றனர்.

களத்தில் பிரதீஸ் 01, பிரசாத் 02 இலக்குகளைக் கைப்பற்றினர்.

இப் போட்டியின்மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம் 2010 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து நடத்தி வரும் யாழ். நகரில் சிறந்த அணி தெரிவு நிகழ்விற்கு யூனியன்ஸ் அணி 8.23 புள்ளிகளையும் ஹாட்லியைற்ஸ் அணி 2.54 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டது. (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுபான விநியோகம் இடம்பெற்றதாக புகார்

(கொழும்பு)

நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பதாக பல இடங்களில் வாக்காளர்களுக்கு மதுபானங்களை விநியோகிக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கபே அமைப்பு இது தொடர்பான அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இதன்படி பதுளையில் நேற்று முன்தினம் 67 பேருக்கு வேட்பாளர் ஒருவரால், மதுபான போத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.


இதன்போது மதுபான விநியோகத்தில் ஈடுபட்ட விற்பனை நிலையத்தின் முகாமையாளர் கைது செய்யப்பட்டார்.

இதனை தவிர நுவரெலியா, லிந்துலையில் வாக்கு கப்பமாக மதுபான போத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

புத்தளம், மாத்தளை, குருநாகல் போன்ற இடங்களிலும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

பெரும்பாலும் கடந்த சனிக்கிழமையும் நேற்று முன்தினமும் இந்த மதுபான விநியோகம் கிரமமாக இடம்பெற்றுள்ளதாக கபே அமைப்பின் நிறைவேற்றுப்பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

எனினும் பதுளையில் மாத்திரமே பொலிஸார் தமது நடவடிக்கையை எடுத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)




# செஞ்சோலைப் படுகொலையின் நினைவேந்தல் நிகழ்வு ஜேர்மனியில்

(கொழும்பு)

**மனிதநேயம் தோல்வியுற்ற நாளாகவும் சர்வதேசம் வெட்கித் தலைகுனிந்த நாளாகவும் நடைபெற்ற செஞ்சோலைப் படுகொலையின் 9 ஆம் ஆண்டு நினைவேந்தல் ஜேர்மனியில் Essen நகரில் அமைந்துள்ள நினைவுத்தூவி வளாகத்தில் நடைபெற்றுள்ளது.**





இந் நினைவேந்தல் நிகழ்வில் கலந்துகொண்ட மக்கள் செஞ்சோலை சிறுவர்களை மனதில் பதித்து சுடர்வணக்கம் மற்றும் மலர்வணக்கம் செலுத்தி வணங்கினார்கள். தொடர்ந்து செஞ்சோலை படுகொலை நினைவுப் பதிவு தமிழ் இளையோர் அமைப்பு உறுப்பினரால் வாசிக்கப்பட்டது. அதை தொடர்ந்து கலந்து கொண்ட மாணவர்களால் செஞ்சோலை படுகொலையை நினைவேந்தி உணர்வு வரிகள் வழங்கப்பட்டது. இறுதியில் தாயக சமகால அரசியல் நிலைமை சார்ந்து உரையாடப்படடு மாணவர்களின் கனவுகள் நினைவேற புலம்பெயர் மக்கள் தொடர்ந்து அர்ப்பணிப்போடு உழைப்போம் என்று உறுதி எடுக்கப்பட்டு செஞ்சோலை படுகொலையின் நினைவேந்தல் நிகழ்வு நிறைவுபெற்றது. (இ-7)

# சிறைக்குள் தீ வைத்ததாக குற்றச்சாட்டு டுபாய் நீதிமன்றத்தில் இலங்கையர் ஆஜர்

(கொழும்பு)

தாம், அடைத்து வைக்கப்பட்டிருந்த சிறைக்குள் தீப்பற்ற வைத்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் இலங்கையர் ஒருவர் டுபாய் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்.

எனினும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மொழி பெயர்ப்பாளர் சமுகம் தராமை காரணமாக அவர் மீது வழக்கு தொடரப்படவில்லை.

கடந்த நவம்பர் 19 ஆம் திகதியன்று இரவு 9.25 இற்கு டுபாய் மத்திய சிறையில் அபாய ஒலியை அடுத்து தாம் சென்று பார்த்தபோது குறித்த இலங்கையர், அடைத்து வைக்கப்பட்டிருந்த அறையில் இருந்து புகை வெளியேறியதாக பொலிஸார் ஒருவர் நேற்று முன்தினம் நீதிமன்றில் தெரிவித்தார்.

எனினும் அவரிடம் எந்தவொரு கருவியையும் தாம் காணவில்லை என்று அவர் தெரிவித்தார்.

இதன்போது குறித்த இலங்கையர், சிறைச்சாலை மருத்துவ நிலையத்தை குறிப்பிட்ட போதும் மேலதிகமாக எதனையும் தெரிவிக்கவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தநிலையில் வழக்கு ஓகஸ்ட் மாதம் 25 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (இ-7)

## விருப்பு வாக்கு சேகரிப்பில் ஈடுபட்ட எட்டு பேர் கைது

2015 ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் வாக்களிப்பு நேற்று நடைபெற்ற நிலையில், தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு விருப்பு வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டதாக கூறப்படும் 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் வவுனியா, மாளிகாவத்தை, கட்டுநாயக்க, ரம்புக்கனை மற்றும் குளியாப்பிட்டிய பிரதேசங்களில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் சட்டவிரோதமான முறையில் வேட்பாளர்களின் விருப்பு வாக்கு இலக்கங்களை வாக்காளர்களுக்கு வழங்கிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ், ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார். (இ-7)

# பிரதான இரண்டு கட்சிகளும் வெற்றியின் நம்பிக்கையில்!

(கொழும்பு)

இம்முறை பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பும் தமது தரப்பு வெற்றி குறித்து நம்பிக்கை தெரிவித்துள்ளன.

தமது வெற்றி உறுதியென்பதை நிரூபிப்பதற்காக கருத்துக் கணிப்புக்களை இரு கட்சிகளும் வெளியிட்டுள்ளன.

அரச புலனாய்வுப் பிரிவினர் நடத்தியுள்ள கருத்துக் கணிப்பிற்கமைய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்கு 105 ஆசனங்கள் கிடைக்கும் என அந்தக் கட்சியினர் தெரிவிக்கும் அதேவேளை, அந்தக் கருத்துக்கணிப்பிற்கமைய ஐக்கிய தேசியக் கட்சிக்கு 108 ஆசனங்கள் கிடைக்கும் என குறித்த கட்சியினர் தெரிவித்துள்ளனர். (இ-7)

# நாடாளுமன்றத் தேர்தல் முடியும்வரை சுசிலின் கையொப்பங்கள் ஏற்கப்படும்



(கொழும்பு)

எட்டாவது பாராளுமன்றத்துக்கான தேர்தல் முடிவடையும் வரை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முன்னாள் செயலாளர் சுசில் பிரேம ஜயந்தவின் கையொப்பங்களுடன் கூடிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் என்று தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய ஐ.ம.சு.மு.வின் பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளார். வாக்கு எண்ணும் நிலையங்களுக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் சுசில் பிரேம ஜயந்தவின் கையொப்பத்துடன் நியமிக்கப்பட்டுள்ள முகவர்களை அனுமதிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தேர்தல்கள் ஆணையாளர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலர் பதவியிலிருந்து சுசில் பிரேம ஜயந்த நீக்கப்பட்டதாக கடந்த வெள்ளிக்கிழமை அறிவிக்கப்பட்டதையடுத்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் உதவி தலைவர் தினேஷ் குணவர்த்தன மற்றும் முன்னணியின் பொருளாளர் டலஸ் அழகப்பெரும ஆகியோர் நேற்று முன்தினம் தேர்தல்கள் ஆணையாளரை சந்தித்து பேச்சு நடத்தியபோதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக கடந்த வெள்ளிக்கிழமை மாலை சுசில் பிரேம ஜயந்த செயலர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட பின்னர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் உதவி தலைவர் தினேஷ் குணவர்த்தன தேர்தல் ஆணையாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.

அந்தக் கடிதத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் பதவியிலிருந்து சுசில் பிரேம ஜயந்த நீக்கப்பட்டமை சட்டவிரோதமானது என்றும் அதனை ஏற்றுக்கொள்ளவேண்டாம் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. அதனையடுத்தே கடந்த சனிக்கிழமை தேர்தல்கள் ஆணையாளருக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பில் தினேஷ் குணவர்த்தன மற்றும் டலஸ் அழகப்பெரும உள்ளிட்ட ஆறு பேரும் தேர்தல்கள் ஆணையாளரும் கலந்து கொண்டிருந்தனர். இதன்போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் பதவியிலிருந்து சுசில் பிரேம ஜயந்த நீக்கப்பட்டமை சட்டவிரோதமானது என்றும் அவரையே தேர்தலில் செயலராக தேர்தல்கள் ஆணையாளர் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்றும் ஐ.ம. சு. மு. வின் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்நிலையில் இந்த சந்திப்பு தொடர்பில் ஐ.ம.சு. மு. வின் உதவி செயலரும் மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவருமான தினேஷ் குணவர்த்தன தகவல் தருகையில்,

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் பதவியிலிருந்து சுசில் பிரேம ஜயந்த நீக்கப்பட்டமை சட்டவிரோதமானது. இது தொடர்பில் நான் கடந்த வெள்ளிக்கிழமை மாலையே தேர்தல்கள் ஆணையாளருக்கு கடிதம் ஒன்றையும் அனுப்பியிருந்தேன். அது மட்டுமன்றி கடந்த சனிக்கிழமை நாங்கள் தேர்தல்கள் ஆணையாளரை சந்தித்து கலந்துரையாடினோம்.

எமது கோரிக்கைக்கு பதிலளித்த தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய பாராளுமன்றத் தேர்தல் முடிவடையும் வரை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முன்னாள் செயலாளர் சுசில் பிரேம ஜயந்தவின் கையொப்பங்களுடன் கூடிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் என்று உறுதியளித்தார்.

தேர்தல் முடிந்து முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின்னரே ஏதாவது சிக்கல்கள் ஏற்படும் சாத்தியம் உள்ளதாகவும் தேர்தல்கள் ஆணையாளர் எம்மிடம் மேலும் தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வன்னித் தொகுதியில்

# மக்கள் அமைதி நிலையில் அணி திரண்டு வாக்களிப்பு

(மல்லாவி)

**8 ஆவது பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் பொருட்டு வன்னி தேர்தல் தொகுதியில் 2 இலட்சத்து 53 ஆயிரத்து 58 வாக்காளர்கள் ஆறு பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த வாக்காளர்கள் நேற்றுக்காலை 7 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை வாக்களிப்பில் ஈடுபட்டிருந்தனர்.**

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வன்னித்தேர்தல் தொகுதியில் ஆறு பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட 18 அரசியல் கட்சிகளும் 10 சுயேட்சைக்குழுக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 252 வேட்பாளர்கள் தேர்தல் களத்தில் போட்டியிட்டிருந்தனர்.

வாக்களிப்பு நடைபெற்ற நேற்றைய தினத்தில் சிறுசிறு அசம்பாவிதங்கள் நடைபெற்ற போதிலும் பாரியளவிலான அசம்பாவிதங்கள் எதுவும் இடம்பெறவில்லை.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 130 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டு வாக்காளர்கள் இலகுவாக வாக்களிக்கக்கூடிய வகையில் அனைத்து வசதிகளையும் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் தலைமையிலான தேர்தல் திணைக்கள அதிகாரிகள் ஏற்பாடு செய்திருந்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பிற்பகல் 2 மணியளவிலான வாக்களிப்பு வீதமானது துணுக்காய் பிரதேச செயலக பிரிவில் 66 வீதமாகவும் மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவில் 63 வீதமாகவும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவில் 63 வீதமாகவும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவில் 60 வீதமாகவும் கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவில் 55 வீதமாகவும் காணப்பட்ட நிலையில் ஒட்டு மொத்தமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் 66 வீதமாக வாக்களிப்பு இடம்பெற்றிருந்தது.

ஆயினும் மக்கள் பிற்பகல் 2 மணியின் பின்னர் அதிகளவில் வாக்களிப்பு நிலையங்களில் திரண்டிருந்தமையை காணக்கூடியதாக இருந்தது.

வாக்கெண்ணும் பணிகள் மாலை 6 மணி தொடக்கம் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திலும் வவுனியா மாவட்ட செயலகத்திலும் மன்னார் மாவட்ட செயலகத்திலும் வன்னித் தேர்தல் தொகுதிக்கான வாக்கெண்ணும் நிலையங்களாக இருந்தன.

தேர்தல் தினத்தன்று பகல் மற்றும் இரவு வேளைகளில் வன்முறைகள், அசம்பாவிதங்கள் என்பவற்றை கட்டுப்படுத்தும் முகமாக விசேட பொலிஸ் ரோந்து பணிகள் காணக்கூடியதாக இருந்தது.

இந் நிலையில் மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவிலுள்ள வன்னிவிளாங்குளம் வாக்களிப்பு நிலையத்திற்கு அருகாமையில்கட்சி ஒன்றின் ஆதரவாளர்கள் வாக்களிப்பில் ஈடுபடுவதற்கு வருகை தந்திருந்தவாக்காளர்களுக்கு தமது கட்சிக்கு வாக்களி க்குமாறு கூறி குளிர்பானங்களை வழங்க முற்பட்ட போது சம்பவ இட த்திற்கு விரைந்த பொலிஸார் குறித்த ஆதரவாளர்களை எச்சரித்ததுடன் அவ்விடத்தில் இருந்து அவர்களை விரட்டிய சம்பவமொன்று இடம்பெற்றது.

இம்முறை கடந்த கால தேர்தல்களை விட எந்தவிதமான அழுத்தங்கள், அச்சுறுத்தல்கள் என்பன இன்றி பொதுமக்கள் சுயமாக தாமாகவே முன்வந்து வாக்களிப்பு நிலையங்களுக்கு நேர காலத்துடன் சென்று வாக்களிப்பில் ஈடுபட்டிருந்ததை காணக்கூடியதாக இருந்தது.

பிற்பகல் 4 மணி தொடக்கம் வாக்களிப்பு நிலையங்களில் இருந்து ஆயுதம் தரித்த பலத்த பொலிஸ் பாதுகாப்புக்கு மத்தியில் வாக்குப் பெட்டிகள் அனைத்தும் அந்தந்த மாவட்ட செயலகங்களுக்கு பேருந்துகளில் ஏற்றி வாக்கெண்ணுவதற்காக அனுப்பி வைக்கப்பட்டன. (2-15)

# நீரிழிவு நோயின் 7 அறிகுறிகள்


98 சதவிகித மக்களுக்கு, அவர்களின் தவறான வாழ்க்கை முறையின் காரணமாகத்தான் வகை 2 நீரிழிவு நோய் காணப்படுகின்றது. நீரிழிவு நோய் பற்றிய பயம் இருந்தாலும், போதிய விழிப்புணர்வு இல்லாததால் பலரும் பாதிக்கப்படுகின்றனர்.

வகை 2 நீரிழிவு நோய் 30 வயதுக்கு மேல்தான் வரும். அந்த நேரத்தில், உடல் எடையைக் குறைத்தல், கட்டுக்குள் வைத்திருத்தல், உடற்பயிற்சி, சரிவிகித உணவு என்று கவனமாக இருந்தால், நிச்சயம் நீரிழிவு நோய் வராமல் தடுக்க முடியும். மேலும், சில அறிகுறிகளைத் தெரிந்து வைத்திருப்பதன் மூலம் ஆரம்ப கட்டத்திலேயே கண்டறிந்து, நீரிழிவு நோயைத் தடுக்க முடியும்.

### அதிக தாகம்

நீரிழிவு நோயின் முக்கியமான அறிகுறி, தாகம். வழக்கத்துக்கு அதிகமாக தண்ணீர் குடிக்கிறீர்கள் என்றால், சற்று கவனத்துடன் இருக்க வேண்டும். வைத்தியர்கள் தினமும் இரண்டரை லீற்றர் தண்ணீர் குடிக்கச் சொல்கிறார்கள். நாமும் இப்போது நிறைய தண்ணீர் குடிக்கிறோமே என்று அசட்டையாக இருந்துவிடக் கூடாது.

திடீரென்று நம்மையும் அறியாமல் அதிக தாகம் எடுத்து, அதிக தண்ணீர் குடிக்கிறோம் என்றால், அது நீரிழிவு நோயின் அறிகுறியாக இருக்கலாம். இரத்தத்தில் சீனியின் அளவு அதிகமாக இருக்கும்போது, அதை வெளியேற்ற நம்முடைய சிறுநீரகங்கள் அதிகமாக வேலை செய்கின்றன. இதனால், உடலில் உள்ள நீர்ச்சத்து குறைந்துவிடுகிறது. இதை ஈடு செய்வதற்காக, தாகம் அதிகரிக்கிறது.




### அடிக்கடி சிறுநீர் வெளியேற்றல

இரத்தத்தில் உள்ள சீனியை வெளியேற்ற, சிறுநீரகம் முயற்சிக்கும்போது, உடலில் உள்ள நீரின் அளவு குறைகிறது. இதனால், அடிக்கடி சிறுநீர் வெளியேறும் [illegible] அதிக அளவு சிறுநீர் வெளியேற்றச் சென்றால், தூக்கத்தின் நடுவில் அடிக்கடி சிறுநீர் கழிக்க எழுந்தால், உடனடியாக மருத்துவரை அணுகி ஆலோசனை பெற வேண்டும்.

### உடல் எடை குறைதல்

சீனியின் அளவு அதிகரிக்கிறது என்றால், இன்சுலின் போதுமான அளவு சுரக்கவில்லை அல்லது அதன் செயல்திறன் போதுமானதாக இல்லை என்று அர்த்தம். செல்களுக்கு குளுக்கோஸைப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்படுகிறது. இதனால், சீனி இரத்தத்திலேயே இருப்பதால், எந்தக் காரணமும் இன்றி உடல் எடை தானாகக் குறைய ஆரம்பிக்கிறது.

### அதிக பசி

வகை 2 நீரிழிவு நோயாளிகளுக்கு இன்சுலின் செயல்திறன் குறைந்துவிடுகிறது. இதன் மூலம் செல்கள் குளுக்கோஸைப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்படுகிறது. இதனால், கணையமானது இன்னும் அதிக அளவில் இன்சுலினைச் சுரக்கத் தூண்டுகிறது. இன்சுலின் அளவு அதிகமாக இருக்கிறது. இது, மூளைக்கு இன்னும் குளுக்கோஸ் தேவை உள்ளதாக சிக்னல் செய்கிறது. இதனால், பசி எடுக்கிறது.

### வாய் உலர்தல்

நீரிழிவு நோயாளிகளுக்கு எச்சில் சுரப்பு குறைவதால் வாய் உலர்தல் பிரச்சினை ஏற்படும். சில மருந்துகள் எடுப்பதன் காரணமாகவும் வாய் உலர்தல் பிரச்சினை ஏற்படலாம். வாய் உலர்தல் பிரச் சினை தொடர்ந்தால், மருத்து வரை அணுகி ஆலோசனை பெறு வது அவசியம்.

### அதிகபடியான சோர்வு

நம் உடலில் உள்ள செல்கள் தான் குளுக்கோஸைப் பயன்படுத்தி, உடலுக்குத் தேவையான ஆற்றலைத் தருகின்றன. செல்களுக்கு போதுமான அளவு குளுக்கோஸ் கிடைக்கவில்லை, நீர்ச்சத்தும் வெளியேறிக்கொண்டே இருக்கிறது எனில், உடலில் சோர்வும் தளர்ச்சியும் ஏற்படும். உடலில் நீர்ச்சத்து குறைவதால், தலைவலியும் ஏற்படுகிறது.

### பார்வை மங்குதல்


இரத்தத்தில் சீனி அளவு அதிகரிக்கும்போது, அது கண்ணில் ரெட்டினா பகுதியில் பாதிபபை ஏற்படுத்தும். இதனால், பார்வை மங்கலாகும்.

இவர்கள், நீரிழிவு நோய் மருத்துவரை அணுகி சிகிச்சை பெறுவதன்மூலம், ஆரம்ப நிலையிலேயே இந்தப் பிரச்சினையை சரி செய்ய முடியும. காலில் மதமதப்பு அல்லது காலில் ஊசி குத்துவது போன்று சுறுக்சுறுக்கென வலி, காயங்கள் நீண்ட நாட்களாக ஆறாமல் இருந்தால் அடிக்கடி நோய்த்தொற்று ஏற்பட்டால் சீனியின் அளவை பரிசோதனை செய்துகொள்வது அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம், வன்னி தேர்தல் மாவட்ட வாக்களிப்பின் போது...











நாடாளுமன்றத் தேர்தல் வாக்களிப்பு நேற்றையதினம் நடைபெற்றது. இதில் நாட்டின் சகல பாகங்களிலும் மக்கள் ஆர்வத்துடன் வாக்களித்திருந்தனர். வடக்கில் யாழ்ப்பாணம், வன்னி தேர்தல் மாவட்டங்களிலும் வாக்களிப்பு இடம் பெற்றன.

படங்கள் : உ.சாளின், பொ.சோபிகா,
சாவகச்சேரி செய்தியாளர்,
கிளிநொச்சி - 1 செய்தியாளர்
வவுனியா செய்தியாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோழைகள்தான் வன்முறையில் ஈடுபடுவர். வீரர்கள் எப்பொழுதும் சமாதானத்தைத்தான் நாடுவர். – நேருஜி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## நடந்த தேர்தல் நம்பிக்கை தருகிறது

பாராளுமன்றத் தேர்தல் நேற்றைய தினம் சுமுகமான முறையில் நடந்தேறியுள்ளது. வழமையில் தேர்தல் என்றால் வன்முறைகளுக்கும் வாக்கு மோசடிகளுக்கும் குறைவிருப்பதில்லை.

ஆனால் நேற்றைய தினம் நடந்த தேர்தலில் வன்முறைகள் மிகக்குறைவு என்ற செய்தி மிகப் பெரிய திருப்தியைத் தருகிறது.

அதேநேரம் வாக்கு மோசடிகள், கள்ளவாக்குகள் என்ற விடயங்களுக்கு இடமே இருக்கவில்லை எனும் போது நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலை ஜனநாயகத்தின் உச்சம் என்று வர்ணிக்க முடியும்.

ஜனநாயக நாட்டில் ஜனநாயக ஆட்சியை ஏற்படுத்துகின்ற தேர்தல் என்பது, நூறு வீதம் நேர்மையாக நடைபெறும்போதுதான் அதிலிருந்து அமைக்கப்படும் ஆட்சியும் நேர்மையானதாக இருக்கும்.

எனினும் கடந்த காலங்களில் தேர்தல் நடைபெறும் போது ஆட்சியில் இருப்பவர்கள் அரச சொத்துக்களை தேர்தல் தேவைக்காகப் பயன்படுத்துவதுடன் ஆட்சியில் இருப்பதன் காரணமாக வன்முறையை கட்டவிழ்த்து விடுவதிலும் வன்முறைகளில் ஈடுபடுபவர்களை சட்டத்தின் பிடியிலிருந்து காப்பாற்றிக் கொள்வதையும் காணமுடியும்.

பொதுத் தேர்தல் அல்லது ஜனாதிபதித் தேர்தலின் போது ஆட்சியில் இருப்பவர்களை தோற்கடிப்பதற்காக ஒவ்வொரு தடவையும் சுதந்திரப் போர் நடத்த வேண்டிய தேவையை நாட்டு மக்கள் கொண்டுள்ளனர்.

கடந்த ஜனவரி 8ந் திகதி நடந்த ஜனாதிபதித் தேர்தலை நோக்கினால்; தேர்தலைக் குழப்புவதில், தேர்தல் முடிவுகளை ஏற்றுக் கொள்வதில் ஏற்பட்ட கடினங்கள் மக்கள் அறிந்ததே. ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன வெற்றி ஈட்டிய போதிலும் புதிய ஜனாதிபதி பதவி ஏற்பதற்கு இடம் கொடுக்க மகிந்த ராஜபக்ஷ மறுத்தமை இந்த நாட்டில் ஜனநாயகம் தோற்றுப் போகுமோ என்ற ஐயத்தை ஏற்படுத்தியிருந்தது.

எனினும் மகிந்த ராஜபக்ஷவின் அடம்பிடிப்புக்கு பாதுகாப்புத் தரப்பு இடம்கொடுக்காமையால் பதவியை கைவிட்டு வெளியேறவேண்டிய சூழ்நிலை மகிந்தவுக்கு ஏற்பட்டது.

ஆக, இலங்கையின் கடந்த காலத் தேர்தல்கள் உரிய காலத்தில் நடப்பது மற்றும் தேர்தல் முடிவுகளை ஏற்க ஆட்சியில் இருக்கும் தரப்பு மறுப்பது என்றவாறு,

தேர்தல் காலம் மிகப்பெரிய கலகம் ஏற்படலாம்; ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்படலாம் என்ற மனக் கிலேசத்துடனேயே நடந்து முடிந்துள்ளன. ஆனால் நேற்று நடந்து முடிந்த பாராளுமன்ற தேர்தல் மிகவும் நேர்த்தியாக, ஜனநாயகப் பண்புகளை முழுமையாகக் கொண்டதாக நிறைவேறியுள்ளது.

பாராளுமன்றத் தேர்தல் மிகவும் சுமுகமாக நடைபெறுவதற்கு மூலகாரணமாக தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரியவும் அவருடன் சார்ந்த தேர்தல் உத்தியோகத்தர்களும் இருந்துள்ளனர் என்பதை இவ்விடத்தில் கூறித்தானாக வேண்டும். அதேநேரம் 19ஆவது திருத்த சட்டமூலத்தின் ஊடாக தேர்தல் ஆணையாளருக்கு வழங்கப்பட்ட அதிகாரம். அந்த அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்த இந்த நாட்டின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகியோரின் அர்ப்பணிப்பும் தேர்தல் சுமுகமாக நடைபெறுவதற்கு அடித்தளம் இட்டுள்ளது.

நம் நாட்டில் தேர்தல்கள் இதுபோல நடந்தேறுமாயின் வாக்களிப்பு வீதம் நூறு என்ற உச்சத்தை அடையும் என்பது உண்மை.

## போலி வாக்குச்சீட்டுகளுடன் மூவர் கைது

போலியான வாக்குச்சீட்டுக்கள், தேர்தல் சுவரொட்டிகள், வேட்பாளர் விளம்பர அட்டைகளை வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் தேர்தல் தினமான நேற்று திங்கட்கிழமை அதிகாலை கல்முனையில் மூன்று பேரை கைது செய்ததாக கல்முனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

தேர்தல் சட்டங்களை மீறி இவர்கள் மோசடியான வாக்குச் சேகரிப்பு நடவடிக்கையில் ஈடுபடுகின்றார்கள் என்று பொதுமக்களிடமிருந்து தகவல் கிடைத்தது. இதனைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்குச் சென்ற தேர்தல் கண்காணிப்பு விசேட ரோந்துப் பொலிஸார் 54, 49 மற்றும் 32 வயதுகளையுடைய இவர்களை கைதுசெய்தனர்.

இந்த சந்தேக நபர்களிடமிருந்து முச்சக்கரவண்டி உட்பட 327 போலி வாக்குச்சீட்டுக்கள், 890 வேட்பாளர் விளம்பர அட்டைகள், ஏழு பெரிய மற்றும் சிறிய சுவரொட்டிகள் ஆகியவற்றை கைப்பற்றியதாகவும் பொலிஸார் கூறினர்.

இந்தச் சந்தேக நபர்களிடம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-11)

## தேர்தல் முடிவு தாமதமாகலாம்

சில மாவட்டங்களின் தேர்தல் முடிவுகளை வெளியிட கால தாமதமாகும் என தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

பொதுத் தேர்தலின் சில மாவட்டங்களின் முடிவுகள் காலதாமதமாகியே வெளியிடப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக 12 மாவட்டங்களின் தேர்தல முடிவுகள் இன்று நண்பகல் 12 மணியளவில் வெளியிடப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

முதலாவது தபால் மூல வாக்களிப்பு முடிவினை வெளியிட நள்ளிரவு 12 மணியாகும்.

மாவட்ட ரீதியான முடிவுகள் இன்று நண்பகல் வரையிலும் முழுமையாக வெளியிடப்பட முடியாது.

விருப்பு வாக்குகள் பற்றிய முடிவுகளை முழுமையாக வெளியிட 18ஆம் திகதி நள்ளிரவு கடக்கப்படலாம் என அவர் தெரிவித்துள்ளார். (எ-11)

## வாக்கு மோசடி ஒருவர் கைதானார்

(முள்ளியவளை)

முல்லைத்தீவு முள்ளியவளை ஹிஜ்ராபுரம் வாக்குச் சாவடியில் நேற்று பிற்பகல் வாக்கு மோசடியில் ஈடுபட முனைந்த நபர் ஒருவர் வாக்குச் சாவடி அதிகாரிகளினால் அடையாளம் காணப்பட்டு பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு முள்ளியவளைப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இவரை பொலிஸார் இன்று முல்லைத்தீவு மாவட்ட நீதி மன்றத்தில் முற்படுத்தவுள்ளதாக முள்ளியவளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

கட்டாரில் வசித்துவரும் ஹிஜ்ராபுரத்தைச் சேர்ந்த சுல்தான் அப்துல் காதர் முகமது என்னும் 38 வயதுடையவரின் தேசிய அடையாள அட்டையுடன் வாக்குச் சாவடிக்கு சென்ற நபர் இவரின் பெயரில் வாக்களிக்க முனைந்த வேளை வாக்குச் சாவடியில் இருந்த கட்சி முகவர் ஒருவர் குறித்த பெயருக்குரியவர் கட்டாரில் வசிப்பதாக ஆட்சேபனை தெரிவித்தார்.

அதற்கு அமைய வாக்குச் சாவடி அதிகாரி விசாரணை செய்த பின்னர் மேலதிக விசாரணைகளுக்காகவும் உரிய நடவடிக்கைகளுக்காகவும் பொலிஸாரிடம் ஒப்படைத்தார். இதன் பின்னர் முள்ளியவளை பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்று பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளனர். தேர்தல் விசேட சட்டத்தின்படி இவருக்கு பொலிஸ் பிணை வழங்கப்பட மாட்டாது. குறித்த நபர் ஐ.தே.கட்சி ஆதரவாளர் எனவும் ஆலங்குளம் நுரைச் சோலையைச் சேர்ந்த 28 வயதுடைய சினுஸ் ஆப்தீன் முகமட் பைசல் எனவும் அறியவருகின்றது. (எ-302)

## ஊழல் மோசடி விசாரணைக்கு பிரித்தானியாவின் உதவி!

(கொழும்பு)

ஊழல் மோசடிகள் தொடர்பில் விசாரணை நடத்த அரசாங்கம் பிரித்தானியாவின் உதவியை பெற்றுக்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பாரதூரமான மோசடிகள் தொடர்பில் விசாரணை நடத்தும் நிறுவனத்தின் உதவி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. பிரித்தானிய ஊடகமொன்று இந்த தகவலை வெளியிட்டுள்ளது. வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர வழங்கிய செவ்வியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட பாரியளவிலான நிதி மோசடிகள் குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்த, பிரித்தானிய நிறுவனத்தின் ஒத்துழைப்பு பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார் .

ஊழல் மோசடிகள் தொடர்பிலான விசாரணைகளை எவ்வாறு நடத்துவது என்பது குறித்து இந்த நிறுவனம் இலங்கை அதிகாரிகளுக்கு ஏற்கெனவே பயிற்சி வழங்கியுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான பத்தாண்டு கால அரசாங்கம் பாரியளவில் மக்கள் பணத்தை மோசடி செய்துள்ளதுடன், விரயமாக்கியுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இந்த ஊழல் மோசடிகள் உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் குறித்து தீவிர விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

## ஆதிவாசி தலைவரும் வாக்களித்தார்

(கொழும்பு)

நாடாளுமன்ற தேர்தல் 2015 வாக்களிப்பு நடவடிக்கைகளுக்காக பதுளை மாவட்டத்தில் மஹியங்கனை தொகுதியில் 76 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பு நடவடிக்கைகள் இடம்பெற்றன.

ஆதிவாசிகளின் தலைவரான ஊருவரிகே வன்னிலா எத்தோ, காலை 10 மணியளவில் தம்பான கனிஷ்ட வித்தியாலயத்தில் தனது வாக்கினை அளித்தார். அவருடன் அவரது மனைவி மற்றும் குழுவினர் சமுகமளித்து வாக்களித்தனர். (எ-11)

## தேர்தல் வாகனம் விபத்து

(கொழும்பு)

திக்வெல்ல - கொட்டகொட வாக்குச் சாவடியில் இருந்து வாக்கு பெட்டிகள் கொண்டு சென்ற கப் வண்டி ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

வளைவொன்றில் வைத்து குறித்த கப் வண்டி தடம்புரண்டதில் இவ் விபத்து நிகழ்ந்துள்ளதோடு, விபத்தில் பொலிஸ் கான்ஸ்டபிள் காயமடைந்துள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

இவ் விபத்தின் போது வாக்கு பெட்டிக்கு எவ்வித சேதங்களும் ஏற்படவில்லை என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

குறித்த வாகனத்தில் இருந்த வாக்கு பெட்டியை வேறு வாகனத்துக்கு மாற்றி மெதவத்தை தொழில்நுட்ப கல் லூரிக்கு கொண்டு செல்வதற்கான நடவடிக்கையை பொலிஸார் மற்றும் அதிகாரிகள் மேற் கொண்டுள்ளனர். (எ-11)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்



சுவாமிஜி இந்த நாட்டின் பெண்களுக்கு உங்கள் அறிவுரை என்ன?

பெண்களுக்கு மட்டும் என்ன, ஆண்களுக்கும் கூறுகின்றேன். பாரத நாட்டை நம்புங்கள், பாரதத்தின் மதத்தை நம்புங்கள், வலிமையுடன் வாழுங்கள், நம்பிக்கை வையுங்கள். எதற்கும் வெட்கப்பட வேண்டாம். இந்தியா ஏற்றுக்கொள்வதற்குச் சிறிதேயுள்ளது. ஆனால் பிறருக்கு வழங்க உலக மக்களினங்கள் அனைவரிலும் அதிகம் அதனிடம் உள்ளது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

சகோதரா சொல், இந்திய மண்தான் எனது சொர்க்கம். இந்தியாவின் நலன்தான் என்னுடைய நலன்.

சகோதரா பிறநாடுகளிடமிருந்து நாம் கற்கவேண்டியவை ஏராளம் உள்ளன. இனி நான் கற்கவேண்டியது எதுவுமில்லை என்பவன் சாவின் அருகில் போய்விட்டான். எங்களுக்கு எல்லாம் தெரியும் என்று எந்த நாடு கூறுகிறதோ அது அழிவின் எல்லையில் நிற்கிறது. வாழும் நாள்வரை நான் கற்கிறேன்.

ஏனைய மதங்களைவிட கிறிஸ்தவமே தலைசிறந்தது என்று நிரூபிப்பதற்காகத்தான் சர்வமத மகா சபை கூட்டப்பட்டது. ஆனால் தத்துவபூர்வமாக அமைந்ததான இந்து மதம் தனது இடத்தைவிடாமல் நிலைநிறுத்த வல்லதாக இருந்தது.

நாம் விதைத்ததையே நாம் அறுக்கிறோம், நாம் படுகின்ற துன்பங்கள், நாம் போராடுகின்ற தளைகள், எல்லாம் நாமே உருவாக்கியவை. அதற்கு பிரபஞ்சத்திலுள்ள யாரையும் குறை சொல்லவேண்டியதில்லை. கடவுளைக் குறை சொல்வதில் அர்த்தமே இல்லை.

ஆன்மாவின் பெருமையைச் சிங்கம்போல் கர்ஜனை செய்.எழுந்திருங்கள், விழித்திருங்கள், இலட்சியத்தை அடையும்வரை நில்லாதீர்கள் என்று முழங்கி எல்லோருடைய மனத்திலும் பயமின்மையைப் புகுத்து.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தான் உள்துறை அமைச்சின் அலுவலகத்தில் தற்கொலை தாக்குதல்

## அமைச்சர் உட்பட 20 பேர் பலி; 17 பேர் காயம்




(லாகூர்)

பாகிஸ்தானில் மனித வெடிகுண்டு தாக்குதலில் பலியானோர் எண்ணிக்கையானது 20 ஆக உயர்ந்துள்ளது. பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாண உள்துறை அமைச்சர் சுஜா கான்ஜாதாவின் அரசியல் அலுவலகத்தில், நேற்று முன்தினம் தற்கொலை வெடிகுண்டு தாக்குதல் நடத்தப்பட்டது. அலுவலகத்தில் அமைச்சர் சுஜா கான்ஜாதா தனது ஆதரவாளர்கள் சுமார் 30 இற்கும் மேற்பட்டவர்களுடன் முக்கிய ஆலோசனை நடத்தியபோது இத் தாக்குதல் சம்பவம் நடைபெற்றுள்ளது. இதில் அமைச்சார் உட்பட 20 பேர் பலியாகியுள்ளனர்.

பலத்த சத்தத்துடன் சக்தி வாய்ந்த வெடிகுண்டு வெடித்துள்ளது. குண்டுவெடிப்பில் அந்தப் பகுதியே குலுங்கியது. கட்டடத்தின் கூரை இடிந்து விழுந்தது. கூட்டத்தில் பங்கேற்றவர்கள், அலறினர். யாராலும், எங்கும் ஓட முடியாதபடி இடிபாடுகளுக்குள் சிக்கிக்கொண்டனர்.

இதில் அமைச்சர் சுஜா கான்ஜாதா உட்பட 10 பேர் உயிரிழந்ததாகவும், சுமார் 25 பேர் இடிபாடுகளுக்குள் சிக்கி படுகாயம் அடைந்ததாகவும் முதற் கட்ட தகவல்கள் வெளியாகின. உடனடியாக மீட்புப் படையினர் விரைந்து சென்று மீட்புப்பணிகளில் ஈடுபட்டனர். இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்டு வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர். இதற்கிடையே அலுவலகத்தில் இரண்டு தீவிரவாதிகள் தற்கொலை வெடிகுண்டு தாக்குதல் நடத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்விவகாரம் தொடர்பாக பஞ்சாப் மாகாண அதிகாரி பேசுகையில், நேற்று முன்தினம் நடத்தப்பட்ட தாக்குதலில் பலியானோர் எண்ணிக்கையானது 20 ஆக உயர்ந்துள்ளது. காயமடைந்த 17 பேர் பல்வேறு வைத்தியசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று கூறியுள்ளார். இன்னும் மீட்பு பணிகள் நடைபெற்று வருகின்றன என்றும் மேலும் சிலர் உள்ளே சிக்கியிருக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தீவிரவாதிகளில் ஒருவர் அலுவலகத்தின் வாயில் பகுதியிலும், மற்றையவர் உள்ளேயும் குணடை வெடிக்க செய்துள்ளனர். (3-7)

# காணாமற்போன விமானம் மலையில் மோதி விபத்து

## 54 பயணிகளும் இறந்திருக்கலாம் என அச்சம்



இந்தோனேசியாவில் இருந்து 54 பேருடன் புறப்பட்ட பயணிகள் விமானம் மலையில் மோதியது. இதில் அந்த விமானத்தில் பயணம் செய்த அனைவரும் உயிரிழந்திருக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

இந்தோனேசியாவின் பப்புவா மாகாண தலைநகர் ஜெயபுராவில் இருந்து ஓக்சிபில் என்ற நகருக்கு தனியார் பயணிகள் விமானம் நேற்று முன்தினம் பிற்பகல் 2.22 மணிக்குப் புறப்பட்டது. இதில் 49 பயணிகளும் விமானி உட்பட 5 ஊழியர்களும் இருந்தனர்.

இந்த விமானம் 3.16 மணிக்கு ஓக்சிபில் நகரில் தரையிறங்க வேண்டும். ஆனால் 2.55 மணி அளவில் ராடரில் இருந்து விமானம் திடீரென மாயமானது. இதைத் தொடர்ந்து விமானத்தை தேடும் பணி முடுக்கி விடப்பட்டது.

உள்ளூர் கிராம மக்கள் அளித்த தகவலின்படி பின்டாங் மலைப்பகுதியில் இந்தோனேசிய போர் விமானங்கள் தேடுதல் பணியில் ஈடுபட்டன. சில மணி நேர தேடுதல் வேட்டையில் அடர்ந்த வனப்பகுதியில் விமானம் நொறுங்கி கிடப்பது தெரியவந்தது.

இதுகுறித்து அந்த நாட்டு விமானப் போக்குவரத்து துறை அதிகாரிகள் கூறுகையில், பயணிகள் விமானம் மலையில் மோதி நொறுங்கியுள்ளது. அதில் பயணம் செய்த யாரும் உயிர் பிழைத்திருக்க வாய்ப்பில்லை என்றே கருதுகிறோம். விபத்து நேரிட்ட பகுதியை சென்றடைய தீவிர முயற்சி மேற்கொண்டு வருகிறோம். விமானத்தின் கறுப்பு பெட்டியை கண்டுபிடித்த பின்னரே முழுவிபரங்கள் தெரியவரும் என்று தெரிவித்தனர்.

மோசமான வானிலை நிலவுவதாலும் இரவு நேரம் என்பதாலும் விமானம் விழுந்த வனப் பகுதிக்கு மீட்புப் படையினர் உடனடியாக செல்ல முடியவில்லை. திங்கட் கிழமை காலைதான் மீட்புப் பணிகள் தொடங்கும் என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. விபத்துக்குள்ளான தனியார் விமானம் டிரைகானா ஏர் நிறுவனத்தைச் சேர்ந்தது ஆகும். இந்த நிறுவனம் சர்வதேச தர விதிகளை பூர்த்தி செய்யாததால் கடந்த 2007-ஆம் ஆண்டு முதல் ஐரோப்பாவில் விமான சேவைகளை இயக்க தடை விதிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (3-7)

# எகிப்தின் முன்னாள் ஜனாதிபதியின் தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு

எகிப்தின் முன்னாள் ஜனாதிபதி மொஹமட் முர்சி மீது விதிக்கப்பட்டிருக்கும் மரண தண்டனை மற்றும் சிறைத் தண்டனைக்கு எதிராக அவரது சட்டத்தரணிகள் மேன்முறையீடு செய்துள்ளனர்.

கடந்த 2013 ஆம் ஆண்டு இராணுவ சதிப்புரட்சி மூலம் பதவி கவிழ்க்கப்பட்ட முர்சிக்கு இந்த ஆண்டு ஜூன் மாதம் மரண தண்டனை விதிக்கப்பட்டது.

சிறையில் இருந்து தப்பித்ததாகவும் 2011 இல் முன்னாள் ஜனாதிபதி ஹோஸ்னி முபாரக்கிற்கு எதிராக மக்கள் ஆர்ப்பாட்டத்தின் போது வெளிநாட்டு ஆயுதக் குழுக்களுடன் இணைந்து செயற்பட்டதாகவும் குற்றம் சுமத்தப்பட்டே முர்சிக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

வெளிநாட்டு ஆயுதக்குழுக்களுக்காக உளவு பார்த்ததாக மற்றொரு குற்றச்சாட்டில் முர்சிக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

ஹோஸ்னி முபாரக்கிற்கு பின்னர் எகிப்தில் முதல் முறை ஜனநாயக வழியில் ஜனாதிபதியாக தெரிவான முர்சி சரியாக ஓர் ஆண்டிலேயே பதவி கவிழ்க்கப்பட்டார்.

"முர்சி உட்பட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கும் கைதிகளுக்காக மேன்முறையீடு செய்தோம்" என்று முர்சி சார்பில் நியமிக்கப்பட்டிருக்கும் சட்ட பிரதிநிதியான அப்துல் முனைம் அப்துல் மக்சூத் குறிப்பிட்டுள்ளார். முர்சி மீதான இரு வழக்குகளிலும் போதுமான ஆதாரம் இல்லை என்ற அடிப்படையிலேயே மேன்முறையீடு செய்யப்படுவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

எனினும் முர்சி தன் மீதான நீதிமன்ற தீர்ப்புகளைத் தான் ஏற்கப்போவதில்லை என்று தெரிவித்துள்ளதுடன் தானே நாட்டின் சட்டபூர்வ ஜனாதிபதி என்றும் வலியுறுத்தி வருகிறார். (3-7)

# சோடியம் சயனைட் இரசாயனமே சீன வெடி விபத்துக்குக் காரணம்

## சீன இராணுவம் தகவல்

சீனாவில் பயங்கர வெடி விபத்து ஏற்பட்ட இரசாயன கிடங்கில் சட்டவிரோதமாக நூற்றுக்கணக்கான தொன் சோடியம் சயனைட் சேமிக்கப்பட்டிருந்தது தெரியவந்துள்ளது.

சீன நாட்டின் டியாஜின் நகரில் அமைந்துள்ள துறைமுகத்தை ஒட்டியுள்ள இரசாயன கிடங்கு ஒன்றில் கடந்த 12 ஆம் திகதி இரண்டு பயங்கர வெடி விபத்துகள் ஏற்பட்டன.

இதில் பொதுமக்கள், ஊழியர்கள், தீயணைப்பு வீரர்கள் என 112 பேர் சிக்கி உயிரிழந்தனர், மேலும் 722 பேர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களில் 58 பேரின் உடல்நிலை கவலைக்கிடமாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் வெடிவிபத்து ஏற்பட்ட சேமிப்பு கிடங்கில் நூற்றுக்கணக்கான தொன் சோடியம் சயனைட் என்னும் கொடிய விஷ இரசாயனம் சேமிக்கப்பட்டிருந்தது தற்போது தெரியவந்துள்ளது.

இந்த சோடியம் சயனைட் இரசாயனம் கலந்த நச்சுக்காற்றை சுவாசித்தால் அல்லது உட்கொண்டால் அது ஒட்சிசன் செயற்பாட்டை முடக்கி மரணத்தை ஏற்படுத்தும்.

வெடிவிபத்து நடைபெற்ற பகுதியில் தொன் கணக்கில் சேமிக்கப்பட்டிருந்த சயனைட் இரசாயனத்தில 70 சதவிகிதமும் சட்டத்திற்குபுறம்பானது என்ற தகவலை அந்நாட்டு இராணுவமும் உறுதி செய்துள்ளது.

மேலும் 217 பேரைக் கொண்ட இரசாயனம் மற்றும் அணு வல்லுநரகள் குழு ஒன்றும் சம்பவ இடத்திற்கு விரைந்துள்ளது. சீன ஊடகங்களின் தகவலின்படி 700 தொன் சோடியம் சயனைட் இருக்கலாம் என தெரியவந்துள்ளது. (3-7)

# நேபாளத்தில் வேலைநிறுத்தம் நாடெங்கும் இயல்புநிலை பாதிப்பு

நேபாளத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய அரசியல் சாசனத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து, 30 அரசியல்கட்சிகள் விடுத்த பொது வேலைநிறுத்த அழைப்பு காரணமாக நாடு தழுவிய அளவில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த அரசியல் சாசன சட்ட மூலத்தை சட்டமாக்கும் வகையில் ஆதரவு கிடைக்குமாயின், அது முதல் முறையாக நேபாளத்தில் கூட்டாட்சிக் குடியரசு முறை உருவாக வழி வகுக்கும்.

ஆனால் பல நூற்றாண்டுகளாக ஒதுக்கிவைக்கப்பட்டிருந்த சாதிக் குழுக்களையும், டசின் கணக்கான பழங்குடி சமூகங்களையும் இந்த யாப்பு மேலும் புறந்தள்ளுகிறது என்று போராட்டக்காரர்கள் கூறுகின்றனர்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தை நடைமுறைப்படுத்த நிர்ப்பந்தித்தார்கள் என்று கூறி 60 இற்கும் அதிகமானவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாடு முழுவதும் பூர்வீககுடி மக்களும் இதர சிறுபான்மையினரும் இதேபோன்ற போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். (3-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கா அடித்த ஓட்டங்களே அவரை பேச வைக்கும்



இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரரான குமார் சங்கக்கார, கொழும்பு பி.சாரா ஓவல் மைதானத்தில் நாளை மறுதினம் 20ஆம் திகதி நடைபெற இருக்கும் இந்தியாவுக்கு எதிரான 2 ஆவது டெஸ்ட் போட்டியுடன் சர்வதேச போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுகிறார்.

இவரது ஓய்வு குறித்து இந்திய அணியின் தலைவர் விராட் ஹோலி கூறுகையில்,

"இலங்கை அணியின் மிகச் சிறப்பு வாய்ந்த வீரர் சங்கக்கார. ஏராளமான இடது கை துடுப்பாட்ட வீரர்கள் அவரது ஆட்ட வழிமுறைகளை பார்த்து விளையாட்டை கற்றுக்கொள்கிறார்கள். சிறந்த ஆட்டநுணுக்கத்துடன் சகல ஆடுகளங்களிலும் சிறப்பாக விளையாடியுள்ளார். அவருடைய ஓட்டங்களே அவரைப் பற்றி பேசவைக்கும்.

சங்கக்கார மிகச்சிறந்த அன்பான மனிதர். மைதானத்துக்கு உள்ளேயும், வெளியேயும் அவருடன் நான் பேசி பழகியிருக்கிறேன். எங்களுக்கு எதிராக அவரது கடைசி போட்டிகள் அமைந்ததால் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இது எங்களுக்கு ஒரு சிறப்பான நிகழ்வு.

சில பிரபலங்கள் போட்டியில் இருந்து ஓய்வு பெறும் போது இளம் வீரர்கள் அவர்களுக்கு மரியாதை கொடுப்பார்கள். சங்கக்காரவுக்கு கடந்த சில டெஸ்ட் போட்டிகளில் மரியாதை கொடுத்து வருகிறார்கள். இந்தியாவுக்கு எதிராக அவர் மிகச் சிறப்பான வகையில் ஓட்டங்கள் குவிக்கவில்லை. ஆனாலும், ஓய்வுக்கு பிறகு அவரது வாழ்க்கை சிறப்பாக அமைய உண்மையிலேயே நான் வாழ்த்துகிறேன்" என்றார். (க)

# ஸ்மித் தொடர்ந்து 3ஆவது இடத்தில் களம் இறங்க வேண்டும்; பொன்ரிங் வலியுறுத்தல்



அவுஸ்திரேலியா கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரரும் தலைசிறந்த அணித் தலைவருமான ரிக்கி பொன்ரிங், அவுஸ்திரேலிய அணியின் புதிய தலைவராக பொறுப்பேற்க இருக்கும் ஸ்டீவ் ஸ்மித் தொடர்ந்து 3ஆவது இடத்தில் களம் இறங்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

மைக்கல் கிளார்க் டெஸ்ட் போட்டியில் இருந்து ஓய்வு பெற்றுள்ளதால் வர இருக்கின்ற பங்களாதேஷ் தொடரில் அணியின் நலன் கருதி 4ஆவது இடத்தில் களம் இறங்க ஸ்டீவ் சுமித் முடிவு எடுத்துள்ளார்.

இவரது இந்த முடிவு குறித்து ரிக்கி பொன்ரிங் கூறும்போது,

"ஸ்டீவ் ஸ்மித் கண்டிப்பாக 3ஆவது இடத்தில் களம் இறங்கி தனது பணியைச் செய்வார் என்று நான் உறுதியாக இருக்கிறேன். இந்த ஆஷஸ் தொடரில் மட்டும்தான் 3ஆவது இடத்தில் களம் இறங்குவார். இது தொடர்ந்து நீடிக்காது என்று சில பேர் கூறுவதை நான் அறிவேன். ஆனால், ஸ்மித் 3ஆவது இடத்தில் தான் கட்டாயம் களம் இறங்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன்" என்றார். (க)

# ரோஜர்ஸ் டென்னிஸ் போட்டி பென்சிக் சம்பியன்

ரோஜர்ஸ் கோப்பை டென்னிஸ் போட்டி கனடாவின் ரெரன்ரோவில் ஓகஸ்ட் 08 - 16 வரை நடைபெற்றது.

இதன் பெண்களுக்கான ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டி நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.

இதில் உலகத் தரவரிசையில் மூன்றாம் இடத்தில் இருக்கும் ரோமானியாவைச் சேர்ந்த சிமோனா ஹாலேப், சுவிட்சர்லாந்தின் 18 வயது இளம் வீராங்கனை பெலிண்டா பென்சிக்கை எதிர்கொண்டார்.

பென்சிக் அரையிறுதிப் போட்டியில் நம்பர் ஒன் இடத்தில் இருக்கும் செரீனா வில்லியம்சை அதிர்ச்சி தோல்வியடையச் செய்தார். இதனால் இந்த ஆட்டம் மீது எதிர்பார்ப்பு அதிகரித்தது.

எதிர்பார்த்தபடியே ஹாலேப்புக்கு பென்சிக் கடும் நெருக்கடி கொடுத்தார். இதனால் இரண்டு பேரும் மாறிமாறி புள்ளிகள் பெற்றனர். ஹாலேப்புக்கு போட்டியாக பென்சிக் விளையாடியதால் முதல் செட் 'டை பிரேக்கர்' வரை சென்றது. இறுதியில் பென்சிக் 7-6 (7/5) என்ற கணக்கில் முதல் செட்டை கைப்பற்றினார்.

2-வது செட்டிலும் ஹாலெப்புக்கு கென்சிக் கடும் நெருக்கடி கொடுத்தார். இதனால் இந்த செட்டும் 'ரை பிரேக்கர்' வரை சென்றது. ஆனால் அனுபவ வீராங்கனை ஹாலேப் இந்த செட்டை 7-6 (7/4) எனக் கைப்பற்றினார்.





இதனால், கோப்பையை வெல்வது யார் என்பதை நிர்ணயிக்கும் 3-வது செட்டில் ஹாலேப்பை பின்னுக்குத் தள்ளி பென்சிக் முன்னேறிக்கொண்டிருந்தார். அந்த செட்டில் 3-0 என பென்சிக் முன்னிலையில் இருக்கும்போது ஹாலேப் போட்டியில் இருந்து விலகினார்.

இதனால் பென்சிக், ரோஜர்ஸ் கோப்பையை வென்று அசத்தினார். 18 வயது இளம் வீராங்கனையான பென்சிக் உலகத் தரவரிசையில் முதல் இடத்தில் இருக்கும் செரீனாவையும், 3ஆவது இடத்தில் இருக்கும் ஹாலேப்பையும் வீழ்த்தி ரோஜர்ஸ் கோப்பையை கைப்பற்றி அனைவரையும் ஆச்சரியத்திற்குள்ளாக்கினார்.

இந்த வெற்றியின் மூலம் அவர் உலகத் தரவரிசையில் 8 இடங்கள் முன்னேறி 12 ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார். (க)

# இலங்கை தொடரிலிருந்து ஷிகர் தவான் விலகல்



இலங்கை அணிக்கு எதிரான எஞ்சிய டெஸ்ட் போட்டிகளில் இருந்து இந்திய அணியின் தொடக்க வீரரான ஷிகர் தவான் விலகியுள்ளார்.

இலங்கை அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் வெற்றி பெற வேண்டிய நிலையில், இந்திய அணி 63 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

இதன் முதல் இன்னிங்சில் சிறப்பாக விளையாடிய தவான் 134 ஓட்டங்கள் அடித்து அசத்தினார். முன்னதாக களத்தடுப்பில் ஈடுபடும் போது அவருக்கு உள்ளங்கையில் காயம் ஏற்பட்டது.

காயத்தை பொருட்படுத்தாமல் சிறப்பாக விளையாடி சதம் அடித்தார். 2ஆவது இன்னிங்சில் 28 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தார்.

இந்நிலையில் காயம் காரணமாக எஞ்சிய இரண்டு போட்டிகளில் இருந்தும் விலகுவதாக தவான் தெரிவித்துள்ளார்.

ஏற்கெனவே காயம் காரணமாக முரளி விஜய் முதல் போட்டியில் விளையாடவில்லை.

தற்போது காயத்தில் இருந்து மீண்டுள்ள முரளி விஜய் கொழும்பில் நடக்கும் 2ஆவது டெஸ்ட் போட்டியில் விளையாட வாய்ப்பிருக்கிறது.

ஒருவேளை அவர் பங்கேற்கவில்லை என்றால் தொடக்க வீரராக யாரை களமிறங்க வைக்கலாம் என்பது தொடர்பான பிரச்சினை அணித்தலைவர் விராட் ஹோலிக்கு ஏற்படும். (க)

## வாக்குச் சீட்டை...

பௌத்த கனிஷ்ட வித்தியாலய வாக்களிப்பு நிலையத்தில் வைத்து, லுனுவில பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயது இளைஞர் ஒருவரையே கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட நபர் வாக்கைப் பதிவு செய்ய ஒதுக்கியுள்ள கார்ட்போர்ட் மறைவிடத்தில் வைத்து வாக்குச் சீட்டில் தனது வாக்கை பதிவு செய்த பின்னர் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடந்துள்ளார். வாக்களிப்பு நிலைய அதிகாரிகள் குறித்த நபரை அவதானித்தபோது, அவர் வாக்குச் சீட்டை புகைப்படம் எடுப்பதை கண்டுள்ளனர். இதனை அடுத்து அந்த நபர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். சந்தேக நபருக்கு வாக்களிக்க இடமளிக்கப்பட்டதாகவும், வாக்களிப்பு நிலையத்தில் சட்டவிரோத செயலை செய்தமைக்காக கைது செய்யப்பட்டதாகவும் தெரிவித்த பொலிஸார், சந்தேக நபரை நீதிமன்றில் ஆஜர் செய்யவுள்ளதாக தெரிவித்தனர். (எ-11)

## தேர்தல் குறித்து...

226 முறைப்பாடுகள்கிடைத்துள்ளன. இவை பாரிய சம்பவங்கள் குறித்த முறைப்பாடுகள் இல்லை. மக்கள் வெற்றியையும் தோல்வியும் சமமாக எடுக்கவேண்டும். இறுதி முடிவுகள் வெளியான பின்னர் எவரையும் துன்புறுத்தகூடாது என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஜனநாயக முறைப்படி, நீதியாகவும் அமைதியாகவும் நடைபெற்ற . முதலாவது தேர்தல் இதுவென, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு பல்கலைக்கழக காரியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடியில் தமது வாக்கினை பதிவுசெய்த பிரதமர் ரணில், அதனையடுத்து செய்தியாளர்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே மேறகண்டவாறு தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற தேர்தலில் தமது கட்சி அறுதி பெரும்பான்மையை பெற்று வெற்றி பெற்று புதிய நாடு ஒன்று உருவாக்கப்படுமென தெரிவித்த ரணில், கடந்த ஜனவரி 8 ஆம் திகதி கிடைத்த மக்கள் ஆணையை ஜனாதிபதி மைத்திரியுடன் இணைந்து தொடர்ந்து முன்னெடுத்து செல்வோம் என தெரிவித்தார்.

அத்துடன் கடந்த தேர்தல்களோடு ஒப்பிடுகையில் இம்முறை சுயாதீனமானதும் அமைதியானதுமான தேர்தலொன்று இடம் பெற் றுள்ளதாகவும் திருப்திகரமான சூழலை அவதானிக்க முடிவதாகவும தேர்தல்கள் கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான தேசிய அமையு, பஃவ்ரல் அமைப்பு உள்ளிட்ட தேர்தல்கள் கண்காணிப்பு குழுவினருடன் இடம்பெற்ற மாநாட்டிலேயே அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

தேர்தல்கள் திணைக்களம் மற்றும் பொலிஸ் திணைக்களம் போன்றன தமது செயற்பாடுகளை எவ்வித தடையும் இன்றி முன் னெடுப்பதை காணமுடிகிறது எனவும தேர்தல்கள் கண்காணிப்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (எ-11)

## வடக்கில் த.தே.கூ...

இதில் முதலில் தபால் மூல வாக்குகள் எண்ணும் பணிகள் ஆரம்பமாகின இன்று அதிகாலை வரை எண்ணப்பட்ட தபால்மூல வாக்குகளின்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிகப்படியான வாக்குகளைப் பெற்று முன்னிலையில் உள்ளது.

சுமார் 60 வீதமான வாக்குகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு 23 வீதவாக்குகளும், ஈ.பி.டி.பிக்கு 7 வீதவாக்குகளும் கிடைக்கப் பெற்றுள்ளதாக உத்தியோகபூர்வமற்ற தகவல்கள் தெரிவித்தன.

உத்தியோக பூர்வ தபால்மூல வாக்களிப்பு முடிவுகள் இன்று காலை வெளியிடப்படும். அத்துடன் மற்றைய வாக்குகள் எண்ணும் பணிகள் முடிவடைந்ததும் சகல முடிவுகளும் இன்று மாலை வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை தெற்குப் பகுதியில் தபால் மூலவாக்களிப்பின்படி ஐக்கிய தேசிய கட்சி முன்னிலை வகிக்கின்றது.

ஐக்கிய தேசியக் கட்சி 60 வீதம் வரையான வாக்குகளைப் பெற்றுள்ளது. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அடுத்தபடியாகவுள்ளது.

இன்று மாலைக்கிடையில் உத்தியோக பூர்வமான முடிவுகள் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இன்று காலை தொகுதி வாரியான வாக்குப் பதிவுகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும்'என யாழ்.தெரிவத்தாட்சி அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இச் செய்தி அச்சுக்குப் போகும் வரை யாழ்ப்பாணத்துக்கான உத்தியோக பூர்வ முடிவுகள் எவையும் வெளியிடப்பட்வில்லை. (எ-4,11,12)

## சி.சு.க மத்திய...

பதவிகளில் இருந்து நீக்கப்பட்டவர்களில், நாட்டின் முன்னாள் பிரதமரும் தி.மு.ஜயரட்ண, மூத்த அமைச்சராக இருந்த ஜனக பண்டார தென்னக்கோன் போன்றோரும், ஏற்கெனவே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்டிருந்த சுஷீல் பிரேமஜயந்த, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச செயலாளராக இருந்த அனுரபிரிய தர்ஷன யாப்பா ஆகியோரும் அடங்குவதாக தெரிகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்குள், தற்போதைய தலைவரும் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேனவுக்கும், முன்னாள் தலைவரும் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் நடந்துவரும் அதிகாரப் போட்டியின் மற்றும் ஒரு காய்நகர்த்தலாகவே மைத்திரியின் இந்த செயல் பார்க்கப்படுவதாக அரசியல் விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர். (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதிச் சந்தர்ப்பம்!



பட்டத்துடன் தொழில் அனுபவம் உள்ள எவரும்
கனடாவில் குடும்பத்துடன் குடியேறும் அரிய வாய்ப்பு

150க்கு மேற்பட்ட தொழில் நிலைகளுக்கு
180,000*க்கு மேற்பட்ட வெற்றிடங்கள்

கனேடிய அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் மூலம்புள்ளி அடிப்படையில் உங்கள் விண்ணப்ப தகைமையை மதிப்பீடு செய்து, நீங்களே நேரடியாக கனேடிய முகவர் ஊடாக விண்ணப்பம் செய்யக்கூடிய
100% பாதுகாப்பான ஏற்பாடு
இதுவரை 6,851 பேர் நிரந்தர குடியுரிமை விசா பெற்றனர்

FREE Assessment Send your CV to info@sikaram.lk
ஏற்கனவே விண்ணப்பித்து பயனடைந்தவர்கள் பற்றிய மேலதிக விபரங்களை அறிந்தகொள்ள
www.sikaram.lk

(C-1834)
SIKARAM Education Abroad Work, Migration & Visa Solutions
Sikaram (Pvt) Ltd., 275-2/1 மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம் (வைத்தியசாலை பின்புறம்)
Tel: 0777 32 4004
021 222 00 11


# அமைதியாக நடைபெற்ற...

நாடாளுமன்ற தேர்தலுக்கான வாக்களிப்பு நேற்றைய தினம காலை 7 மணிக்கு ஆரம்பமாகி மா லை 4 மணிக்கு நிறைவடைந்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கின்றார்.

தொடர்ந்தும் அவர் குறிப்பிடுகையில், யாழ்.மாவட்டத்தில் சுமுகமான முறையில் தேர்தலுக்கான வாக்களிப்பு பணிகள் நடைபெற்று முடிந்திருக்கின்றன.

வாக்களிப்பின் போது எவ்விதமான அசம்பாவிதங்கள் மற்றும் வன்முறை சம்பவங்கள் இடம்பெறாத நிலையில் மக்கள் சுதந்திரமாக வாக்களித்திருக்கின்றனர். யாழ்.மாவட்டத்தில் 60 வீதமான வாக்குப் பதிவு இடம்பெற்றிருக கின்றது. இந் நிலையில்வாக்களிப்பு நிறைவடைந்து வாக்குப் பெட்டிகள் கொண்டு வரப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

இதேவேளை நாடாளுமன்ற தேர்தலுக்கான வாக்களிப்பு நேற்றைய தினம் காலை 7 மணிக்கு ஆரம்பமான நிலையில் 526 வாக்களிப்பு நிலையங்களிலும் மக்கள் எவ்விதமான இடர்பாடுகளுமின்றி காலை தொடக்கம் வாக்களித்துக்கொண்டிருந்தமையினை காண முடிந்தது. வாக்களிப்பு நிலையங்கள அனைத்திலும் சர்வதேச மற்றும் உள்ளூர் தேர்தல் மற்றும் தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான காண்காணிப்பாளர்கள் கண்காணிப்பு பணிகளை மேற்கொண்டிருந்தமையினை காண முடிந்தது. இந்நிலையில் அனைத்து பகுதிகளிலும் வன்முறைகள் எவையுமில்லாமல் வாக்களிப்பு சுமுகமான முறையில் இடம்பெற்றது.

மேலும் தீவகத்தில் சர்வதேச கண்காணிப்பாளர்கள் அதிகளவில் கண்காணிப்பு பணிகளை மேற்கொண்டிருந்தனர். இதேவேளை தேர்தலில் போட்டியிடுகின்ற முக்கிய கட்சிகளின் வேட்பாளர்கள் நேற்றைய தினம் காலையில் தங்கள் வாக்களிப்பை மேற் கொண்டனர். குறிப்பாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைமை வேடபாளர் மாவை சேனாதிராஜா வலி.வடக்கு கொல்லன் கலட்டி சைவ தமிழ் வித்தியாசாலையிலும், தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் யாழ்.சென் ஜேம்ஸ் வித்தியாலயத்திலும், ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் தலைமை வேட்பாளர் டக்ளஸ் தேவானந்தா யாழ்.நாவலர் மண்டபத்திலும் வாக்களிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

இதேவேளைநேற்றையதினம் வாக்களிப்பு ஆரம்பமாகி சில மணி நேரங்களில் வாக்களிப்பு நிலையங்களை அண்மித்த பகுதிகள் மற்றும் வாக்களிப்பு நிலையங்களின் வாசல்களில் தமிழ் தேசிய கூட்டமைப்பு மற்றும் தேசிய கட்சிகளின் சிறிய துண்டு பிரசுரங்கள் வீதிகளில் சரமாரியாக வீசப்பட்டிருந்ததை காண முடிந்தது.

இந் நிலையில் அவை தொடர்பாக அறிந்த பொலிஸார் உடனடியாகவே அந்தப்பகுதிக்கு வந்து அந்த துண்டுப்பிரசுரங்களை அங்கிருந்து அகற்றியிருந்ததுடன், சகல இடங்களிலும் பொலிஸார் சட்டத்தை இறுக்கமாக அமுல் படுத்தியதுடன் தேர்தல் கண்காணிப்பாளர்களும் முறைகேடுகள் இல்லாத சுமுகமான தேர்தல் நடை பெறுவதை உறுதிப் படுத்திய நிலையில், யாழ்குடாநாட்டில் வழக்கத்துக்குமாறாக சுமுகமானதும், மக்கள் சுதந்திரமாக வாக்களிக்க கூடியதுமான தேர்தலாக இம் முறை நாடாளு மன்ற தேர்தல் இடம்பெற்றமையினை அவதானிக்க முடிந்தது. (எ-4)


மீண்டும் O/L உடன்
UK, Australia, New Zealand, Switzerland, Canada, France, Germany, Singapore, Malaysia
மாதம் 3 இலட்சத்துக்கு மேல் உழைக்கக்கூடிய
Business & Hotel Management
3ஆம் அணி



யாழ்ப்பாணத்திலேயே ஆரம்பித்து 6 மாதங்களில் விரும்பிய நாடு செல்லும் விசா உத்தரவாதம்!
SEGi | B.H.M.S. | nmit | William Angliss Institute
MALAYSIA | SWITZERLAND | NEW ZEALAND | AUSTRALIA
அனுமதிகளுக்கு 077 3616 798 021 222 0011
கற்கைநெறி ஆரம்பம் 27-08-2015 வியாழன் 10 மணி
அடிப்படையிலிருந்து IELTS வரையான விசேட ஆங்கிலக் கற்கைநெறி
வெளிநாட்டு தூதரக விசா நேர்முகத் தேர்வுக்கான தயார்ப்படுத்தல் பயிற்சி
பொருத்தமான நாடு, பல்கலைக்கழகம், தொழில் தெரிவுக்கான விரிவான வழிகாட்டல் ஆலோசனைகள்
கற்கைநெறிக் காலத்திலேயே விரும்பிய நாடு செல்வதற்கான விசா ஒழுங்கு
பல்கலைக்கழக கட்டணம் மற்றும் வங்கி வைப்புக்கான வங்கிக் கடன் ஏற்பாடுகள்
வேறு துறைகளில் கற்க விரும்பும் மாணவர்களுக்கும் பகுதி நேர வேலைவாய்ப்புக்கு உதவும்
வெளிநாடு செல்ல விரும்பாதோருக்கு யாழ். கொழும்பு முன்னணி ஹொட்டேல்களில் வேலைவாய்ப்பு ஏற்பாடு செய்து தருகிறோம்.
(C-1834)
SIKARAM Any Visa to Any Country
Sikaram (Pvt) Ltd. இல.275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.(வைத்தியசாலை பின்புறம்)



யாழ்ப்பாணத்தில் முதல் முறையாக
JANA Digital Printers
Photo Quality Printing
High Quality
டிஜிற்றல் பிறிண்டிங்



Original Japan Ink
(WorldColor Digital Technology)
பந்தல் பிறிண்டிங்
பனர் பிறிண்டிங்
விளம்பரப் பதாகைகள்
ஸ்ரிக்கர்கள்
லைட் பதாகைகள்
Light Board
1 Side - 450/=
2 Side - 500/=
Name Board
1 Side - 210/=
2 Side - 350/=
(C-1829)
Sticker Print 70/=
Backlit Print 70/=
3 வருட உத்தரவாதம் 35/= முதல் 50/= வரை
அரச நிறுவனங்களுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்
டிசைனிங் முற்றிலும் இலவசம்
மானிப்பாய் வீதி, ஆறுகால் மடம்.
077 073 1654



யாழ் மதர் கெயார்
Dental Unit
Reg.No.#PV85754



நவீன உபகரணங்களின் உதவியுடன் விசேட வைத்திய நிபுணர்களினால் பல்லுக்கு கிளிப் (Clip) போடுதல், நிரந்தர பல்கட்டுதல் உட்பட மற்றும் பல உயர்தர சேவைகள் தற்போது யாழ் நகரில்



பல், வாய், வைத்திய சேவை (விசேடமாக வேரடைப்பு,பல் வெண்மையாக்கல்)
பல், வாய், முகம் அறுவைச் சிகிச்சை (அண்ணப்பிளவு மற்றும் வாய், முக சீரமைப்பு)
பல், வாய், முகம் சீரமைப்பு (ஒழுங்கற்ற, மிதப்புப் பற்கள் சீராக்கல்)
514/18, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (யாழ்.போதனா வைத்தியசாலை முன்பாக)
(C-1826)
Tel : 021 221 9595, 021 221 9797, Mob : 077 220 2769



நிலப்பதிப்புக் கற்களின் சிறந்த தெரிவுகளுக்கு .....





அழகிய பல்வேறு வடிவமைப்புக்களைக்கொண்ட
நிலப்பதிப்புக் கற்களை யாழ், வவுனியாவிலுள்ள
காட்சியறைகளில் பார்வையிடலாம்
(C-1822)
பிரணவன் என்ரபிறைசஸ்
இல.635, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
077-0256640
எங்கும் இல்லாத புதிய வடிவமைப்புக்களை கொண்ட தூக்கணங்களை பெற்றுக்கொள்ளலாம்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.08.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.